1957 சென்னை விலை 6 அணா

Best copy available



நாகரிகமான தோற்ற
நவீனமான தயாரிப்பு
பல நவீன இயந்திரங்கள் புயல் வேகத்தில் உற்பத்தி செய்யும் மில் துணிகளின் வியாபாரத்தையே மந்த மடையச் செய்து சவால்விடும் வகையில், மக்களில் ஒரு சாரார் எப்போதும் கைத்தறி நெசவுகளையே விடாப்பிடியாக ஆதரித்து வந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம்— தொழில் நுட்பமும், கைத்தறி நெசவில் அநுபவமும் உடையவர்களாக, நவீனமும் நாகரிகமும் வாய்ந்த தபால் பெட்டி மார்க் கைத்தறி கைலிகளை அதன உற்பத்தியாளர்கள் என்றும் மங்காத தரத்துடன் தயாரித்துக கொடுக்கிறார்கள்
நீடித்த உழைப்பும், மங்காத சாயமும் கொண்ட தபால் பெட்டி மார்க் கைத்தறி கைலிகளை ஆதரிக்க, மக்களுக்குத் தனியாகச் சொல்லவும் வேண்டுமோ ?
தபால் பெட்டி மார்
கைத்தறி கைலிகள்
★ M.A. NAINA MOHAMED
INDIAN HANDLOOM
தபால்
LETTER BOX
REGD TRADE MARK
★ Post Box No. 1878 Ma
M.A. நெய்னா முகம்மத் & கோ
76. லிங்கி

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

மலர் 9	சென்னை, மார்ச் 1957 ஹிஜ்ரி 1376, ஷஅபான்	இதழ் 9

ன்புள்ள ஆசிரியருக்கு		...	3
தர்தலுக்குப் பின்	தலையங்கம்	...	4
ரசொலி		...	7
ஸ்லாமியக் காதைகள்	"நூரி"	...	10
ாயகம் அளித்த நகைச்சுவை விருந்து !	"அஷ்ரப்"	...	17
மது உலகம்	"ஜேயெம்"	...	20
கிப்தின் முன்னாள் மன்னர் பாருக்	எம். கே. ஜமான்	...	31
ன்புப் பரிசு	ஜே. எம். கமாலுத்தீன்	...	35
மியா-யெ-ஸஆதத்	அ. அப்துர் ரஹீம்	...	42
ான் அறிந்த இஸ்லாம்	எஸ். சுந்தரமூர்த்தி	...	46
து வாழ்வு	(தொடர் கதை) 'எஸ்கேஜி'	...	50
ருகின்றோம் வாழ்வரசி !	(கவிதை) எஸ். ஓ. அபுல் ஹஸன்	...	56
மாம் அலீ (ரலி)	எஸ். அப்துர் ரஹீம்	...	58
கள்வி—பதில்	"கமால்"	...	62

முஸ்லிம் முரசில் வரும் கதைகளும் அவைகளிலுள்ள பெயர்களும் யாரையும் குறிப்பிடுவனவல்ல; எல்லாம் கற்பனை.

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் உங்களுக்குத் தவறாமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு
18, ராமசாமி தெரு,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6. இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்...

விலாசம்...

இக்பால் யார்?

இது ஒரு தமிழ்த் தென்றல்!

(முஸ்லிம் முரசு வெளியீடு)

"ஜேயெம்" எழுதியது

★ கவிஞர் திலகத்தின் கவின்மிகு வாழ்க்கைச் சித்திரம்

★ கவிதையின்பம்

★ கவிஞரின் புகழ்பெற்ற 'ஜாவீது நாமா' எனும் அமர காவியத்தின் அற்புத வர்ணனை

★ இக்பாலின் புகாரும். இறைவனின் பதிலும் (ஷிக்வா, ஜவாபெ ஷிக்வா) ஈடு இணையில்லாத எடுப்பான நடையில் தென்றல்போல் தவழ்ந்து விளையாடும் தமிழில் அமைந்துள்ளன.

★ வாழ்க்கை வர்ணனைக்காக ஒரு முறை படிக்கலாம். கவிதையின்பத்துக்காக இரண்டு மூன்று முறை படிக்கலாம். புகாரையும், பதிலையும் பலமுறை படிக்கலாம். தமிழின் இனிமைக்காக எப்பொழுதும் படித்துக் கொண்டேயிருக்கலாம்!

கண்ணைப் பறிக்கும் அட்டைப் படமும் இக்பாலின் உருவப் படமும் உடைய இந் நூலின் விலை ரூ. 3—4—0. பக்கம் 230 தபால் செலவு தனி.

★

மாநபியின் மணி மொழிகள்

(முஸ்லிம் முரசு வெளியீடு)

★ மகான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் 424 பொன் மொழிகள்.

★ வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள். அகர வரிசையில் அமைக்கப் பெற்றவை

★ திருநபியவர்களின் வாழ்க்கைச்சுருக்கமும் அன்றுடவாழ்வின் படப்பிடிப்பும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அறிவுக் களஞ்சியம். கண்ணைப் பறிக்கும் அட்டைப் படம். கெட்டியான பைண்டு விலை. ரூ. 1—8—0 வி பி யில் ரூ. 2—4—0 சாதா தபாலில் பெற விரும்புவோர் முன்பணமாக ரூ 1—11—0 அனுப்பலாம்.

அன்பு நூல் நிலையம்

18, ராமசாமித் தெரு, மண்ணடி சென்னை-1

அன்புள்ள ஆசிரியருக்கு

'எஸ். கே. ஜி.' எழுதும் 'புதுவாழ்வு'—தொடர் கதை விறுவிறுப்பும், நற் பண்புகளும் பொருந்தியுள்ளது.

நத்தர் முஹம்மது,
சைகோன்.

பிப்ரவரி இதழில் 'மஹ்தி' எழுதியுள்ள 'சிங்கப்பூர் மாப்பிள்ளை'யை நான் பன்முறை படித்து இன்புற்றேன்.

காயல் செ. இ. முஹம்மது நூகு,
கண்டி.

இமியா யெ ஸஆதத்தில் 'நாவடக்கம்' என்ற தலைப்பில் வந்த விஷயம் என் இதய ஆழத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டது. அதனை எழுதும் அப்துர் ரஹீம் அவர்களுக்கு என் நன்றி.

வி. ஏ. அஹ்மது ஷா.
ஜெவர்கி, குல்பர்கா.

சிங்கப்பூர் மாப்பிள்ளை. ஒரு கெஜம் பட்டு, ஆகிய இரண்டு சிறு கதைகளும் என் இதயத்தைக் கவர்ந்துவிட்டன.

ஐ. மு. முஹம்மதலி ஜின்ஞு.
ஈரோடு.

பிப்ரவரி இதழில் இக்பாலின் கவிதையின்பமும் சிங்கப்பூர் மாப்பிள்ளையும், எஸ். மும்தாஜ் கேட்ட கேள்வியும், அதற்கு அளிக்கப்பட்டுள்ள பதிலும் என் உள்ளத்தினின்று என்றுமே மறையா.

வி. எம். ஏ முஹம்மது அலீ
இலுப்பூர்.

சிங்கப்பூர் மாப்பிள்ளை ஒரு கதையல்ல. எங்கள் சொந்த வாழ்க்கையின் திரைப் படம்!

எம். ஜமீல் மீரா, கண்டி, சிலோன்.

முஸ்லிம் முரசை நான் இடைவிடாது படித்து வருகிறேன். ஒவ்வொரு இதழும் என்னை உவகையில் ஆழ்த்துகின்றது.

எம். பி. தாஜுஷரீபா, பூவாங்கால்.

எத்தனை எத்தனையோ ஆண்களும் பெண்களும் மிருக உணர்ச்சிக்கு அடிமைகளாகி இழிவான குற்றங்கள் புரிகின்றனர். இவர்களுக்கெல்லாம் 'புதுவாழ்வு' ஒரு படிப்பினையாக அமையும்.

எம். எஸ். அப்பாஸ்.
பமுனாகொட்வே இலங்கை.

'மஹ்தி' எழுதியுள்ள சிங்கப்பூர் மாப்பிள்ளையைப் படித்தபின்பாவது கணவன் தான் போகுமிடத்திற்கு மனைவியை அழைத்துச் செல்ல பெற்றோர்கள் அனுமதி தருவார்கள் என்று நம்புகிறேன்.

எம். எஸ். எம். அலியார்
அம்மாபட்டினம்.

வெளி நாடு செல்லும் கணவன் நிலையையும் அவனைப் பிரிந்து தாயகத்தில் வாடும் துணைவியின் நிலையையும் 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' சிந்திக்கச் செய்கிறது.

எஸ். பி ஏ. வஹ்ஹாப்,
மஸ்கெலியா.

'சிங்கப்பூர் மாப்பிள்ளை' போன்ற சிறு கதைகளுக்கு மேலும் இடமளிக்க வேண்டுகிறேன்.

கே. எஸ். செய்யது முஹம்மது.
தைப்பிங்.

நீங்கள் வெளியிட்டுள்ள திருகுர்ஆன் நாட்குறிப்பு மிக்க பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இந்த குர்ஆன் பொன் மொழிகள் அடங்கிய டயரியை வெளியிட்டதற்குத் தங்களைப் பாராட்டுகின்றேன்.

ஏ. எம். ஜலால்தீன். இரவாஞ்சேரி.

முஸ்லிம் முரசு

தேர்தலுக்குப் பின்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது மக்களிடை காணப்பட்ட உற்சாகம் இப்போது நடைபெறும் பொதுத் தேர்தலில் காணோம்! அந்தப் பொதுத் தேர்தலின்போது நாடெங்கும் நூற்றுக்கு நாற்பத்தைந்து வாக்காளர்களே தங்கள் 'ஓட்'களைப் பதிவுசெய்தனர். அதைவிடக் குறைவான வாக்குகளே இப்போது நடைபெறும் தேர்தலில் பதிவாகுமென்று எதிர் பார்க்கப் படுகின்றது.

இத் தேர்தலில் மக்கள் தங்களின் வாக்குரிமையை உபயோகிப்பதில் உற்சாக மில்லாமலிருப்பது மட்டுமல்ல, தங்கள் ஓட்களை யாருக்கு அளிப்பதென்றும் அவர்களுக்கு விளங்கவில்லை. காங்கிரஸ் கட்சிக்குத் தமிழ் மக்களிடை முன்பு இருந்த செல்வாக்கு இப்பொழுது இல்லை. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே கருத்து வேற்றுமை. பிணக்கு. பூசல் எல்லாம் மலிந்து விட்டன. காமராஜ் காங்கிரஸ், கரையாளர் காங்கிரஸ் என்று காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்துவிட்டது. பூஜை வேளையில் கரடி புகுந்ததைப்போல் காங்கிரஸை ஆதரிக்க ஈ. வெ. ராவும் புறப்பட்டுவிட்டார்! இதனால் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிக்க மக்களிடை அக்கறையோ ஆர்வமோ காணப்படவில்லை. காங்கிரஸை எதிர்த்து நிற்பவர்களில் யாரை ஆதரிப்பது? இந்தக் கேள்விக்கும் சரியான பதில் கிடைப்பதில்லை. இதனால் ஒரே குழப்பம்! இறுதியில் ஓட்டுச் சாவடிக்கே போகாமல் இருந்துவிட்டவர்கள் எத்தனை ஆயிரமோ! இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்ற மனப்பான்மை மக்களிடையே தலை தூக்கி நிற்கிறது.

காங்கிரஸ் ஆட்சியாளர் எதற்காகவோ தேர்தல் தொகுதிகளைத் தாறுமாறாகப் பிரித்திருக்கிறார்கள். கிராமவாசிகள் வெகுதூரம் நடந்து

சென்று ஓட்டளிக்குமாறு வேண்டு மென்றே தேர்தல் தொகுதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின் றன. இந்த வேண்டாத மாற்றங் கள் செய்திராவிட்டால் இன்னும் அதிகமான ஓட்கள் பதிவாகியிருக் கும்; ஓரளவு வெற்றிகரமாகவும் தேர்தல் நடைபெற்றிருக்கும். தாங் கள்தான் நாட்டு மக்களுக்கு ஓட் டுரிமை வழங்கினோம் என்று பெருமையடித்துக்கொள்ளும் காங் கிரஸ் ஆட்சியாளர் ஏன் இந்த மாற்றங்கள் செய்து மக்களின் ஓட்டுகள் அதிகமாய்ப் பதிவாகா மற் செய்தனர் என்று நமக்கு விளங்கவில்லை.

இப்பொழுத் தேர்தலில் ஏழை களோ அல்லது நடுத்தர வருமான முள்ளவர்களோ அபேட்சகர் களாய் நின்று வெற்றி பெறுவது மிகக் கடினம். ராஜ்ய சட்ட சபைகளுக்கு அபேட்சகர்களாய் நிற்பவர்கள் பதினாயிரம் ரூபாய்க் குக் குறையாமல செலவு செய்ய வேண்டி யிருக்கிறது. மக்கள் சபைக்கு நிற்பவர்கள் அதைப் போல் மூன்று பங்கு பணம் செலவு செய்ய வேண்டி யுள்ளது. ஜன ஜனநாயகத் தேர்தலில மக்களின் உண்மையான பிரதிநிதிகளும் உழைப்பாளிகளும் வெற்றிபெற வாய்ப்பும் வசதியுமில்லை. ஆனல் காங்கிரஸ் கட்சியினர் எளிதில் வெற்றி பெற முடியும். அவர்கள் அதிகாரப் பதவியில் இருந்து கொண்டே தேர்தலில போட்டியிடு வதால் பணக்காரர்களின் உத வியை எளிதிற் பெற முடியும். காங் கிரஸ் கட்சியினர் ஒரே நாளில தனியொரு முதலாளியிடம் இலட் சக்கணக்கான ரூபாய் நிதி யுதவி பெறக்கூடிய வசதியுண்டு. ஆனல மற்றக் கட்சியினருக்கு இந்த வசதி இல்லை. ஆதலால இப்பொழுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின ரும் பணக்காரர்களும் வெற்றி பெறுவது எளிது; மற்றவர்கள் வெற்றி பெறுவது அரிது.

டில்லி மக்கள் சபையைப் பொறுத்த வரையில் இந்தத் தேர் தலுக்கும் இதற்கு முந்திய தேர்த லுக்கு மிடையே அதிக மாறுதல் எதுவும் இருக்கப்போவதில்லை. முன்போலவே காங்கிரஸ்தான் அங்கே ஆளுங்கட்சியாக இருக் கப்போகின்றது. எதிர்க் கட்சியில் ஒரு சிலரைத் தவிர மற்ற வர்களெல்லாம் பேசா மடந்தை களாகவே இருப்பார்கள். ஆனல் ராஜ்ய சட்ட சபைகளைப் பொறுத்தவரையில், முக்கியமாக நம் சென்னை ராஜ்ய சட்ட சபை— தமிழ்ப் பெருமக்களின் அரசியல் அரங்கம்—முன்போல் பேசா மடந்தைகளின் உல்லாச மண்டப மாக விளங்கப் போவதில்லை. ஆட்சியாளர்கள் அசந்துபோகும் வரையில் சரமாரியாக கேள்வி அம்புகளை வீசக்கூடிய எதிர்க் கட்சியினர் அங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

1952-க்கு முன்பு இருந்த சென்னை சட்ட சபையில் முஸ்லிம் லீக் உறுப்பினர் எதிர்க் கட்சியில இருந்தனர். அப்போதெல்லாம் சென்னை சட்ட சபை நிகழ்ச்சிகள் நம் கவனத்தைக் கவர்ந்த அள விற்குக் கடந்த ஐந்து வருட காலத் தில் ஒரு நாள் கூட அது நம் கவ னத்தைக்கவர்ந்ததில்லை! 1952-க்கு முன்பு இருந்த சென்னை சட்ட சபை கலகலப்பாகவே இருந்தது. அப்போது எதிர்க் கட்சியினரா யிருந்த முஸ்லிம் லீக் உறுப்பினர் கள் தாங்களும் தூங்கவில்லை, மற்ற வர்களையும் தூங்கவிடவில்லை; சரமாரியாக கேள்வி மழை பொழிந்து கொண்டிருந்தனர்; ஜனநாயகத்தின் சிறந்த பாது காவலர்களாக விளங்கினர். இடை யிடையே சிரிப்பொலியும் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனல சட்ட சபையில தூங்கலாமா கூடாதா என்ற கேள்வி அப்போ

ழுது எழவில்லை! தூங்கலாம், ஆனால் குரட்டைதான் விடக்கூடாது என்று சபா நாயகர் தீர்ப்புக் கூறவேண்டிய அவசியமும் அப்போது ஏற்படவில்லை! மக்களின் பிரதிநிதிகள் கடந்த கால சட்ட சபையில் எந்த அளவிற்குத் தங்கள் கடமையை மறந்து நடந்தார்கள் என்பதற்கு இது ஒரு அத்தாட்சி.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இத் தேர்தலில் ஒரு முக்கியமான மாறுதலைக் காண்கின்றோம். காங்கிரஸுக்கு அடுத்த படியாக மிக அதிகமான எண்ணிக்கையுள்ள அபேட்சகர்களை திராவிட முன்னேற்றக் கழகந்தான் நிறுத்தி வைத்துள்ளது. சட்ட சபைக்கு 123 அபேட்சகர்களும், மக்கள் சபைக்கு 13 பேர்களும் தி. மு. க. வின் பெயரால் போட்டியிடுகின்றனர். தி. மு. க. வின் முக்கிய தலைவர்களெல்லாம் அபேட்சகர்களாய் நிற்கின்றனர். இவர்களில் சிறந்த பேச்சாளர்கள் பலர் உண்டு. செயல் திறமை யுடையவர்களும் இருக்கின்றனர். சட்ட சபை இவர்களுக்குப் புதிய அனுபவம். மேடைப் பிரசங்கத்துக்கும் சட்ட சபையில செயலாற்றுதலுக்கும் வித்தியாச முண்டு. ஆயினும் தி. மு. கவில் காங்கிரஸ்காரர்களை விடப் படித்தவர்களும் திறமைசாலிகளும் இருக்கின்றனர். எனவே இவர்கள் உட்காரப்போகும் சட்ட சபை, 1952—1956-ல் இருந்ததைப்போல் பேசாமடந்தைகளைக் கொண்டதாக இருக்கப் போவதில்லை. 1952-க்கு முன்பு இருந்த சட்ட சபையில் ஆங்கிலத்தில் அழகாகப் பேசக்கூடிய அன்வர் சாஹிப் போன்ற முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் பலர் இருந்தனர். இனி வரும் சட்ட சபையில் இன்பத் தமிழ் முழக்கும் தி. மு. க. தோழர்கள் பலர் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். இந்த வகையில் இப்போது நடைபெறும் தேர்தல் நம் தமிழ் மக்களின் கவனத்தை நன்கு ஈர்த்துள்ளது. அகில இந்திய ரீதியில் இத் தேர்தல் எந்தவித மாற்றத்தையும் தோற்றுவிக்காதாயினும், நம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அரசியல் துறையிலே ஒரு பெரிய மாறுதலைக் காணப்போகின்றோம். அந்த மாறுதல் எந்த அளவிற்கு இருக்குமென்பதை இன்று முதல் நடைபெறப் போகும் பொதுத் தேர்தல்களின் முடிவுகளைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

அட்டைப் படம்: ஷஹீத் சுஹ்ரவர்தீ

இந்த இதழின் அட்டையில் தோற்றமளிக்கின்ற பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் ஷஹீத் சுஹ்ரவர்தீ அவர்கள் இப்போது பின்பற்றிவரும் அன்னிய நாட்டுக் கொள்கையை முஸ்லிம் உலகம் மட்டுமின்றி பாக்கிஸ்தானில் செல்வாக்குள்ள பல தலைவர்களும் பலமாகக் கண்டித்து வருகின்றனர். முக்கியமாக, கிழக்குப் பாகிஸ்தானில் சுஹ்ரவர்தீ தோற்றுவித்த ஆவாமி முஸ்லிம்லீகின் தலைவராக விளங்கும் மௌலானா பஷானி அவர்கள் பாக் பிரதமரின் வெளிநாட்டுக் கொள்கையை வன்மையாகக் கண்டித்து வருகின்றார். மேற்குப் பாகிஸ்தானில் மியான் இப்திகாருத்தீன் போன்ற முற்போக்கு அரசியல் வாதிகளும் பாக் அந்நிய நாட்டுக் கொள்கையைப் பலமாகக் கண்டித்துக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவுடன் பாக்கிஸ்தான் ராணுவ உதவி ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதை இவர்கள் விரும்பவில்லை. காஷ்மீர் பிரச்னையில ஐக்கிய நாடு மன்றத்தில் மேற்கு வல்லரசுகளின் ஆதரவைப் பெறுவதற்காகப் பாகிஸ்தான் செய்த முயற்சிகளும் பலிக்கவில்லை. எனவே, சுஹ்ரவர்தீ அவர்களின் வெளிநாட்டுக் கொள்கை வன்மையான கண்டனத்துக்கு உள்ளாகி யிருப்பதில் என்ன ஆச்சரியம்?



இஸ்ராயீல் சண்டித்தனம்!

பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்களின் துணை கொண்டு எகிப்தின்மீது அநியாய ஆக்கிரமிப்புப் போர் நடத்திய இஸ்ராயீல் அரசாங்கத் துருப்புகள் ஐக்கிய நாடு மன்றத்தின் ஆணையை துச்சமாக மதித்து எகிப்திய மண்ணிலிருந்து வெளியேற மறுத்துக் கொண்டிருக்கிறது. எகிப்திலிருந்து வெளியேறுவதற்குச் சில நிபந்தனைகள் விதிக்கின்றது யூதர்களின் அரசாங்கம்! திருடன் ஒருவன் தான் கொள்ளையடித்த வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு, தனக்குத் தேங்காய்ப் பாலும் சோறும் தயார் செய்து போடும்படி கேட்டானும்! அந்தக் கதையாகத்தான் இருக்கிறது இஸ்ராயீல் அநியாயமாக ஆக்கிரமித்துக் கொண்ட எகிப்து நாட்டின் ஒரு பகுதியில் உட்கார்ந்துகொண்டு தனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்பது!

கொள்ளையும் கொலையும் செய்ததற்காக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுக் கொலை தண்டனை விதிக்கப்படவேண்டிய இஸ்ராயீல அரசாங்கம் தனக்குப் பரிசு வழங்க வேண்டுமென்று ஐ. நா. சபையைக் கேட்கின்றது! எகிப்தின் சாஜா, அகபா பகுதியிலிருந்து நிபந்தனையின்றி உடனே வெளியேற வேண்டுமென்று அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹவர் கண்டிப்பாகக் கூறியும் எகிப்திய மண்ணிலிருந்து இஸ்ராயீல் துருப்புகள் வெளியேற முடியாதென்று யூதர்களின் அரசாங்கம் சண்டித்தனம் செய்கிறது.

இஸ்ராயீலை விடப் பன்மடங்கு படைபலமுடைய பிரிட்டனும். பிரான்ஸும் ஐக்கிய நாடு மன்றத்தின் ஆணைக்குப் பணிந்து எகிப்திலிருந்து தங்கள் ஆக்கிரமிப்புப் படைகளை உடனடியாக வாபஸ் பெற்றிருக்கின்றன. ஆனால் நேற்று முளைத்த இஸ்ராயீல் அரசாங்கம் ஆணவத்துடன் நடந்து கொண்டு ஐக்கிய நாடு மன்றத்தை அலட்சியம் செய்கிறது, ஐக்கிய நாட்டின் தீர்மானத்தையும் ஐஸன் ஹவரின் எச்சரிக்கையையும் இவ்வளவு தூரம் அலட்சியம் செய்து வரும் இஸ்ராயீல் மீது பொருளாதார நெருக்கடியை யுண்டாக்கி அதனைப் பணியவைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அரபு ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் யோசனை கூறியிருக்கின்றனர். ஆனால் இதனை ஆதரிக்க அமெரிக்கா தயங்குகிறது. ஐக்கிய நாடு தீர்மானத்தைத் தனது காலடியில் போட்டு மிதிக்கத் துணிந்துவிட்ட இஸ்ராயீல் அரசாங்கம், ஆசிய அரபு நாடுகளை மட்டும் அவமதிக்கவில்லை அமெரிக்காவையும் சேர்த்துத்தான் அவமதித்திருக்கிறது. ஆனால் சர்வ வல்லமையுள்ள அமெரிக்கா தன்னை அவமதித்த நாட்டுக்கு விரோதமாக கடுமையான நடவடிக்கை எடுக்க ஏன்தான் தயங்குகிறதோ தெரியவில்லை. சர்வ வல்லமையும் பெற்று உலகத் தலைமை வகிக்கின்ற அமெரிக்காவே நீதியைப் பாதுகாக்கத் துணிவு கொள்ளாவிட்டால, உலகத்தில் சமாதானம் எப்படி நிலை பெற முடியும்? காஷ்மீர் பற்றிய ஐக்கிய நாடு பாதுகாப்புக் கவுன்ஸிலின் தீர்மானத்தை அலட்சியம் செய்து விட்டதாக இந்தியாவின் மீது குறைகூறும் அமெரிக்கப் பத்திரிகைகள் இஸ்ராயீலின் சண்டித்தனத்தை மட்டும் கண்டிக்காமல் இருப்பது நியாயமாகுமா?

இக் கட்டுரை அச்சாகிக் கொண்டிருக்கும்போது இஸ்ராயீல் துருப்புகள் எகிப்திலிருந்து வெளியேறத் தீர்மானித்து விட்டதென்று இஸ்ராயீல் அரசாங்க வெளி விவகார அமைச்சர் அறிவிப்பதாக ரேடியோ செய்தியொன்று கூறுகிறது. இஸ்ராயீல வெளியேற்றம் நிபந்தனை யற்றதாக இருக்குமாயின், இஸ்ராயீலுக்கு இப்பொழுதேனும் நல்ல புத்தி வந்தது பற்றி மகிழ்ச்சியடைகின்றோம்.

கேள்வி—பதில்

இம்மாத இதழில் பரிசு பெற்றவர்கள்.

1. எஸ். எம். கமால், கொழும்பு. ரூ 3.
2. எம். அப்துல் ஹாதி, நாகை. ரூ 3.
3. எஸ். நூர்ஜஹான், சென்னை-8. ரூ 3.

அன்னையின் பிரிவு

காயிதெ மில்லத் ஜனாப் எம். முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களின் அருமை அன்னையார் கடந்த 9-2-57ல் தமது 90-வது வயதில் காலமானார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) காலஞ்சென்ற அம்மையாரின் பிரிவாற்றாமையால் வருந்தும் அவர்களின் புதல்வர்களான முஸ்லிம் லீக் தலைவர் அவர்களுக்கும், ஜனாப் கே. டி. எம். அஹ்மது இப்ராஹீம் சாஹிப், மற்றுமிரு புதல்வர்களுக்கும் ஏனைய உற்றார் உறவினர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், காலஞ் சென்ற அம்மையாரின் ஆன்ம சாந்திக்காக ஆண்டவன்பால் இறைஞ்சுகின்றோம்.

முஸ்லிம் முரசு
10-ஆவது ஆண்டு நினைவுச்

சிறுகதைப் போட்டி

மூன்று சிறந்த கதைகளுக்கு ரூ. 350

முஸ்லிம் முரசில் 10 பக்கங்களில் அடங்கத்தக்கதாக ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம். சீர் திருத்தக் கருத்துள்ள சமூகக் கதைகளாகவும், சரித்திரக் கதைகளாகவுமிருக்கலாம். ஆனால் முற்றும் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். கதைகள் முஸ்லிம் கலாசார அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.

கதைகள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி 30-4-57

ஆசிரியர், முஸ்லிம் முரசு.
தபால் பெட்டி எண் 258,
சென்னை—1. (தமிழ் நாடு)

பாராட்டுகின்றோம் !

இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் சென்ற வாரம் தமது 'மேக தூதன்' என்னும் ரஷ்ய விமானத்தில் கேரளத்திலிருந்து புது டில்லிக்குப் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தின் இரண்டு என்ஜின்களில் ஒன்று திப்பற்றிக்கொண்டதால், மற்றொரு என்ஜின் இயங்கிச் சிறிது நேரம் பறந்து சென்று வழியிலுள்ள ஒரு பழைய விமான நிலையத்தில் பத்திரமாக இறங்கியது என்ற செய்தி பாரத மக்களைப் பரவசப்படுத்தியுள்ளது. விமானத்தில பிரயாணம் செய்த பண்டித நேருவையும் ஏனையோரையும் பத்திரமாக இறக்கிய விமான மோட்டி காப்டன் ரூபலின் திறமையையும் சமயோசித புத்தியையும் பாராட்டுவதற்கு அறிகுறியாக அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவருக்காக ஹைதராபாத் சுகாதார மந்திரி நவாப் மஹ்தி நவாஸ் ஜங் அவர்கள் 500 ரூபாயை திரு லால் பஹதூர் சாஸ்திரிக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்தியப் பிரதமரின் அரிய உயிர் தெய்வாதீனமாக காப்பாற்றப்படுவதற்குத் தமது திறமையைப் பயன் படுத்திய காப்டன் ரூபலைப் பாராட்டுகின்றோம்.

PRESS & REGISTRATION OF BOOKS ACT

Registration of Newspapers Central Rules, 1956

Statement about ownership and other particulars about the newspaper, "MUSLIM MURASU"

Form IV (Rule 8)

1.	Place of Publication	... 18, RAMASWAMY STREET, MADRAS-1.
2.	Periodicity of its Publication	... MONTHLY.
3.	Printer's Name	... M. M. THANIGAIMALAI.
	Nationality	... INDIAN.
	Address	... 33, ARMENIAN STREET, MADRAS-1.
4.	Publisher's Name	... S. A. SHUKOOR.
	Nationality	... INDIAN.
	Address	... 18, RAMASWAMY STREET, MADRAS-1.
5.	Editor's Name / Nationality / Address	... S. A. SHUKOOR. / INDIAN. / 18, RAMASWAMY STREET, MADRAS-1.
6.	Names and addresses of Individuals who own the news paper and partners or share-holders holding more than one percent of the total Capital.	S. A. SHUKOOR, 18, RAMASAMY STREET, MADRAS-1.

I, S. A. SHUKOOR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 28th Feb. 57. (Sd.) S. A. SHUKOOR.



உமரின் ஆட்சியில் ஒரு நாள்!

தம்பி !

கொலைக் குற்றத்திற்காக மரண தண்டனையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் ஒருவன் தனது பெற்றோர்களையும் மனைவி மக்களையும் சந்திக்கும்போது அவனது மன நிலையும் முகத்தோற்றமும் எப்படியிருக்குமென்பதை நீ எண்ணிப் பார்! கவலை தோய்ந்த முகத்துடன் தன்னை உற்று நோக்கிக் கொண்டிருந்த பெற்றோர்களைப் பார்த்து அந்த இளைஞன் கூறினான்:

"என்னருமை அன்னையே! நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களின் துணிவைப் பற்றிய கதைகள் பலவற்றை நான் சிறுவனாயிருந்த போது எனக்குக் கூறியிருக்கின்றீர்கள் அல்லவா? அம் முஸ்லிம்கள் எண்ண முடியாத இடுக்கண்களையெல்லாம் எவ்வளவு பொறுமையுடன் சகித்து வந்தார்கள்! ஒருபோதும் ஒருவிதமான முணு முணுப்பும் அவர்களது நாவிலிருந்து வெளிவந்ததில்லை. அல்லா(ஹ்)வின் விருப்பத்திற்கு அடிபணிவதிலேயே அவர்கள் ஆனந்தமெய்தினர். பெரும் பெருஞ் சங்கடங்களையும் அபாயங்களையும் அவர்கள் சமாளிக்க நேர்ந்தது. ஆனாலும், அவர்கள் ஒருபோதும் சிறிது கலக்கமும் அடைந்ததில்லை; யாவும் இறைவனின் விருப்பம் என்றே நினைத்தனர். போர்க்களங்களில் அவர்கள் வீர தீர பராக்கிரமச் செயல்கள் பலவற்றைப் புரிந்தனர்; கடமை வந்த போது தயக்கம் சிறிதுமின்றி மரணக் குழியில் குதித்தனர். அச்சமும் தயக்கமும் இல்லாத மரணமே சுவர்க்கத்திற்குச் செல்லும் சிறந்த பாதையாக அவர்களுக்குத் தோன்றியது. இது போன்ற இஸ்லாமியக் கதைகள் பலவற்றை எனதருமை அன்னையாகிய நீங்கள் எனக்கு எடுத்துரைத்ததில்லையா?"

இவ்வாறு இளைஞன் தனது அன்னையை நோக்கிப் பேசிய போது அவனது பெற்றோர்கள் தங்களின் திறந்த வாய் மூடாமல் தங்கள் மகனை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர். சொல்ல முடியாத கவலையும் பீதியும் குழப்பமும்

வர்களைக் கௌவிப் பிடித்துக் காண்டன. தங்களது மகனைக் ண்ணிமைக்காமல் பார்த்தனர். வன் எப்படிப் பட்ட விபத்தைக் றப் போகிருனே என்ற அச்சத் டன் அசைவற்று நின்றனர். ப்போது இளைஞன் மீண்டும் பசினன்:

"அருமை அன்னையே! முஸ் ம்களின் தாய் தந்தையர் எவ் ளவு தைரியசாலிகளாக இருந் ருக்கின்றனர் என்பது பற்றி ங்கள் எனக்குத் தெரிவித்திருக் ன்றீர்கள். கடமையின் குரல் ாதில் கேட்டவுடன் பெற்ரோர்கள் ங்கள் புதல்வர்களின் உணர்ச்சி வகத்தைத் தட்டிவிட்டு அவர் ளை வீறு கொண்டெழச் செய்து த்தகைய அபாயங்களையும் துணி டன் எதிர் கொள்ளச் செய்த ர் என்பதையும் எனக்கு எடுத் க் கூறியிருக்கின்றீர்கள். கடமை ல்லது மரணம் என்பதே அவர் ளுடைய வாழ்வின் ஒரே குர ாக ஒலித்தது என்று நீங்கள் னக்கு உணர்த்தவில்லையா? ான் கூறுவதை நன்கு கவனித் க் கேளுங்கள் நமது இஸ்லா ய உணர்ச்சியை ஒரு பரிசோத னக் கல்லில் உரைத்துப் பார்க்க வண்டிய தருணம் இப்போது மக்கு வந்துவிட்டது. நீங்கள் தைரியத்தைக் கைவிடாதிருங்கள். தோ நான் கூறுகின்றேன்"

இவ்வண்ணம் அப் பெற்ரோர் ள் தங்கள் குடும்பத்திற்கு அப் பாழுது நேரவிருக்கும் ஒரு பரும் அபாயம் நிறைந்த அதிர்ச் ச் செய்தியைக் கேட்கத் தங்க ளத் தயார் செய்துகொண்டனர்; விஷயத்தை உடனே விளக் க் கூறுமாறு தமது மைந் னுக்குத் தைரியமூட்டினர்; இஸ் ாத்தின் கண்ணியத்திற்கேற்பத் ாமும் நடந்து கொள்ளுவதாய் அவனுக்கு உறுதி மொழி யளித் னர். இளைஞனும் தனது முழுக் கதையையும் எடுத்துரைத் தான் தாம் பாலைவனப் பசும் பூங்காவில் படுத்து நித்திரை புரிந்து கொண்டிருந்த சமயத் தில் எவ்வண்ணம் தனது ஒட்டகத் தைக் காவற்காரக் கிழவர் கொன் ருர் என்பதையும், தான் எவ்வாறு கோபமுற்று நிலைகுலைந்து நிதான மிழந்து கிழவரைக் கொன்ருன் என்பதையும், எவ்வாறு கலீபா அவர்களின் நீதிமன்றத்திற்குத் தான் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குப் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டான் என் பதையும், கலீபா அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு தனது கடன்களைத் தீர்த்துவிட்டுத்திரும்ப ஜாமீன்மீது எப்படி அவன் அனு மதி யளிக்கப்பட்டான் என்பதை யும், தன்னுடைய வெறுஞ் சொல் லுறுதியை நம்பி முன்பின் தெரி யாத ஒரு மனிதர் எவ்வாறு தனக் குப் பிணை நின்ருர் என்பதையும் எடுத்துக் கூறினன்:

"உங்களின் பாசம் நிறைந்த செல்வக் குமாரனுகவும், இந்த அருமையான புராதன இல்லத் தில் உங்களுடன் தங்கியிருந்து உங்களது சுக துக்கங்களில் பங் கெடுத்துக்கொள்ளக் கூடிய பழைய மைந்தனுகவும் நான் இப் பொழுது இங்கு நிற்கவில்லை. உங் களுக்கு எனது இறுதி மரியாதை யைச் செலுத்துவதற்காகவும். இன்னும் சிலமணி நேரத்தில் உங் களிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளுதற்காகவுமே நான் இப் பொழுது இங்கு வந்திருக்கிறேன். நான் கடன் கொடுக்கவேண்டிய யூதர்களை உடனே அழைத்து வாருங்கள். மிகத் துரிதமாக நான் திரும்பியாக வேண்டும். கடன் களைக் கொடுத்துத் தீர்க்கமட்டுமே எனக்கு அவகாசமுள்ளது. மரண தண்டனையைப் பெறக் குறிப் பிட்ட நேரத்தில் நான் அங்கே இருந்தாக வேண்டும்."

தம்பி! இளைஞன் இவ்வாறு தனது மரண ஓலையை வாசித்து முடித்ததைக்கேட்ட அவனது பெற்ரோர் சித்த சுவாதீன மிழந்தவர்களைப் போன்ருகிவிட்டனர். அவர்களது வாயடைத்துப் போய்விட்டது. வயது முதிர்ச்சியால் அவர்களின் முகங்களிலிருந்த சுருக்கங்களிலே ஏற்பட்ட பள்ளங்களின் பாதையாக அவர்களது கண்களினின்றும் நீரருவிப் பெருக்கெடுத்தோடியது. இவ் வதிர்ச்சியினின்றும் மீள அவர்களுக்குச் சிறிது நேரம் பிடித்தது.

"அல்லா(ஹ்)வின் திருவுளச் சித்தம்போல் ஆகட்டும்! விதிப்படி யாவும் நடந்தே தீரும்! எவ்விதமேனும் நீ உனது வாக்கை நிறைவேற்ற வேண்டியவனே! தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளுதற்காகத் தனது வாக்குறுதியை எனது மைந்தன் மீறினன் என்ற இழிச் சொல்லுக்கு இடங்கொடுத்தலாகாது" என்று அவனது தாயார் கூறினுள். கடன் கொடுத்த யூதப் பெருச்சாளிகளும் வந்து சேர்ந்தனர். தம்பி! மனித உணர்ச்சி அறவே அற்றவர்கள் யூதர்கள். வட்டிக்கு வட்டிக் கணக்கிட்டுக் கிட்டியைக் சட்டி வாங்குவதில் இவர்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவர்கள். இப்பொழுது தமது கடன்காரர் அவசரக் கோலத்தில் கடன்களைத் தீர்த்து முடிக்கப் போகிருர் என்பதை இவர்கள் அறிந்து கொண்டதும் தமது அதிருஷ்டத்தைக் கணக்கிட ஆரம்பித்து விட்டனர். அவனிடமிருந்து கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டுபோக அவர்கள் முடிவுகட்டி விட்டனர் அவனிடம் ரொக்கப் பணம் ஏதுமில்லையென்பது அவர்களுக்குத்தெரியும் கால் நடைகளும் தட்டு முட்டுச் சாமான்களுமே அவனது அப்போதைய ஆஸ்தி. அவைகளுக்கு இந்த "ஷைலக்குகள்" வைத்ததே விலை

யாகிவிட்டது! அப்பொழுதி
"பஜார் பருவத்திற்த்"ப் ப
கும் குறைவாகவே அச் சா
களுக்கும் கால் நடைகளுக்
அவர்கள் விலை நிர்ணயித்து
விளைஞரது பெரும்பாலான
துக்களை அவனது கடன்களு
ஈடு செய்துகொண்டு விட்ட
கடன் அக்கணமே தீர்க்கப்
வேண்டியிருந்ததால் வேறு மார்
மில்லாமற் போய்விட்டது.

அது ஒரு நெருக்கடியான வே
அவ் விளைஞன் தனது வீட்டினி
சவக் குழி நோக்கிப் பு
படுஞ் சமயம் இனித்தான்
விருக்கின்றது. நன்கு ஜேணமி
பெற்ற ஒட்டகையொன்
கொண்டு வரப்பெற்று வாயி
நின்று கொண்டிருந்தது. அவ
அருமை இல்லத்திற்கு இற
விடையளித்து இப்பொழுது அவ
புறப்பட்டாக வேண்டும். தம்
இத்தருணத்தில் ஏற்படக்கூடிய
றும் பாசமும் பரிதாபமும் ப
வருணிக்க வியலுமா? வி
லும் விக்கலும், கண்
ரும் கம்பலையும். ஓல மு
உருக்கமும் நிறைந்த காட்சி
னூடே அவ் வயோதிகப் பெ
ற்றோர் தமது பிரிய மைந்தனை உ
மோந்து, கட்டித் தழுவி முத்
யிட்டனர். அவ்விளைஞனது
யிர் அருமை மனைவியோ மய
முற்றுக் கீழே சாய்ந்து விட்டா
அவளது ஆசைக் கணவன்—வா
வின் கொழு கொம்பு—வா
கைத் துணைவன்—காதற் க
சியம்—அவளை நோக்கிச் செ
ருன் ஆங்கு அவள் அறை
நினைவிழந்து தரையில் தலை
கோலமாய்க் கிடந்தாள்.
மேகம் போன்ற அவளது நீண்
கூந்தல் தாறுமாருய்த் தரை
அவிழ்ந்துகிடந்தது தம்பி! அந்
யிலிருந்த அவள் கண்ணாங்க
அவன்தனது இறுதிமுத்தியைப்
விடைபெற்றுக்கொண்டான்.

ர அவன் தைரியத்தை இழக்க
லே. ஆனால், அருகே நின்று
ண்டிருந்த அவனது குழந்தை
ன் பக்கம் திரும்பியவுடன்
ன் மனம் இடிந்து மலைத்து
றுவிட்டான். அவனது நெஞ்
தி இப்போது தளரத் தொடங்
து. அச் செல்வச் சேய்களை
வொன்ருய்த் தூக்கி உச்சி
ந்து அவற்றுடன் கொஞ்சிக்
விக் கட்டித் தழுவி முத்தி
டான். மூன்று குழந்தைகளில்
தவன், "அப்பா! அம்மா,
த்துப் போய்விட்டாளா? எங்
க் கடைத் தெருவிற்கு எவர்
எடுத்துச் செல்வர்? அப்பா!
தயை புரிந்து தாங்களும் சென்று
விடாதிர்கள்." எனக் கதறித்
துடித்தான். வீட்டை விட்டு வெளி
யேறுவதற்காகத் தந்தை எழுந்து
நின்றபோது, மற்றிரு குழந்தை
களும் அவனுடைய கால்
களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு,
"நாங்களும் உன்னுடன் வரு
வோம், அப்பா!" என அலறி
யழுதனர். இக்கட்டத்தில்தான்
இளைஞனது மனம் குழப்பமுற்று
மாறுதலடைந்ததற்கான அறிகுறி
கள்தென்பட்டன.
"தாயோ இறந்துவிட்

"பிராண மித்ரா"

நீத்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, துரித ஸ்கலிதம்.
திரிகளை மனத்தில் நினைத்தவுடனே தொட்டவுடனே
ந்திரியம்' வெளியாதல், நபுஞ்சகம், இந்திரிய ஒழுக்கு,
சாப்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, தேகம் மெலிதல், நடுக்கம்,
ரிய மின்மை முதலிய ராஜ உறுப்புக்கள் சம்பந்தமான சகலமும்
ங்கி, பீமன் பலம் பெற நிகரற்ற காயகல்பமாகும். 'பிராண மித்ரா
ப்பிடும் காலத்தில் மதன் லேபம்' ஆண்குறி வளர்ச்சிக்குக்
றியின் மேல் தினமும் பூசிக்கொண்டு வரவும். பத்தியமில்லை.
ரண குணத்திற்கு 40 நாள் 1 டின் "பிராண மித்ரா" அவசியம்
ப்பிடவும். (20 நாள் மருந்து) 1 டின் விலை ரூ 6—0—0.

வி. பி. ஆர்டர்களுக்கு ரூ 5 முன்பணம் அனுப்ப வேண்டும்.

இலங்கை அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா
ஜீவமித்ரா, 1 மதனலேபம் மூன்று மருந்துகளின் விலை ரூ 18-75 சதம். இலங்
க தபாற் செலவு ரூ 2-50 சதம். இலங்கை சுங்கத் தீர்வை ரூ 4-57 சதம்.
லாய் அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, ஒரு ஜீவ
ரா, ஒரு மதன லேபம் ஆகிய மூன்று மருந்துகளின் விலை ரூ 18-12-0, மலாய்
ட்டிற்கு தபால் செலவு ரூ 6-0-0.

முக்கிய கவனிப்பு ;-மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்தின் கிரயத்தையும் தபால்
லவையும் சேர்த்து ஏர்மெயில் மணியாடர் மூலம் அல்லது 37 ஷில்லிங் பிரிட்டிஷ்
ாஸ்டல் ஆர்டர் வாங்கி ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். முன்பணம் இல்லாமல்
ருந்துகளை அனுப்ப முடியாது.

மலாய் நாட்டிலுள்ளவர்கள் எமது பதிலைக் கோருபவர்கள் 1 ஷில்லிங் போஸ்டல்
ர்டர் அனுப்பவும். 'பெண் இன்பம்' என்னும் விவரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

டாக்டர் கே. கே. ராமன், (ரிஜிஸ்டர்டு).
கேரள வைத்தியசாலை (மு. 13).
தபால் பெட்டி நெ. 473, சூளை வேப்பேரி. சென்னை-7.

டாள்; தந்தையோ அவர்களை விட்டு வெளியேறிச் செல்கின்றார்" என்ற நினைப்பில் கதறித் துடிக்கும் அப் பச்சிளங் குழந்தைகளின் பரிதாபக் காட்சியானது அவ்விளைஞனை தைரியமிழக்கச் செய்துவிட்டது. தம்பி! இந்நிலையில் அவனைக் கட்டிப் பிடித்து இழுத்துச் செல்ல அவனருகில் போலீஸ்காரர்கள் எவருமில்லை. அவனது சொல்லுறுதியொன்றே அப்பொழுது அவனைக் கட்டுப்படுத்தி நின்றது. சட்டத்தின் பிடிகள் இலேசில் அவனைத் தேடித் துருவிக் கண்டு பிடிக்க முடியாது. வெகு தூரத்தில் பாலைவனப் பிரதேசத்தின் உட்பகுதியில் அவன் இப்பொழுது இருக்கின்றான். வெறும் வாய்ச் சொல்லைக் காப்பாற்றுதற்காக ஒரு பெருங் குடும்பத்தின் எழில் மிக்க இன்ப வாழ்வை ஏன் அவன் சிதைத்துச் சின்னா பின்னப் படுத்துதல் வேண்டும்? குற்றமற்ற இக் குழந்தைகளை ஏன் பரிதவிக்க விடவேண்டும்? இவனன்றோ குற்றமிழைத்தவன்? இக் குழ தைகளல்லவே! எனவே, ஏ இவை இவ்வுலகில் அனாதைகள அல்லற்படுதல் வேண்டும்?

இவ்வண்ணம் அவன் ப வேறு எண்ண அலைகளிற் சிக்கி தவித்துக் கொண்டிருந்தபோ அவனது சுய நல எண்ண ஓங்கி நின்று வெற்றி பெற் விடும்போல் தோன்றியது. கொலைக்களம் நோக்கி அவ புறப்பட வேண்டிய இறு நொடியும் வந்து விட்டது. தூ குத் தண்டனை பெறுதற்கென குறிப்பிட்ட நேரத்தில் அவ அங்கிருக்க வேண்டுமெனின் அப் பொழுதே அவன் புறப்பட்டா வேண்டும். "இருப்பதா? இறப்பதா?" என்ற வாழ்வு ம ணப் பாதையின் நடுவில் அவ

புதுமை அரங்க ஆரம்ப விழா

பல நாடக மேடைகளில் அநுபவம் பெற்ற திறமையுள்ள இளம் நடிகர்களின் கூட்டுறவால், "புதுமை அரங்கம்" என் நாடக சபையின் ஆரம்ப விழா, "கல்கண்டு" ஆசிரியர் திரு தமிழ்வாணன் தலைமையில் சமீபத்தில் மிகச் சிறப்பாக நட தேறியது.

இந்த விழாவில், நடிகர்கள் எம். கே. முஸ்தபா, கே. பாலாஜி, எஸ். பி. பாலகிருஷ்ணன், டி. என். கிருஷ்ண ராவ், "பேசும் படம்" சுப்பாராவ் "துப்பறியும் கதை" வாசவன், ஜெகசிற்பியன், ஆர். பி. மல்லாரி, மற்றும், பல எழுத்தாளர்கள், நடிகர்கள், பத்திரிகாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, கிண்டியில் நடைபெற்ற சர்வகலாசாலை நூ றாண்டு விழா கண் காட்சியில் அமைந்த டெலிவிஷன் மேடையில் இந்தப் புதுமை அரங்கத்தின் அழகிய நாடகம் மிகவும் திறமை யாக நடித்துக் காட்டப்பட்டது. பார்த்தோர் பரவசமடைந் பாராட்டினர்.

இந்த அரங்கத்தின் சிறப்பான படைப்பாக "விளக்கேற்றி வைத்தவள்". என்னும் நாடகம், சென்னையில் விரைவில் நடை பெறும்.

ப்பொழுது நின்று கொண்டு ப்பாதையிற் செல்லுவதெனத் தரியாமற் திகைத்துத் தடுமாறி ஒன். கொலைக் களஞ் செல்லு ாறு கடமையும் கண்ணியமும் வனைப் பிடர்பிடித்து உந்தின. பற்றோர் மீதுள்ள பாசமும், னைவியின்பாலுள்ள காதலும், ழந்தைகள் மீதுள்ள அன் ம் இன்ப வாழ்வும் எழிலுலகும் வனை அங்கு ஆணி அடித்தாற் பால் நிலைபெறச் செய்தன. ரும் போராட்டம் அவன் னத்தில் மூண்டது. ஆனால், ல்லாம் சற்று நேரத்தில் நடந்து டிந்து விட்டன. அவனது ஸ்லாமிய தார்மிக உணர்ச் யே அவனுக்கு மீண்டும் வலி றுத்திக் கூறி வெற்றி பெற்றது. உனது செல்வச் சுகபோக மா, குழந்தைகளின் ாசமோ இறைவனது பாதையில் நீ செல்லுவதினின்றும் உன்னைத் திருப்பாதிருக்குமாக!” என்ற திரு குர்ஆனின் கூப்பாடு அவனது காதுகளில் உரக்க ஒலித்தது. உடனே அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். தந்தை, தாய், மனைவி, மக்கள் ஆகிய அனைவரையும் விட வாக்குறுதியைக் காப்பாற்றுவதென்பதே ஒரு முஸ்லிமின் சிறந்த ஒழுக்க நியதியாகும். கலக்கத்திற்கும் கண்ணீருக்குமிடையே அவன் ஒட்டகத்தின் மீது தாவிக் குதித்து மதீனாவையும், ஆங்கு அவனுக்கெனக் காத்திருக்கும் அவனது தலைவிதியையும் நோக்கி விரைந்து சென்றான். கண்ணிற் கெட்டியதூரம் அவன் சென்று மறையும் வரை அவனை அவனது செல்வக் குழந்தைகள் பார்த்து விட்டுத்திரும்பினர். (தொடரும்)

“நூர்”

“பிறை”—இஸ்லாமிய இலக்கிய மாதப் பத்திரிகை.
ிரியர்: ஏ எம் மீரான் கனி இதழ் 6 அணா. வருட சந்தா
4—8—0. 192, அங்கப்ப நாயக்கன் தெரு மதராஸ்-1.

ஒரு சமூகத்துக்காக நடைபெறும் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அப்பத்திரிகைகளின் தரத்தையும் பார்த்தே அச்சமூகத்தின் ன்னேற்றத்தைக் கூறிவிடலாம் என்றார் ஜார்ஜ் பெர்னார்ட்ஷா.

அறியாமையே பெரிய இருள். அவ்விருளைப் போக்க அறிவுதரும் ல்களையும் வழிகாட்டும் பத்திரிகைகளையும் எந்த சமூகம் அதிகமாகப் றவில்லையோ அந்த சமூகம் முன்னேற முடியாது.

1957 ஜனவரிமுதல் இப் “பிறை” வெளி வருகிறது. இதன் ரண்டாவது இதழ் முதல் இதழைக் காட்டிலும் அமைப்பிலும் டக்கப் பொருள்களிலும் சிறந்ததாக இருக்கிறது. எம். அப்துல் ஹ்ஹாப், எம் ஏ. பி. டி. எச். மகுதூம், மகனீ, டி. எஸ். துபாஷ். ஹஸன், யூஸ், அ. அப்துர் ரஹீம் ஜமீலா, முதலியோரின் சுவையான கட்டுரைகளும். இன்ப மூட்டும் சிறு கதைகளும். சாரணபாஸ்கரன், இப்னு ாலுத்தீன் ஆகியோரின் இனிய பாக்களும் இடம் பெற்றிருக்கின்றன. பிறையின் பணி சிறந்து ஒளிவீச தூயோன் துணை செய்வானாக.

ஈமான், தொழுகை, நோன்பு, ஜக்காத்து,
ஹஜ்ஜு என்னும்

தஃலீமுல் இஸ்லாம்

3-ம் பதிப்பு! تعليم الاسلام 3-ம் பதிப்பு!!

512 பக்கங்கள் கொண்டது. ஹனபி விலை ரூ. 4 0 0
512 பக்கங்கள் கொண்டது. ஷாபி விலை ரூ. 4 0 0

உத்தமபாளையம் அல்ஹாஜ் மௌலவி
எஸ். எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப்
(பாக்கவி) அவர்களைக் கொண்டு எழுதப்பட்டது.

தொழுவதற்குச் சாதகமாய் அமைந்துள்ள அனுஷ்டானங்களும், தொழுகைக்கு ஓதவேண்டிய ஸூராக்களும் ஸூரத்துல் பாத்திஹா முதல் ஸூரத்துல் லைல் வரை ஒரு வரி அறபியும், ஒரு வரி தமிழும், அதன் அர்த்தங்களும் தாத்பரியங்களும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

ஹஜ்ஜு செய்யவேண்டிய அனுஷ்டானங்களும், இஹ்றாம் கட்டுவது முதல் திருமக்காவில் பிரவேசித்து தவாபு செய்து ஸபா மர்வா அறபாத்வரை ஓதவேண்டிய துஆக்களும், மதீனா ஜியாரத்து வரை ஓதவேண்டிய துஆக்களும் ஒரு வரி அறபியும் ஒரு வரி தமிழும் தாத்பரியமும் எழுதப்பட்டுள்ளன. ஹஜ்ஜு யாத்திரையாளர்களுக்கு இந்நூல் இருக்க வேண்டியது அவசியம். இத்துடன் அரேபியாவிலுள்ள மிகமுக்கியமான புண்ணியஸ்தலப் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இது சுத்தமான கிரௌன் காகிதத்தில் 1-க்கு 16-ல் அச்சிட்டு நேர்த்தியான பைண்டு செய்யப்பட்டது

குத்பா கொத்து இரண்டு பாகம் சேர்ந்தது	விலை ரூ	7	8	0
மிஸ்பாஹுன் நிக்காஹ்—விவாகவிலக்கு	விலை ரூ	3	0	0
சுபுஹான மவ்லீது மாலை	விலை ரூ.	1	0	0
ஷஹீதே கர்பலா	விலை ரூ.	3	0	0
தொழுகையின் சீரிய முறை ஹனபி	விலை ரூ	0	12	0
தொழுகையின் சீரிய முறை ஷாபி	விலை ரூ.	0	12	0

Singapore Agent :—**Hajee H. M. Ebraheem Bazar wala**
No. 13, Bale Lane, Singapore.

"தஃலீமுல் இஸ்லாம் புக்டிப்போ"
நெ. 642, திருவல்லிக்கேணி ஹைரோட், சென்னை-5

நாயகம் அளித்த நகைச் சுவை விருந்து!

“அஷ்ரப்”

எல்லோருடனும் சிரித்த முகத்துடன் பழகுவது நற்குணங்களில் ஒன்று. ஆனால் தேவையின்றி வீண் வார்த்தைகளைப் பேசுவதைப் போன்றே, வீணாகச் சிரிக்கப் பேசுவதையும் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். ஏனெனில் அதிகமாகச் சிரிப்பதால் உள்ளம் இருண்டுவிடுகிறது; இறைவன் மீதுள்ள அச்சமும் குறைகிறது. சிரிப்புண்டாக்குவோர்மீது பிறர் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் குறைவதாக உமர் (ரலி) கூறியுள்ளார்கள்.

அவசியத்தின்போது மட்டும் பொய்யைச் சேர்க்காமல் கூறும் ஹாஸ்யத்தையே நாயகம் (ஸல்) ஆதரித்துள்ளார்கள். உயர்வு தாழ்வு இன்றி சாதாரண மனிதர்களுடனும் பழகி அவர்களைத் திருத்திய நாயகமவர்கள் சிற்சில சமயங்களில் பிறருக்குச் சிரிப்புண்டாகுமாறு பேசியுள்ளார்கள். அதனால் தாழ்ந்த மனிதர்களும் நாயகமவர்களிடம் அச்சமின்றி நெருங்கிப் பழக முடிந்தது. பிறரை விடச் சிறுவர்களிடமும், பெண்களிடமும் அதிகமாக ஹாஸ்யம் பேசினார்கள். தங்கள் வாழ்நாள் முழுவதும் இமை தாழ்ப்பட்டுள்ள மிகச் சில சமயங்களில் மட்டுமே நாயகமவர்கள் நகைச்சுவையுடன் பேசியதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகின்றார்கள்.

கிழவி ஒருத்தி நாயகமவர்களிடம் “நான் சுவர்க்கம் செல்வேனா?” என்று கேட்டாள். ‘கிழவிகள் சுவர்க்கம் செல்வதில்லை’ என்று விடை பகர்ந்தார்கள். கிழவி துக்கமடைந்தாள். ‘வருந்தாதே! இளமைப் பருவத்தை அளித்தே கிழவிகளைச் சுவர்க்கத்தினுள் அழைத்துச் செல்வர்’ என்று விளக்கமாகக் கூறி நாயகமவர்கள் அக்கிழவியை மகிழ்வித்தார்கள்.

∴ ∴ ∴

நாயகமவர்களை அழைத்து வருவதற்காக ஒருவர் தமது மனைவியை அனுப்பினார். அப்பெண்ணிடம், ‘கண்ணில் வெள்ளை நிறம் கொண்டவர்தானே உன் கணவர்?’ என்று நாயகம் கேட்டார்கள். தன் கணவன் கண்ணில் வெண்மை இல்லையென்று அப் பெண் கூறினாள். அதற்கு நாயகமவர்கள் “வெள்ளை நிறமில்லாத கண்களுடைய மனிதர்

களே இல்லை" என்றார்கள்.

∴ ∴ ∴

தன்னை ஒட்டகத்தின்மீது அமர்த்தும்படி நாயகமவர்களிடம் ஒரு பெண் கேட்டுக் கொண்டாள். ஒட்டகைக் குட்டியின் மேல் உட்காரவைப்பதாக நாயகம் கூறினார்கள். அதற்கு அவள் முடியாது என்றாள். அப்பொழுது நாயகம் 'எந்த ஒட்டகமும் அதன் தாய்க்குக் குட்டிதான்' என்றார்கள்.

∴ ∴ ∴

நுஃமான் என்பவர் வியாபாரிகள் கொண்டுவரும் பழங்களைக் கொண்டுவந்து நாயகமவர்களிடம் சமர்ப்பிப்பார். வியாபாரி கிரயத்தைக் கேட்கும்போது அவரை அழைத்து வந்து நாயகமவர்களைச் சுட்டிக் காட்டி, 'பழங்களை இவர்களே உண்டார்கள். இவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொள்' என்று கூறுவார் நுஃமான். நாயகம் தொகையைக் கொடுத்துவிட்டு, 'ஏன் இவ்வாறு செய்தீர்?' என்று நுஃமானைக் கேட்பார்கள். 'என்னிடம் பணமில்லை. இப் பழங்களைத் தாங்களன்றி வேறு யாரும் உண்ண எனக்கு விருப்பமும் இல்லை' என்பார். அப்போது நாயகம் (ஸல்) சிரிப்பார்கள்.

∴ ∴ ∴

ஜுபைர் என்பவர் பெண்களைக் கண்டால் பிரியமாகப் பேசுவார். ஒரு நாள் அவர் சில பெண்களுக்கிடையே நின்றுகொண்டிருக்கும் போது நாயகமவர்கள் அங்கு வந்துவிட்டார்கள். ஜுபைர் வெட்கித் தலை குனிந்து நின்றார். 'இங்கு என்ன செய்கின்றீர்?' என்று நாயகம் வினவினார்கள். அதற்கு ஜுபைர், 'என்னிடம் முரட்டு ஒட்டகம் ஒன்று இருக்கிறது; அதை அடக்குவதற்காக இப் பெண்களைக் கயிறு திரிக்கச் சொல்கிறேன்' என்றார். இச் சம்பவத்துக்குப் பின் அவரைக் காணும்போதெல்லாம் நாயகமவர்கள் 'அவ் வொட்டகம் தன் முரட்டுத் தனத்தை விட்டுவிட்டதா?' என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஜுபைர் நாணித் தினால் ஒன்றும் கூறாமல் இருந்து விடுவார். ஒரு முறை 'அந்த ஒட்டகத்தின் முடிவு என்ன தான் ஆனது?' என்று கேட்டார்கள். அப்பொழுது ஜுபைர், 'நான் முஸ்லிமானதிலிருந்து அது முரட்டுத்தனம் செய்யவில்லை' என்றார். அப்போது நாயகமவர்கள் அவருக்கு நல்வழி காட்டிடும்படி இறைவனிடம் பிரார்த்தித்தார்கள்.

∴ ∴ ∴

சுஹைபு என்பவர் பேரீச்சம் பழங்களைத் தின்று கொண்டிருந்தார். 'கண்வலியாக இருக்கும்போது பேரீச்சம்பழம் சாப்பிடுகிறீரே?' என்று நாயகம் கேட்டார்கள். அதற்கு அவர் 'நான் வாயால் சாப்பிடுகிறேன்' என்றார். நாயகம் சிரித்தார்கள்.

சப்யான் என்பவர் விகாரமான தோற்றமுடையவர். அவர் நாயக மவர்களிடம் "அல்லாஹ்வின் ரசூலே! எனக்கு உங்கள் ஆயி ஷாவைவிட அழகிய இரு மனைவி கள் உள்ளனர். தாங்கள் விரும்புபவளை நான் தலாக்கு அளித்துவிடுகிறேன். தாங்கள் திருமணம் செய்துகொள்ளுங் கள் என்றார். அப்பொழுது அருகிலிருந்த ஆயிஷா நாயகி, 'உங்கள் மூவரில் அதிக அழ குள்ளவர் நீரா? உம் மனைவி களா?' என்று கேட்டார்கள். நான்தான்' என்றார் அம் மனி நர். இதைக் கேட்ட நாயகம் சிரித்துவிட்டார்கள்.

∴ ∴ ∴

ஒரு நாள் ஆயிஷா நாயகி, சவுதா அம்மையாரிடம் பாலினால் செய்த உணவொன்றை உண் ணக் கொடுத்தார்கள். சவுதா உண்ண மறுத்தார். 'உண்ணா விட்டால் இதை உங்கள் முகத் தில் பூசிவிடுவேன்' என்று ஆயிஷா (ரலி) கூறினார்கள். அதற்கும் சவுதா அசையவில்லை. அவர் முகத்தில் சிறிது உண வைத் தடவினார்கள் ஆயிஷா (ரலி). பதிலுக்குத் தடவ சவுதா வினால் முடியவில்லை. ஏனெனில் இருவருக்குமிடையே நாயகம் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொ ழுது நாயகமவர்கள் தங்கள் காலைச் சிறிது இழுத்துக் கொண்டு சவுதாவுக்கு வழிவிட் டார்கள். உடனே சவுதா உணவை ஆயிஷாவின் முகத்தில் தடவினார். இதைப் பார்த்து நாயகம் (ஸல்) சிரித்தார்கள். ★

வெளி வந்துவிட்டது!

"யூசுப் - ஜுலைகா"

ஒரு இனிய காதல் காவியம்

இயற்றியவர்: சாரணபாஸ்கரன்

திரு குர்ஆனிலும் பைபிளிலும் இடம் பெற்றுள்ள இணை யற்ற காதல் கதையை—மெய்யான வரலாற்றை—இன்பத் தமிழில் எளிய நடையில் காவியமாக இயற்றியுள்ளார் கவிஞர் சாரணபாஸ்கரன். அண்ணாமலை பல்கலைக் கழகத் தமிழ்க் கலைத் துறைத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டி யார், எம். ஏ; பி. எச் டி. அவர்களின் அணிந்துரையுடன் அற்புதமாக அமைந்துள்ளது இக்காவிய நூல். பக்கம் 240.

விலை ரூ. 3—8—0 தபால் செலவு வேறு

அன்பு நூல் நிலையம்
18, ராமசாமித் தெரு, சென்னை-1.

தபால்காரன் கொடுத்து விட்டுப்போன அந்த திருமண அழைப்பிதழை நான் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருந்தேன். மணமக்களது பெயர்களை மறுபடியும் கவனித்துப் பார்த்தேன். என்னால் நம்பவே முடியவில்லை— கலந்தருக்கும் கதிஜாவுக்கும் திருமணம்! இது எப்படி நடக்க முடியும்?

பிரிக்கப்படாமல் அருகில் கிடந்த கவரை கையில் எடுத்தேன். அவசரமாகப் பிரித்தேன். அது கலந்தரின் கடிதம்...''எனக்கும் கதிஜாவுக்கும் திருமணம் நடக்கப்போகும் செய்தி உங்களுக்கு உண்மையிலேயே ஆச்சரியம் அளிக்கும். இந்தக் கிழங்கள் எப்படி கலியாணத்துக்கு ஒத்துக் கொண்டார்கள் என்ற கேள்விக்கு விடை காணும் விஷயத்தில் உங்கள் கற்பனையைத் தட்டி விட்டு விடாதீர்கள்... நீங்கள் அவசியம் கலியாணத்துக்கு வரவேண்டும். வந்தால் எனது கதையின் பாக்கி பகுதியையும் உங்களிடம் சொல்லுவேன்...'' என்று கலந்தர் எழுதியிருந்தான்.

பத்து வருஷங்களுக்கு முன்பு கலந்தர் எனக்கு அறிமுகமானான். குடந்தைக் கல்லூரியில அவனும் நானும் அப்பொழுதுதான் இன்டர் முதல் வகுப்பில் சேர்ந்தோம். ஹாஸ்டலிலும் இருவருக்கும் ஒரே ரூம். கலந்தர் நல்ல சிவந்த நிறத்துடன், சுருள் சுருளான கிராப் தலையுடன், காவிரியின் ஓரத்தில் அசைந்து நடந்து வரும் காட்சியை நான் இன்றுகூட நினைத்துப் பார்த்து சந்தோஷப் படுவேன். அவன் எல்லோருடனும் சுமுகமாகப் பேசிப் பழகுவான். நானும் அவனும் வெகு சீக்கிரம் நெருங்கிய நண்பர்கள் ஆனோம்.

''இந்த லீவில் நீங்கள் அவசியம் எங்கள் ஊருக்கு வர வேண்டும்...''—கோடை லீவில் நாங்கள் பிரிவதற்கு முன்பு கலந்தர் எனக்கு உத்திரவிட்டான்.

'உங்கள் ஊரில் அப்படி என்ன விசேஷம் இருக்கிறது...?'' நான் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

''நிறைய இருக்கிறது...மனிதன் நெறி தவறிவிட்டால் எத்தனை ஆயிரம் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படலாம் என்பதற்கு எங்கள் ஊரில் நீங்கள் சாட்சியம் காண்பீர்கள்...''

ஏதோ விசேஷம் இருக்கிறது. நான் அவசியம் போகத்தான் வேண்டும். என்னுள்ளே முடிவு செய்து கொண்டேன்.

''ஆஹா! கண்டிப்பாக வருகிறேன்...'' என் பதிலைக் கேட்டு

கலந்தர் மகிழ்ச்சியாக முறுவலித்தான்.

"ஹுஸைன்...நல்ல வேளை வந்துவிட்டீர்கள்..." என்று பதினைந்து நாட்கள் கழித்து என்னை அவனது ஊரிலே வரவேற்ற கலந்தரின் மகிழ்ச்சி எனக்கு ஆச்சரியம் அளித்தது அன்று மாலை அவனும் நானும் வெளியில் உலவப் போனோம். அது பெரிய கிராமம்தான். குறைந்தது பத்து பெரிய தெருக்கள் அழகிய கடைத்தெரு. ஊர் அருகே பெரிய ஆறு. இரண்டு பெரிய பள்ளி வாசல்கள்: இரண்டு குளங்கள்: இவையெல்லாம் போதாதென்று இரண்டு 'தர்கா'க்கள். எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. இரண்டு பள்ளிவாசல்கள், இரண்டு குளங்கள். இரண்டு தர்காக்கள்—எல்லாம் ஏன் இரட்டையிலேயே இருக்க வேண்டும்...?

"கலந்தர்...இதற்கு என்ன காரணம்?" விஷயத்தை விளக்கி நான் கலந்தரைக் கேட்டேன். அவன் உடனே பதில் சொல்லவில்லை.

"ஹுஸைன்...அதோ அதைப் பாருங்கள்." பக்கத்து வீட்டை கவனித்துக்கொண்டே அவன் சொன்னான்.

நடந்து கொண்டிருந்த நான் அங்கே கவனித்தேன். வீட்டுத் திண்ணையிலே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். வயது பதின் மூன்று இருக்கலாம். நல்ல சிவப்பு நிறம். அலை மோதும் அழகிய கண்கள். நாணம் தவழும் கதுப்புக் கன்னங்கள், பச்சை நிற பட்டுப் பாவாடை; ரோஸ் நிற பட்டுத் தாவணி. ஆகக்கூடி. அவளது உருவம் கவர்ச்சிகரமாக இருந்தது. அவள் கலந்தரை உற்று நோக்கினாள். அந்தப் பார்வையிலே இத்துணை கவர்ச்சியும் பரிவும் எப்படி வந்தன? என்னருகே நின்ற கலந்தரை கடைக்கண்ணால் கவனித்தேன். அவன் அவளையே உற்று நோக்கினான். அடுத்த நிமிஷம் அந்தப் பெண் உள்ளே போய்விட்டாள்.

மாலைக் காற்று மெதுவாக வீசியது. வழி தவறிய ஒரு பறவை 'கீச் கீச்' என்று கத்திக்கொண்டு பறந்தது. குளத்திலே மீன்கள் துள்ளிக் குதித்தன. கலந்தர் மௌனமாக நடந்தான். சற்று நேரத்தில் ஊருக்கருகேயுள்ள ஆற்றுக்கு வந்துவிட்டோம். ஆற்றின் ஒரு புறத்தில் 'சிலு சிலு' வென்று கொஞ்சம் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அருகில் ஊற்றுக்கள் தோண்டி பெண்கள் நீர் இறைத்துக்கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் மணலிலே விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

"அந்தப் பெண் யார் தெரியுமா?" கலந்தர் என்னை நோக்கி இந்தக் கேள்விக் குண்டை தூக்கி வீசினான். நான் என் கண்களைத் துடைத்துக் கொண்டேன்—காரணம், வீசிய காற்றில் இணைந்து வந்த மணல் என் கண்களைக் கண்டு ஆசைப்பட்டு விட்டது! நான் மெதுவாகச் சிரித்தேன்.

"அவள் எனது மாமி மகள்..." திரும்பவும் அவனே பேசினான்.

"ஆமாம்...எனது அத்தாவின் தங்கை மகள்...எனக்கு முறைப் பெண்..."

"அப்படியானால் நாம் அவர்கள் வீட்டுக்குப் போயிருக்கலாமே..." இது எனது சந்தேகம்.

"அதுதான் முடியாது...என் மாமா 'சின்ன கட்சி', எங்க அத்தா 'பெரிய கட்சி.' அப்படியிருக்கும்போது நான் எப்படி போகமுடியும்?"

"ஏய் கலந்தர்...என்ன புதிய சரித்திர பாடம் சொல்லுகிறாய்...?

லேபர், டோரி, காங்கிரஸ், லீக் முதலிய கட்சிகளைத்தான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது என்ன 'சின்ன கட்சி' 'பெரிய கட்சி'?" எனக்கு சிரிப்பு வந்து விட்டது. "அதுதான் எங்க ஊருக்கே ஒரு சாபக்கேடு. ஊருக்கு மட்டுமல்ல, எனக்கும் அதுதான் தலையிடி..."

மணலிலே நான் சாய்ந்து கொண்டேன். சூரிய வெப்பம் மறைந்து விட்டது; கிழக்கில் அடிவானத்தில் முழுமதி தலை காட்டியது. சிலு சிலுத்த காற்று என்னை தழுவித் தழுவிச் சென்றது.

கலந்தர் ஊர் கதையை சொல்ல ஆரம்பித்தான். அவன் சொன்ன கதையின் சுருக்கம் இதுதான்:

அந்த கிராமத்தில் வெகு காலமாக ஜனங்கள் மிகவும் ஒற்றுமையாக இருந்தார்கள். கிராமத்தில் இரண்டு பெரிய பணக்காரர்கள். ஒருவர் கலந்தரின் தகப்பனார்: மற்றொருவர் கலந்தரின் மாமி கணவர். இருவரும் மிகவும் அன்னியோன்னியமாக இருந்தார்கள்.

அந்த ஊருக்கே பெருமை யளிக்கும் விதமாக அமைந்திருந்தது 'கலந்தர் மஸ்தான் தர்கா'. அந்த மகானின் நினைவு எப்பொழுதும் தமக்கு இருக்க வேண்டும் என்பதற்காக தமது மகனுக்கு கலந்தர் என்று பெயர் வைத்தார் ஊர் நாட்டாண்மைக்காரர். ஒவ்வொரு வருஷமும் அந்த மகானுக்கு கூடு எடுப்பது தொன்று தொட்டு வந்த பழக்கம். ஊர் மக்கள் எல்லோரும் பக்தி சிரத்தையோடு அந்தப் 'புனித' காரியத்தில் ஈடுபடுவார்கள். கூடு எடுக்கப்படும். அன்றைய இரவு 'அறுபது அடியில் அடங்கியிருக்கும் அந்த மகானது அடக்க ஸ்தலத்தில் புதிய போர்வையைப் போர்த்த வேண்டும்: அதன் பிறகு சந்தனத்தை அள்ளி மகானது அகங்குளிர பூச வேண்டும். பிறகு அலங்கரிக்கப்பட்ட கூட்டை மெதுவாக நகர்த்திவிட வேண்டும். இந்த முக்கிய வேலைகளை யெல்லாம் ஊர் நாட்டாண்மையே முன்னின்று செய்வார். இது பழக்கம்.

எட்டு வருஷங்களுக்கு முன்பு. அப்போது கலந்தருக்கு 12 வயதிருக்கும். அவனது மாமி மகள்

கதீஜாவுக்கு ஐந்து வயதிருக்கும். அன்று கூடு எடுக்கும் புனித தினம். கதீஜாவின் தகப்பனாரும் கலந்தரின் தகப்பனாரும் ஓடியாடி வேலை செய்துகொண்டிருந்தார்கள். இரவு வந்து விட்டது. கூடு சிங்காரித்துக்கொண்டு நிற்கிறது; மேளவாத்தியமும், நாதசுவரமும். பெயர் சொல்லித் தீராத பின்னணி வாத்தியங்களும் முழங்கின. மகானின் அடக்க ஸ்தலத்தில் பழைய போர்வையை எடுத்து விட்டுப் புதிய போர்வையைப் போர்த்தவேண்டும். இது நாட்டாண்மையின் வேலை. ஆனால் அந்த சமயத்தில் அங்கே அவரைக்காணோம்.

"அவர் இல்லாவிட்டால் பரவாயில்லை: நீங்கள் எடுத்துப் போர்த்துங்கள்" என்று அருகில் நின்ற கதீஜாவின் தகப்பனாரை — நாட்டாண்மைக் காரரின் மைத்துனரை—நண்பர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அவரும் சம்மதித்தார்• அடுத்த நிமிஷம் பழைய போர்வையை மெதுவாக எடுத்தார்; அந்த இடத்திலேயே புதிய போர்வையைப் போர்த்தினார். நறுமணம் வீசிய சந்தனத்தைக் கைகளிலே அள்ளி மகான் அவர்களின் தலைமாட்டிலே பூசினார். இருட்டிலே, எண்ணெய் விளக்குகளின் மத்தியிலே இருக்கும் மகான் கொஞ்சநேரமாவது சந்தனத்தின் நறுமணத்தை நுகர வேண்டும் என்ற பறந்த நோக்கம்...! அடுத்தபடி அவரே முன்னின்று கூட்டையும் தள்ளிவிட்டார். அந்த அழகிய கூடு. அந்த கிராம முஸ்லிம்களின் அழகுணர்ச்சிக்கும், அறிவுப் பெருக்கத்துக்கும், சிந்தனையின்

சிறப்புக்கும் சான்றுபகரும்(?) அந்த கூடு அசைந்தாடிச் சென்றது.

எங்கிருந்தோ திடுமென ஓடி வந்தார் நாட்டாண்மை.

'அதற்குள் என்ன அவசரம்? யாரடா அது கூடு நகர அனுமதி கொடுத்தது? எவனடா அது போர்வையைப் போர்த்தியது?..' என்ன துணிச்சல்......யார் அவன்...?'' நாட்டாண்மையின் குரலில் அசாத்திய கோபம் பொங்கியது.

''உங்களைக் காணோம்...நான் தான் செய்தேன்...'' அவரது மச்சான் பேசினார்.

''எந்தப் பயலா இருந்தாலும். என்னைக் கேட்காமல எப்படிச் செய்வது?''

''வாயை மூடும்...நீர் என்ன பெரிய மனிதன்.? உங்க அப்பன் வீட்டு ஆஸ்தியா இது...?''

இருவருக்கு மிடையே வாய்ச் சண்டை வலுத்தது; உறவு முறை காற்றிலே பறந்தது. கூடியிருந்த வர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்து கொண்டார்கள். அடுத்த நிமிஷம் கூச்சல் வலுத்தது. மேளம் அடித்தவன் ஒருபுறம் ஓடி னான். நாதசுர வித்துவான் வெற் றுக் குழாயை கையில் பிடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். எக்காளமும், துந்துபியும் இருந்த இடம் தெரியவில்லை. சிங்காரிக் கப்பட்ட கூடு அசையாது நின் றது. சுற்றி நின்ற பொடிசுகள் கூட்டிலே ஆடிக் கொண்டிருந்த கண்ணாடிகளை 'லபக் லபக்' என்று பிடுங்கிக்கொண்டு ஓடினார்கள்.

''இன்றோடு சரி...இனிமேல் நாம் எப்போதுமே சேர்ந்திருக்கப் போவதில்லை...நீங்கள் வேறு; நாங்கள்...இரண்டு கூட்டமும் இப் படி பேசிக்கொண்டது. அன்றிலி ருந்து ஊர் இரண்டாகி விட்டது.

மேற்கே இருந்த நாலைந்து தெருக்களில் உள்ளவர்கள் ஒரு கட்சி; அதுதான் பெரிய கட்சி. பள்ளி வாசல், தர்கா, குளம்— எல்லாம் அவர்களுக்கு—பிரிக்கப் பட்ட இந்தியாவிலே இருந்த கட் டிடங்களைப்போல். இதன் தலைவர் கலந்தரின் தகப்பனார். கிழக்கே யிருந்த நாலைந்து தெரு மகா ஜனங் கள் புதிதாக சிருஷ்டித்த கட்சி தான் 'சின்ன கட்சி'. இவர்கள் தங்களுக்கென்று தனியாக ஒரு பள்ளிவாசல் கட்டிக்கொண்டார் கள். ஒரு குளம் வெட்டிக் கொண் டார்கள். இவையெல்லாம் போதாதென்று ஒரு தர்காவையும் கட்டிக் கொண்டார்கள்—இவை களின் பெயர்கள் முறையே சின்ன பள்ளிவாசல்: சின்னக் குளம்: சின்ன கலந்தர் மஸ்தான் தர்கா. பாவம் கலந்தர் மஸ்தானையும் சின்னவராக ஆக்கிவிட்டார்கள்! இந்த கட்சியின் தலைவர் கதீஜா வின் தகப்பனார்.

ஒரு கட்சிக்காரர் மற்ற கட்சிக் காரரை பார்ப்பதில்லை: பேசுவ தில்லை. தொடர்பு வைத்துக் கொள்ளுவதில்லை. அப்படி மீறி யாராவது நடந்து கொண்டால் நூறு ரூபாய் அபராதம். கலந்தரின் மாமிக்குத் தனது அண்ணனையும், அண்ணன் மகனையும் பார்க்க வேண்டும் என்ற கொள்ளை ஆசை. ஆனால் இந்த ஆசையை அவள் தனது கணவனிடம் சொன் னால் 'பூசை' தான் கிடைக்கும். அதனால் ஓசை போடாமல் அவள் இருந்து வந்தாள், பெருநாளைக் குக்கூட உறவினர்கள் சந்தித்துக் கொள்ள முடியாது. எது எப்படி யிருந்தபோதிலும் இருகட்சிகளும் தனித்தனியே போட்டியிட்டுக் கொண்டு விமரிசையாக கூடு எடுத்து வந்தார்கள். பெரிய கட்சி ஒரு மேளம் கொண்டு வந் தால், சின்ன கட்சி மூன்று மேளம் கொண்டு வரும். சின்ன கட்சி இரண்டு பெண்களைக் கொண்டு வந்து நாட்டிய மாடச்சொன்னால்,

பெரிய கட்சி இரண்டு டஜன் பெண்களைக் கொண்டு வந்து விடும்!

இத்தகைய 'புரட்சியினல்' துன்பப் பட்டவர்கள் பெண்கள்தாம். குறிப்பாக இரண்டு கட்சித் தலைவர்களின் சகதர்மிணிகள் தாம்! கலந்தர் பிறந்ததும், தன் மச்சிக்கு ஒரு பெண் குழந்தை பிறக்காதா என்று ஆண்டவனிடம் கையேந்தி துஆ கேட்டவள் கலந்தரின் தாய். அவளது பிரார்த்தனையை ஆண்டவன் ஏற்றுக்கொண்டான்! பிறகு தான் அவளது மச்சிக்கு கதிஜா பிறந்தாள். சிறுமி கதிஜா மழலை பேசி, அன்ன நடை பயிலும் போது கலந்தரின் தாய் கற்பனைக் கனவுகள் கண்டாள். கதிஜா பெரியவள் ஆகி கலந்தரின் கையைப் பிடித்துக் கொண்டு வாழ்க்கை வெளியில் துள்ளி விளையாடுகிருள்; கவலையில்லாது அவர்கள் வாழ்க்கை நடத்துகிருர்கள். அவர்களுக்குப் பிறக்கப் போகும் முதல் குழந்தை பெண்ணுகத்தான் இருக்க வேண்டும் என்கிருள் அவள். இல்லை ஆண் குழந்தைதான் வேண்டும் என்கிருள் கதிஜாவின் தாய். கடைசியில் குழந்தை பிறக்கிறது: அது பெண் குழந்தை அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. கை கொட்டி சிரிக்கிருள்.

"என்ன இது...சந்தோஷம் தாங்க முடியவில்லை" என்று கேலி செய்து கொண்டே உள்ளே வருகிருர் நாட்டாண்மை. சுய நினைவு பெற்ற அவளுக்குத் தனது பகற் கனவை எண்ணி வெட்கமும் வருத்தமும் இணைந்து வருகிறது.

வயதாக ஆக தனது மாமி மகளைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ள கலந்தருக்கு வாய்ப்பு கிடைத்தது. காலையில் மதரசாவுக்குப் போகும் போதும், பிறகு பள்ளிக்கூடம் போகும் போதும் கதிஜாவை அவன் பார்க்க நேரிடும். குறு குறுத்த கண்களுடன் அழகாக நடை போடும் அவளை அவன் கூர்ந்து நோக்குவான். அவளும் அவனை விழுங்கி விடுவதைப் போல பார்ப்பாள். ஆனல் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ள பயப்படுவார்கள். காரணம் அவர்களது தந்தைகள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பேசுவதை யாராவது பார்த்து விட்டால், பெரியவர்களது கோபத்துக்கு இலக்காக நேரிடும். கலந்தருக்கு வயது 16 நடந்த போது அவன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டான். அப்போதுதான் கதிஜாவைப் பற்றி அவன் ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தான். அவளது அழகு அவனது இளமை உள்ளத்தில் ஆழப் படிந்து விட்டது. அவளை மறப்பது என்பதும் அவனல் முடியாது. இதைப்பற்றித் தனது தந்தையிடமும் சொல்ல முடியாது. கதிஜாவின் தந்தையும் இதற்கு சம்மதிக்க மாட்டார். காரணம் அவர்கள் இரு வேறு துருவத்தில் வசிக்கிருர்கள். இந்த இரு துருவமும் ஒன்ருக இணைய முடியுமா?...

கலந்தர் கதையை முடித்தான். முழுமதி தவழ்ந்து தவழ்ந்து மேலே வந்து கொண்டிருந்தது. கற்பனைக் கெட்டாத அழகு அங்கே துள்ளிச் சிரித்தது.

"கலந்தர்...நம்மைப் போன்ற இளைஞர்களால்தான் இந்தப் பிற்போக்கை ஒழிக்க முடியும். முன்னேற வழி நம்மிடம்தான் இருக்கிறது..."—நான் பேச ஆரம்பித்தேன். கலந்தர் என்னைக் கூர்ந்து நோக்கிஞன்.

"இந்த கிராமத்தில் உயர்நிலைப் பள்ளியில் எத்தனைப்பேர் படிக்கிருர்கள்? கல்லூரியில் எத்தனைப் பேர் படிக்கிருர்கள்?"—நான் கேட்டேன்.

"உயர்நிலைப் பள்ளியில் கிட்டத் தட்ட 50 பேர் இருக்கும். கல்லூரியில் அரை டஜன் பேர் படிக்கிறார்கள்"

"இதுவே போதும். இத்தகைய சீர்கேடான செய்கைகளை யெல்லாம் இளைஞர்கள் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. போதிய கல்வியறிவு இல்லாத காரணத்தினாலும், தேவைப்படும் அளவுக்கு மார்க்க ஞான மில்லாத காரணத்தினாலும் பெரியவர்கள் தவறு செய்து விடுகிறார்கள். அதை இளைஞர்கள் தாம் சாதுரியமாக எடுத்துக்காட்டித் திருத்த வேண்டும்...அது சரி...மாணவர்களும் இத்தகைய கட்சியில் சேர்ந்து கொண்டு பகைமை பாராட்டுகிறார்களோ?"

"அப்படியில்லை. ஆனால் நேருக்கு நேர் சந்தித்து அளவளாவ யோசிக்கிறார்கள். காரணம் பெரியவர்களது கண்டிப்பு..." கலந்தர் சொன்னான்.

"முதலில் மாணவர்களிடையே ஒரு சங்கம் அமைத்து. எல்லோரையும் ஒன்று படுத்த வேண்டும். பிரிந்து விட்ட ஊரை ஒன்று படுத்துவது; அந்தப் பிரிவுக்கு அடிப்படை காரணமாகிய கூடு எடுக்கும் விழாவை நிறுத்துவது; அவ்வியாவுக்கு செய்யப்படும் அர்த்த மற்ற காரியாதிகளை ஒழித்துக் கட்டுவது—இவையே சங்கத்தின் முக்கிய கொள்கைகள். அங்கத்தினர் ஒவ்வொருவரும் தமது வீட்டிலே முதலில் இந்தக் கொள்கையைப் பரப்பி, பெற்றோர்களை ஒப்பச்செய்ய வேண்டும். கொஞ்ச நாளில் ஊரே சீர் திருந்திவிடும்..."

"நீங்கள் சொல்லுவது சரிதான் ...அப்படியே செய்ய கவனிக்கிறேன்." அவனது குரலிலே மகிழ்ச்சி துள்ளியது.

இரண்டு நாளைக்குப் பிறகு ஊருக்கு அருகேயுள்ள மாமரத் தோப்பிலே அந்த ஊரிலுள்ள முக்கியமான இளைஞர்கள் அனைவரும் கூடினார்கள். அவர்களது பார்வையிலே உண்மை ஒளி தென்பட்டது; பேச்சிலே 'உண்மைக்குப் புறம்பான அனைத்தையும் அழித்தொழிப்போம்' என்ற வேகம் காணப்பட்டது. அவர்களைப் பார்த்ததும் என்னையறியாமல் எனது உள்ளத்தில் "எந்த இனத்தில் இளைஞர்களின் உள்ளம் எஃகைப் போலிருக்கிறதோ அந்த இனத்துக்கு வாள் தேவையில்லை" என்ற இக்பாலின் கவிதை யடிகள் பளிச்சிட்டன......

காலம் உருண்டோடியது. அடுத்த வருஷம் நாங்கள் இருவரும் பரீட்சையில் தேர்ச்சியடைந்தோம். வாழ்க்கைப் பாதை எங்கள் இருவரையும் பிரித்தது. அப்போதுகூட கலந்தரிடம் உண்மையான மகிழ்ச்சியைக் காண முடியவில்லை.

"எங்களது சங்கம் தோன்றி ஒரு வருஷம் ஆகப்போகிறது. குறிப்பிடத்தக்க பலன் இல்லை. இந்த கிழங்கள் நமது போக்குக்கு ஒத்து வருவதில்லை. என்றாலும் கதீஜாவை மறக்க முடியவில்லை..." என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டான்.

"இதைப்பற்றி கவலைப்படாதே! இதற்காக உள்ளம் சோர்வடைந்து விடாதே! இளைஞர்களிடையே வேகம் ஊட்டிக்கொண்டே யிரு! வெற்றி நிச்சயம்"—நான் அவனுக்கு உற்சாக மூட்டினேன்.

காற்று வேகமாக வீசியது. என் கையிலிருந்து கலந்தரின் திருமண அழைப்பிதழ் விடுதலையை நாடி துடித்தது. வீசிய காற்று அதற்கு வசிய மருந்து போட்டு விட்டது போலிருக்கிறது!

அழைப்பிதழை மடித்து வைத்தேன். கலந்தரின் கலியாணத்துக்குப் போக முடியுமா? என்ற ஐயம் எழுந்தது. 'வேறு முக்கிய வேலைகள் பல இருக்கின்றன. அவைகளையெல்லாம் போட்டு விட்டு எப்படிப் போவது?" என்று நினைத்துக் கொண்டே காலண்டரைப் புரட்டினேன். கலந்தரின் கலியாணம் நடக்க இருந்த அன்றைய தினம் எனது ஆபீஸில் முக்கியமான நாள்: இன்ஸ்பெக்ஷனுக்காக பெரிய அதிகாரி வருகிறார். என்ன செய்வது?

கலந்தரின் பாக்கி கதையையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனது மனத்தில் வளர்ந்து கொண்டேயிருந்தது. எப்படியும் போகத்தான் வேண்டும் என்ற எண்ணம் உறுதியாயிற்று. உடனே ஆபீஸுக்கு 'லீவு லட்டர்' எழுத ஆரம்பித்தேன்.

"வாங்கோ...வாங்கோ" என்ற வரவேற்பு என்னை திகைக்க வைத்தது. கலந்தர் மகிழ்ச்சிப் பெருக்கத்தில் என் கைகளைப் பிடித்துக் கொண்டு குலுக்கினான். அவனது தகப்பனும், மாமனாராகிய கதிஜாவின் தகப்பனும் அருகில நின்று கொண்டு மகிழ்ச்சியாக பேசிக்கொண்டிருந்தார்கள். ஊர் முக்கியஸ்தர்கள் எல்லோரும் தெருப் பந்தலில் அமர்ந்திருந்தார்கள். இளைஞர் கோஷ்டி எங்கும் விரவி காணப்பட்டது கட்சி வேறுபாடு எங்கே? சின்ன கட்சிக்காரனைக் கண்டதும் மீசையை முறுக்கி விடும் பெரிய கட்சிக்காரன் எங்கே? மாற்றுக்கட்சிக்காரனுடன் பேசினால் எங்கே நூறு ரூபாய் அபராதம் செலுத்த நேரிடுமோ என்ற பயம் எங்கே போய் விட்டது?—எனக்குள்ளேயே இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேன்.

ஆனால் எனது கேள்விகளுக்கு உடனே விடை கிடைக்கவில்லை.

காரணம்? விடைகளுக்குப் பதிலாக தொடர்ந்து கலியாண விருந்துகளே கிடைத்தன. மத்தியானத்துக்கு பிரியாணி. இரவு புலாவ்; காலையில் புரோட்டா, வட்லப்பம், இடியப்ப சோறு—இன்ன பிற. சாப்பிட்ட பிறகு எப்படி ஜீரணிக்கச் செய்வது என்ற பிரச்னைக்கு விடை தேடுவதே கஷ்டமாகப் போய்விட்டபடியால்; எனது கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, ஒரு மாலையில் நானும் கலந்தரும் சந்தித்தோம். கதையின் சுவாரஸ்யமான இறுதிக் கட்டத்தை அவன் சொல்ல ஆரம்பித்தான்.

"எங்கள் சங்கம் ஆரம்பித்த கொஞ்ச நாளைக்கெல்லாம் விஷயம் வெளியில் வர ஆரம்பித்தது. பெரியவர்கள் முதலில ஆத்திரப் பட்டார்கள். நமது உத்தரவுக்கு மீறி கட்சி கட்டுப்பாட்டை உடைத்து விட்டு சங்கம் போடுவதா என்று அவர்கள் மீசையை முறுக்க ஆரம்பித்தார்கள். எங்களை மடக்குவதற்கு வழிபார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் மாலையில் நாங்கள் கூட்டம் போட்டிருந்தோம். திடீரென்று ஊர் முக்கியஸ்தர்கள் எல்லோரும் வந்து எங்களை வளைத்துக்கொண்டார்கள். எத்தனைப் பேர் நாங்கள் இருக்கிறோம் என்று கணக்கு பார்த்து பெயர்களைக் குறித்துக் கொண்டார்கள்.

இரண்டு கட்சியிலும் உள்ள முககியஸ்தர்களின் பையன்கள் பூராவும் எங்கள் சங்கத்தின் மெம்பர்கள். "இந்த மாதிரி கூட்டம் போடுவது சரியல்ல; உங்களுக்கு

தலைக்கு ஐம்பது ரூபாய் அபராதம் விதிக்கப் போகிறேன்" என்று என் அத்தா சொன்னார். இளைஞர்கள் எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். "அபராதம் போட்டுக் கொண்டு, பெரியவர்களிடமிருந்து நீங்களே பணத்தை வசூல் செய்து கொள்ளுங்கள். ஆனால் ஒன்று. வசூல் செய்த பணத்தைக் கொண்டு கூடு எடுக்காதீர்கள்.' இளைஞர்களின் எக்காளக் குரல் வேகமாக ஒலித்தது. பெரியவர்கள் செயலற்று நின்றார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் போர் முனை ஏற்பட்டது. "அந்த சங்கத்தில் சேராதே; நல்ல பிள்ளையாய் இரு" என்று ஒவ்வொரு தந்தையும் தமது மகனுக்கு புத்திமதி சொல்ல ஆரம்பித்தார், "அத்தா ...வீணாக ஊரை துண்டு போட்டு விட்டீர்கள். கூடு எடுப்பதை நிறுத்திவிடுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் செய்வது வேறு" என்று ஒவ்வொரு பையனும் தனது தந்தையை எதிர்த்துப் பேசினான். நாளாக ஆக இளைஞரது கோஷ்டி வேகமடைந்து விட்டது. உறுப்பினர்கள் அதிகமாகி வந்தார்கள்.

எங்கள் வீட்டிலும் இதே நிலை. எனது கலியாணப் பேச்சு தொடர்ந்து பேசப்பட்டது "பையனுக்கு வயதாகி விட்டது, அவனுக்கு காலா காலத்தில் ஒரு கட்டையைக் கட்டிப்போட வேண்டாமா?." எனது அத்தா இப்படிப் பேச ஆரம்பித்தார். "கட்டை எதற்கு?. கிளியாட்டம் இருக்கே கதிஜா...அவளைத்தான் கட்டணும்." —என் அம்மாவின் குரல்! அத்தாவுக்கு கோபம் வந்துவிட்டது. "அந்தப் பேச்சை வாயில் எடுக்காதே. எனது எதிரியின் மகளை எனது மகன் கட்டிக்கொள்ளுவதா?" அத்தா சீறினார். எனது பதிலை எதிர் நோக்குபவரை போல என்னைப் பார்த்தார்.

"அத்தா...கதிஜாவைத் தவி நான் வேறு யாரையுமே கலியணம் செய்து கொள்ள மாட்டேன். இது உறுதி..." என் குரலி என்னையுமறியாமல் வேகம் வந் விட்டது.

அத்தா மேலும் கீழும் உலவி கொண்டிருந்தார் தமது ஒ மகனது பிடிவாதத்துக்கு அவ இணங்கமாட்டாரா?

கதிஜாவும் பிடிவாதமாகவே இருந்தாள்.

"கதிஜாவை கோடிவீட்டு மு பக்கனிக்கு பெண் கேட்கிறார்கள், கொடுத்துவிடலாமென்று நினை கிறேன்..." என்று அவளது தந்தை பேசிக்கொண்டிருந்தார். அவளது அம்மா மௌனமாக உ கார்ந்திருந்தாள். கணவனிட எதிர்த்துப்பேச அவளுக்கு பய தந்தையின் பேச்சை கவனித்து கொண்டு உள்ளேயிருந்த கதிஜா வேகமாக வெளியில் வந்தாள். "அத்தா...எனக்காக நீங்கள் மா பிள்ளை பார்க்க வேண்டாம். ம சானைத் தவிர வேறுயாரையு நான் கட்டிக்கொள்ள மாட்டேன். அப்படி மீறி என்னை வற்புறுத்தி ல், என்னை பிறகு பார்க்க மு யாது" அவள் வீரத்தோடு பேசி ள். அவளது குரலில் தொனித்த வேகத்தைக் கண்டு, சின்ன கட்சித் தலைவர் அசந்து போய்வி டார்.

"அம்மா கதிஜா...... உன விருப்பத்துக்கு மாறாக நான் நடக் மாட்டேன். நீ கவலைப் படாதே..." என்று அவர் மகளுக்கு ஆறுத கூறினார்.

இளைஞர்களின் 'சேஷ்டை' அ கரித்து வந்தது. பையன்கள கோரிக்கைக்கு இணங்காவிட்டா விபரீத விளைவுகள் ஏற்பட

டுமோ என்ற பயம் பெரியவர்க
ிடையே ஆட்சி புரிந்தது. தமது
பயனைப் பாதுகாக்க வேண்டும்
ன்ற கவலை ஒவ்வொரு தந்தைக்
ம் உண்டு அல்லவா? இறுதி
ாக இரண்டு கட்சிகளும் தனித்
னியே கூடி ஆலோசனை செய்ய
ரம்பித்தன.

அப்பொழுதுதான் ஒரு முக்கிய
ம்பவம் நடந்தது. கற்றுத் தெரிந்த
மௌலானா ஒருவர் அந்த ஊருக்கு
ந்திருந்தார். இரண்டு ஆண்டு
ளுக்கு முன்பு அந்த ஊருக்கு
ந்து மக்களது அறியாமையைக்
ண்டித்துப் பேசியதற்காக
ரண்டு கட்சிக்காரர்களும் அவ
க்கு சாப்பாடுகூட கொடுக்காத
டி துரத்தியடித்ததையும் பொருட்
டுத்தாமல் திரும்பவும் வந்திருந்
ார். முதல் நாள் பெரிய பள்ளி
ாசலில் அவர் சொற்பொழிவாற்
ினர். "கட்சியாகப் பிரிந்து
ாழ்வது நமது சமயத்தின்
காட்பாடு அல்ல. எத்தனை
ருத்து வேறுபாடு இருந்தாலும்
தை தீர்த்துக்கொண்டு நாம்
ற்றுமையாக வாழவேண்டும்.
மலும். இளைஞர்கள் சொல்லு
தைப் போல கூடு எடுப்பது
பான்ற அறிவுக்குப் பொருத்த
ில்லாத செயல்களையும் நிறுத்தி
ிடத்தான் வேண்டும்" என்று
வர் பேசினர். மறுநாள் சின்ன
ள்ளி வாசலிலும் இவ்விதமே
பசினர். அதன் விளைவாக.........

கலந்தர் பேச்சை முடிக்கவில்லை
ிரைக்குப் பின்னால் மெட்டியின்
லி கேட்டது. அதைத் தொடர்ந்து
லரின் மணம் தவழ்ந்தது. கலந்
ர் வேகமாக எழுந்தான். "மச்
ான்... தேத்தண்ணீர் கொண்டு
ந்தேன்..." என்ற மெல்லிய
பெண்குரல் தெளிவாக ஒலித்தது.
தீஜாவின்மேல் எனக்கு கோபம்
ந்தது. சுவாரஸ்யமான கதையை
டுவே நிறுத்திவிட அவள்தானே
ாரணம்? வேகமாக தேனீர்
கோப்பையை காலி செய்தேன்.
திரும்பவும் கலந்தர் ஆரம்பித்தான்:
"அன்று காலையில் எங்கள் ஊரில்
விநோதம் நிகழ்ந்தது காலைத்
தொழுகைக்கு மக்களை எழுப்ப
நகரா ஓயாது ஒலித்தது. அதான்
சொல்லிய முஅதின் குரலில்
அன்று புது வேகம் தொனித்தது.
பெரிய பள்ளிவாசலில் ஊர் ஆண்
கள் பூராவும் கூடினர்கள். கட்
சிப் பாகுபாடு மறைந்தது: குரோ
தம் ஒழிந்தது. பகைமை தொலைந்
தது. 'அல்லாஹு அக்பர்' என்ற
உணர்ச்சிக் குரல் ஏகோபித்த
எழுந்தபோது ஊர்மக்கள் முழு
வதும் புதிய மனிதர்கள் ஆனர்
கள். தொழுகை முடிந்ததும் ஒரு
வரை யொருவர் கட்டிக்கொண்
டார்கள். பகைமையை மறந்து
மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டார்
கள். எனது அத்தாவும் மாமா
வும் வெகு குஷியாக பேசிக்
கொண்டிருந்தார்கள்......

"துல்ஹஜ் மாதம் பிறந்துவிட்
டது கூடு எடுக்க வேண்டுமா?"
யாரோ ஒருவர் இந்தப் பேச்சைக்
கிளப்பினர்.

"கூடாது" இனிமேல் இந்தப்
பேச்சையே எடுக்கக்கூடாது.
இதன் கசப்பான விளைவை நாம்
நன்கு அனுபவித்துவிட்டோம்.
வம்ச பரம்பரைக்கு இந்தப்
பேச்சே வேண்டாம்... அவுலியா
வின் பேரைச் சொல்லிக்கொண்டு
அனுச்சாரம் செய்வதை இன்
றோடு முடித்துக்கொண்டோம்..."
என் அத்தாவின் பேச்சைக்கேட்டு
நான் வியப்படைந்து விட்டேன்.

"ஆமாம்... அதுதான் சரி...
கூடு எடுக்கக்கூடிய அந்த நாளில்
ஒரு முக்கிய சம்பவம் இடம்
பெறப் போகிறது அன்றைய
தினம் கலந்தருக்கும் கதீஜாவுக்கும்
திருமணம் செய்வதாக முடிவு
செய்திருக்கிறோம் நமக்கெல்லாம்
உண்மையை எடுத்துச் சொல்லும்

வகையில் கலந்தரும் அவனது கோஷ்டியும் மிகவும் உதவிசெய்திருக்கிறார்கள். என் மாமா உணர்ச்சியோடு பேசினார். என்னை மகிழ்ச்சிப் புயல் சுற்றிச் சுற்றி வீசியது.

கலந்தர் கதையை முடித்தான்.

"கலந்தர்... இது நமது உலகம்... இளைஞர் உலகம். நாம் நினைத்தால் எந்த நல்ல காரியத்தையும் திறம்பட முடித்துக் காட்டலாம்... இந்த விஷயத்தில் உன்னையும் கதீஜாவையும் நான் பாராட்ட வேண்டும்"

கலந்தர் சிரித்தான். 'இருக்' கென்ற சிரிப்பு திரைக்குப் பின்னும் விருந்து கேட்டது. அந்த தம்பதிகளின் மோகனச் சிரிப்பிலே வெற்றி மிக்க இளம் உள்ளங்களின் வேகம் இருந்தது ★ ★

நேர்த்தியான தோற்றத்திற்கும்,
நீடித்த உழைப்பிற்கும், நியாயமான விலைக்கும்,

ராஜாளி மார்க்கு

கைலிகளையே உபயோகியுங்கள்.
ரிஜிஸ்டர் டிரேட் மார்க் நெ. 169403

37.C.MANNADY ST., MADRAS-1.

ராஜாளி மார்க் கைக்குட்டைகள்
எங்கள் விசேஷ தயாரிப்பு

வி. எம். முஹம்மது யூசுப்,
37—சி. மண்ணடி தெரு, சென்னை-1.

எகிப்தின் முன்னாள்

மன்னர் பாரூக்

அன்றும் இன்றும்

எம். கே. ஜமான்

வெள்ளிக் கிண்ணங்களில் வகை வகையான மது ரசங்களை வேல்விழி மாதர்கள் வார்த்துக் கொடுக்க, பட்டு மெத்தை விரித்த கட்டிலை விட்டெழுந்து, பளிங்குக் கல் மின்னுகின்ற தொட்டியிலே வந்தமர்ந்து, அந்த இன்பச் சூழலிலே தன்னிலை மறந்து, கன்னியரின் கரம் பட்ட மதுவினிலே ஒரு தனிச் சுவை கண்டு விட்டதுபோல் உள்ளம் விரும்பும் வரை உண்டு உண்டு திளைத்த எகிப்தின் முன்னர் பாரூக் உல்லாச வானிலே சிங்காரப் பறவையாக சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த காலம் அது. 1952-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்துக்கு முன்பு. பின்னர், ஒரு நாள் நள்ளிரவில் நஜீப் என்னும் புரட்சிப் பெருமகனால் அந்தச் சிங்காரப் பறவையின் சிறகொடிக்கப்பட்டது. விளைவு? நாடாண்டுவந்த மன்னர் நாட்டையே விட்டு ஓடவேண்டியதாயிற்று. மன்னர் பாரூக் கனவிலேகூட எண்ணியிராத நிகழ்ச்சி கணப்போதில் நடந்தேறியது நானிலத்து மக்களெல்லாம் நன்கறிந்த செய்தியாகும்.



படாடோபப் பிரியர் பாரூக்

அன்று முதல் பாரூக் எகிப்தைத் துறந்து இத்தாலியைநாடி, ஆங்குள்ள கேப்ரி என்ற தீவகத்தில்-புகலிடம் பெற்றார். அரசக் கட்டிலையும், அந்தப் புரத்தினையும், அருமை நாட்டினையும் விட்டகன்று அயலாரின் நாட்டைச் சென்றடைந்தபோதும் இவர் தமது வீண் செலவுகளையும் ஆடம்பரங்களையும் விட்டொழிக்கவில்லை.

பாரூக் முதன் முதலாகக் கேப்ரித் தீவையடைந்த கப்பலை விட்

டிறங்கும்போது எண்ணற்ற ஏவலாளர்கள் புடைசூழச் சென்று, அங்குள்ள மிகப் பெரிய ஆடம்பரமான ஹோட்டலில் தமக்கும் தம்மைச் சேர்ந்தார்க்கும் இடம் தேடிக்கொண்டார். பின்னர் ரோம் நகருக்குத் தெற்கே ஆல் பைன் குன்றுகளின் மீதுள்ள 42 அறைகள் கொண்ட ஒரு வீட்டை வாடகைக்கு ஒப்புக்கொண்டார். பணத்தைத் தாராளமாக செலவு செய்தார். தமக்கென இரண்டு ஜெர்மன் மோட்டார்களும், ஒரு பெரிய அமெரிக்கன் மோட்டாரும் வைத்திருந்தார். இங்கிருந்த போது இவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,15,000 செலவு ஏற்பட்டதாம்! இரண்டு ஆண்டுகள் இவ்வாறு கழிந்த பின்னர் நகரின் நடுப் பகுதியிலுள்ள ஐந்து அறைகள் கொண்ட ஒரு உயர்ந்த இடத்திற்குத் தமது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். இந்த இடத்திற்கு வாடகை மாத்திரம் ஒரு வருடத்திற்கு ரூ. 770 செலுத்தி வந்துள்ளார்.

1958-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை இவருடன் இருந்துவந்த இளைய மனைவி நாரிமன் ஸாதிக் பாருக்குடன் மணவிலக்கு செய்துகொண்டு எகிப்துக்கே மீண்டும் சென்றுவிட்ட பிறகு இவர் அங்குள்ள 'நைட் கிளப்'புக்கு அடிக்கடி சென்று, பல்வேறு நாட்டுப் பாவையர்களுடன் பொழுதைக் கழித்து வந்தார். அப்போதுங்கூட இவருக்கு ஆறு மெய்காப்பாளர்களும், ஒரு சிறு பணியாளர் சேனையும் இருந்து வந்தனர்.

முதல் மனைவி ஃபரீதாவுக்குப் பிறந்த மூன்று பெண் குழந்தைகளான 18 வயதான ஃபெரியல், 17 வயதான ஃபவ்ஜியா, 12 வயதான ஃபாதியா ஆகிய மூவருக்கும், இளைய மனைவிக்குப் பிறந்த புதல்வன் ஃபுவாதுக்கும் தனித்தனி நர்ஸுகள் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் மூன்றாண்டுகளுக்குப் பின்னர் இவர் தமது ஆடம்பரப் போக்கினையும், அவசியமற்ற செலவுகளையும் முற்றிலும் மாற்றியமைத்துக் கொண்டார். அப்போது தமது கேளிக்கைகளையெல்லாம் துறந்து அளவோடு செலவு செய்பவராகிவிட்டார். இரண்டு பாதுகாவலர், ஒரு காரோட்டுபவர், ஒரு பணியாள் ஆகிய நால்வர் தவிர மற்றவர்களையெல்லாம் குறைத்துக் கொண்டார். ஒரு பெரிய கார் தான் இப்போது உள்ளது. குழந்தைகள் நால்வரையும் சுவிட்ஜர்லாந்திற்குக் கல்வி பெற அனுப்பி, இரண்டு அல்பேனியர்களின் கண் காணிப்பில் விட்டிருக்கிறார். முதல் மனைவியான ஃபரீதா, பாருக்கின் அனுமதி பெற்றுப் பலமுறை தனது குழந்தைகளை பார்த்து வந்துள்ளார். நாரிமன் ஸாதிக் வேறுபட்டுப் பிரிந்து சென்றபோது ஒன்றரை வயதினளாக இருந்த இளவரசன்

ஃபுவாத் இப்போது ஐந்து வயதாகி அழகே உருவாக விளங்குகிறான். ஆங்கிலம், அரபி, இத்தாலி முதலிய மொழிகளில் திறமையாகப் பேசுகிறான். முன்னாள் மன்னர் பாரூக், தமது புதல்வன் ஃபுவாத் ஒரு நாள் எகிப்து நாட்டுக்குரிய மணிமுடியை அணிவான் என்பதில் பெரும் நம்பிக்கை வைத்துள்ளார்.

1953-ஆம் ஆண்டில் கோடை காலத்தில் கேப்ரி தீவிற்கு 'மிஸ் நேபிள்ஸ்' என்ற பட்டத்துடன் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துச் செல்ல இங்கு வந்த இர்மா கேப்ஸ் என்ற மாதுவை பாரூக் சந்திக்க நேர்ந்தது. மாஜீ மன்னர் இப்போது 'நைட்கிளப்'புக்கு மிக அரிதாகச் செல்கிறார். அத்துடன் இர்மா என்ற அந்த ஒரே பெண்ணுடன் தான் காணப்படுகிறார். மது வருந்தும் பழக்கத்தை அறவே ஒழித்துவிட்டு அதற்கு ஈடாக ஆரஞ்சு ரசமே அருந்தி வருகிறார். இவர் தம்முடைய நண்பர்களுடன் கலந்து உறவாடும் போது, தம்முடைய பணம் குறைந்து வருவதைத் தாம் உணர்ந்து வருவதாகவும், தாம் வியாபாரம் செய்ய விரும்புவதாகவும் கூறுகின்றாராம்! ஆனால் இவர் எகிப்தைவிட்டு வெளியேறும்போது எவ்வளவு மதிப்புள்ள பொருள் வைத்திருந்தார் என்று எந்தக் குறிப்புகளையும் கொண்டு கணக்கிட இயலவில்லை.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று இத்தாலிய அரசாங்கத்திடம் இவர் வாக்குறுதி அளித்துள்ளார். ஆனாலும் எகிப்தில் நிகழும் மாற்றங்களையும், அரசியல் நிகழ்ச்சிகளையும் இடைவிடாது கவனித்துவருகிறார். அண்மையில் நிகழ்ந்த சூயஸ் குழப்பத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மிக்க ஆர்வத்துடன் அமைதியாகக் கவனித்து வந்துள்ளார். ஆனால் ஒரே ஒரு முறை கடந்த ஆண்டு செப்டம்பரில் சூயஸ் கால்வாயைக் கர்னல் நாஸர் நாட்டுடைமையாக்கியவுடன் பிரிட்டனிலும், பிரான்ஸிலும் எழுந்த குழப்பங் கண்ட பாரூக், அமெரிக்க ஜனாதிபதி, பிரஞ்சு ஜனாதிபதி, பிரிட்டிஷ் பிரதமர் ஆகிய மூவருக்கும் சூயஸ் நெருக்கடி குறித்துக் கடிதம் எழுதினார். அதில், "எகிப்திய அரசாங்கத்தின் செய்கைகளுக்காக எகிப்தின் மக்கள் பொறுப்பாளியாக முடியாது. அரசாங்கத்தின் இந்த செயலுக்கு அந்நாட்டு மக்களைப் பொறுப்பாளிக ளாக்காதீர்கள். இப்போது ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துக்கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலிய அரசாங்கத்துக்குத் தாம் அளித்துள்ள வாக்குறுதியை மீறக்கூடாதென்ற காரணத்தால், இந்தக் கடிதத்தை இம் முப்பெருந் தலைவர்களுக்கு எழுதுவதற்கென இவர் பாரீஸ் சென்று, சிலமணி நேரத்தில் தமது வேலையை முடித்துக் கொண்டு மீண்டும் இத்தாலிக்குத் திரும்பினாராம். ★ ★

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன்; மலேயா முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு, கோடிக் கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து, தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எல்லாவித படை, சொரி சிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுக் கடி, சேற்றுப்புண், எச்சிற்றழும்பு, எக்ஸிமா முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

சிறிய சைஸ் பாட்டல் 1-க்கு விலே அணு 0—6—0.
பெரிய „ „ „ „ „ 0-12—0.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை. தெ. ரயில்வே.

மலேயா (பினங்கு ஏஜெண்ட்)

ஆர். ஏ. அஹமதுஷா முஹம்மது சுல்தான் அன் கம்பெனி.,

101 பினங்கு ஸ்ட்ரீட், பினங்கு.

மலேயா (சிங்கப்பூர் ஏஜெண்ட்)

ஏ. சையத் முஹம்மது கம்பெனி,

178, கிராஸ் ஸ்ட்ரீட்; சிங்கப்பூர். டெலிபோன் நெ. 26916.

இலங்கை (கொழும்பு ஏஜெண்ட்)

எம். சி. ஏ. ஹூதா அன் கம்பெனி,

20, டாம் ஸ்ட்ரீட், கொழும்பு.

இலங்கை (நீர் கொழும்பில் கிடைக்குமிடம்)

ஏ. எம். ஏல். அலியா மரைக்காயர் அன் ஸன்ஸ், பிரபல மருந்துக் கடை,

160, மெயின் வீதி, நீர் கொழும்பு, சிலோன்.

அன்புப் பரிசு

ஜே.எம்.கமாலுத்தீன்

அந்தக் கடிதத்தைப் படித்த
ஸன் ராவுத்தர் கதறிக் கதறி
முதார். நேற்றுவரை மிடுக்காக
டை போட்ட மகன் இன்று
ணமாகிவிட்டானென்றால் பெற்
வருக்கு எப்படி இருக்கும்?
ல்லாம் அவரால் வந்த வினை
னே!

''இன்னும் இரண்டே வருஷம்
டும் என்னைப் படிக்க வையுங்க
த்தா, பீ. ஏ. பட்டம் வந்துடும்.
ண்டர்மீடியட்டிலே நிறுத்துவதி
ல் ஒரு பிரயோஜனமும் இல்லே.
ரு நல்ல வேலைக்கும் போக முடி
து' என்று எவ்வளவோ
கஞ்சினானே ஜமால். அவர்
காஞ்சமும் மசியவில்லையே!

அவரிடம் பணம் இல்லையா
ன்ன? பூர்வீகச் சொத்தோடு
தச் சொத்தும் சேர்ந்து ஊரில்
இப்போதுதான் வாழ்ந்தார்.
னால் அவருடையகருமித்தனமும்,
ரட்டுச் சுபாவமும் அறிவையே
றைத்துவிட்டன. தன் பாட்டன்,
ப்பாட்டன் எல்லோரும் கொடிக்
ல் விவசாயிகள்; தானும் அப்
த்தான், தன் மகனும் தன்னைப்
போலவே வரவேண்டுமென்று அவர் விரும்பினார்.

"ஒரு சல்லிக் காசுக்கூட இனிமே உன் படிப்புக்குத்தர மாட்டேன். படிக்க ஆசையிருந்தா எங்கேயாவது பிச்சை எடுத்துப் படி. ஆனா இந்த வீட்டுப் பக்கம் திரும்பக்கூடாது" என்று ஹஸன் ராவுத்தர் குதியாய்க் குதித்தபோது ஜமால் எப்படியெல்லாம் தேம்பினான்! காய்க்கப் போற நேரத்திலே மரத்தை வெட்டி சாய்ப்பதைப் போல, பட்ட கஷ்டத்தின் பலனை அடையப் போகும் காலத்தில் 'படிப்பைப் பாதியிலே நிறுத்து' என்றால் அவன் இதயம் எப்படித் தாங்கும்?

பட்டம் பெறத் துடித்துக்கொண்டிருந்தவனைப் பட்டை எந்தச் சொன்னார் தந்தை. சில பெற்றோர்கள் பிள்ளைகளைப் புறக்கணித்து அலட்சியமாகச் செய்யும் சில காரியங்கள் அவர்கள் உள்ளத்தில் எவ்வளவு பெரிய முத்திரையை உண்டு பண்ணிவிடுகின்றன!

ஜமால் ஒரு துண்டுக் கடுதாசி எழுதி வைத்துவிட்டு உயிரையே மாய்த்துக்கொண்டான். பொய்கை நதி வெள்ளம் அவனை யாரும் பார்க்காதபடி எங்கோ எடுத்துச் சென்றுவிட்டது. இலட்சியக் கனவு இடிந்து விழுந்துவிட்ட போது இனியும இந்த உயிர் ஏன் என்று அவன் வெறுத்திருக்க வேண்டும்.

ஜமால் போய்விட்டான். ஆனால் ஹஸன் ராவுத்தரின் உள்ளத்தில் பதிந்த அதிர்ச்சி நீங்கா இடம் பெற்று விட்டது. அவர் மனச் சாட்சியோ அவர் உள்ளத்தைக் குத்திக் குடைந்து கொண்டிருந்தது தன் மகன் தற்கொலை செய்து கொண்டதற்குத் தானே காரணமென்பதை எண்ணி, எண்ணி உருகினார். 'மகனைக் கொன்ற மகா பாவி' யென்று ஊரே தூற்றியது.

ஒரு நாள் பள்ளிக் குளத்திற்குக் குளிக்கப் போயிருந்த ஹஸன் ராவுத்தர், அங்கே தன் மகனைப்பற்றிச் சிலர் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருப்பதைக்கேட்க நேரிட்டது.

"என்னங்க! ஜமால் பேயா அலையிறானே தெரியுமா?"

"தற்கொலைப் பண்ணிக்கிட்டவன் பேயா போறதிலே ஆச்சரியம் என்னப்பா இருக்கு?

"அதை ஏன் கேக்கறீங்க போங்க! நாங்க ரெண்டாவது ஆட்டம் சினிமாபார்த்துவிட்டு வண்டியிலே வந்தோம். 'லயங்கரை' கிட்டே வந்ததும் எதையோ கண்டு மாடு மிரண்டுச்சி. எங்கும் ஒரே இருட்டுவண்டியை நிறுத்திட்டோம். அப்போ அந்த இருட்டிலே எவ்வளவு நல்லா அந்தப் பே
பாடினது தெரியுமா? அ
நிச்சயமா ஜமால் குரலேதான்
திடீர்னு பாருங்க ஒரு பெரி
அலறலோடு மடமடன்னு மர
முறியிறமாதிரி இருந்தது. நாங்
பயந்து நடுங்கிப் போயிட்டோம்
நல்ல வேளையா ரெண்டு மூ
பேரு அங்கே ஸைக்கிள்ளே வந்
தாலே நாங்க உயிர்பிழைச்சோம்!"

"பாவம்! யாரைப் பழிவாங்
அலையுறானோ?"

ஹஸன் ராவுத்தரால் அதற்
மேல் கேட்க முடியவில்
அரை குறையாகக்
குளித்துவிட்டு உடனே
வீட்டுக்குத் திரும்பினா

ஆனால் வழியிலே அ
ரை' பார்த்த பக்கத்
வீட்டு ரெஜாக், 'உங்
மகள் ரேஹானுக்
குழந்தை பிறந்து இறந்
போச்சுங்க. சீக்கிரம் கூ
பிட்டு வரச்சொன்னாங்க
என்று சொன்னபோ

அப்படியே அதிர்ந்துவிட்டார்.

"யாரைப் பழிவாங்க அலைய றானோ?" என்று குளத்தங் கரை யில் சிலர் பேசிக்கொண்டது உண் மைதானா? அவர் மனம் காற்றில் சுழலும் காற்றாடியாக சுழன்றது. வீட்டுக்கு ஓடினார்.

பிரசவத்துக்கு வந்த பெண் ணின் மாமியார், "எனக்கு அப் போதே தெரியும். அந்தப் பாழாய்ப் போனவன் நடமாடுற வீட்டிலே பிரசவப் பெண் இருக்க வேண்டான்னு தலைதலைன்னு அடிச் சுக்கிட்டேன். தங்கச் சிலையாட் டம் பிறந்த குழந்தையின் உயிரை உறிஞ்சிட்டானே பாவி! ஊம்! இன்னும் என்னென்ன இந்த வீட் டிலே நடக்கப் போவுதோ ஆண்ட வனே!" என்று சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துத் துடித்துப் போய்விட்டார். அவ ரால் எப்படிப் பேச முடியும்?

எங்கே பார்த்தாலும் இதே பேச்சு. பொழுது சாய்ந்தால் 'லயங்கரைப்' பக்கம் ஜனங்கள் போகவே பயப்பட்டார்கள். பெண்களிடம் இந்தச் சேதி பரவி னால் கேட்கவும் வேண்டுமா?

கஷ்டம் வரும் காலத்தில்தான் மனிதன் ஆட்டுவிக்கப் படும் பம்பரமாகின்றான்; யார் எதைச் சொன்னா லும் ஏற்றுக்கொள்கின் றான்; நம்புகின்றான்; ஹஸன்ராவுத் தருக்கு அடுக்கடுக்காகக் கஷ்டம் நேர்ந்திருப்பதைத் தெரிந்து கொண்டவர் பலர், "உங்க மக னோட ஆவி உங்க வீட்டிலே அலையிற வரையிலும் உங்களுக்கு நிம்மதி ஏற்படாது பாவா! நீங்க சம்மதிச்சா என் மந்திரத்தாலே அதை விரட்டிக் காட்டுகிறேன்!" என்று மந்திரம் ஜபிக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஹஸன் ராவுத்தரின் வீடு மந் திரவாதிகளின் குகையாக மாறி யது. சாம்பிராணி புகையின் நெடியும், சாப்பாடு வாசனையும். அவர் வீட்டில் இல்லாத நேர மில்லை. பேயை ஓட்டுவதாகச் சொல்லி வயிறு நிறைய முழுங்கி வீட்டு பணத்தையும் கறந்தார்கள். மகனைப் படிக்கவைத்தால் பெட் டிப் பணம் குறையுமே யென்று பயந்த அவர் பேயை ஓட்ட வாரி, வாரி கொடுத்தார். இப்படி மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டாலும், பலன் என்னவோ பூஜ்யந்தான்! இல் லையானால் ரேஹானுடைய இரண் டாவது குழந்தையும் செத்துப் பிறப்பானேன்?

அப்போதுதான் சென்னையி லிருந்த உறவினர் ஒருவர் ராவுத்தருக் குக் கடிதம் எழுதி யிருந்தார். பிரசவ கேஸில் தேர்ச்சி பெற்ற ஒரு லேடி டாக்டர் சென் னையில் இருப்பதா கவும், ரேஹானை அழைத்துக் கொண்டு வந்தால் காண்பிக்கலா மென்றும் அவர் எழுதி யிருந்தார். அதுவரை டாக்ட ரிடம் காண்பிக்க வேண்டு மென்று அவர் விரும்பவே யில்லை. காரணம் அவர் கிராமத்

துக்கும் பிரசவ ஆஸ்பத்திரி இருந்த ஊருக்கும் இருபது மைல் இருந்தது. அங்கும் டாக்டர் இருந்தால் மருந்து இருக்காது; மருந்து இருந்தால் டாக்டர் இருக்கமாட்டார்! தன் மகளுக்கு 'சைத்தான் பார்வை' யிருப்பதாக அவர் நம்பிக்கொண்டிருந்ததால் வேறு சிகிச்சையைப்பற்றி அதுவரை அவர் சிந்திக்கவேயில்லை. கடைசியில் ஒருவாறாக சென்னைக்குப் புறப்பட்டுவிட்டார்.

∴ ∴ ∴

மதராஸ் ஜெனரல் ஆஸ்பத்திரியின் ஒவ்வொரு பகுதியாகக் கடந்து லேடி டாக்டர் ரூமைத் தேடி தன் மகளுடன் போய்க் கொண்டிருந்த ஹஸன் ராவுத்தர் மருந்துகளின் நெடியையும், நோயாளிகளின் முனகலையும் சகிக்க முடியாமல் மூச்சுத் திணறிப் போய்விட்டார்.

ரேஹானாவை வெகு நேரம் வரைப் பரிசோதித்த லேடி டாக்டர் வெளியே வந்ததும், தனக்காகக் காத்து நின்ற இரண்டு நர்ஸுகளிடம் அரை மணிவரை ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தாள். லேடி டாக்டர் சொல்வதை அவர்கள் ஆச்சரியத்தோடும், ஆவலோடும் கேட்பதிலிருந்து 'ரொம்ப முக்கியமான விஷயம் போலிருக்கு' மென்று ஹஸன் ராவுத்தர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

இரண்டு நர்ஸுகளும் வெளியே போன பின்னர் லேடி டாக்டர் ரேஹானாவை உற்று கவனித்துவிட்டு மறுபடியும் ஹஸன் ராவுத்தரைப் பார்த்தாள். அதில் அர்த்தம் இல்லாமலில்லை. இரண்டு நிமிஷ மௌனத்துக்குப் பிறகு லேடி டாக்டர், ராவுத்தரைப் பார்த்து, "உங்க மகளை ஒரு மாசத்துக்கு என் பார்வையிலே வச்சிருக்கணும். நரம்பு ரொம்ப கெட்டு போயிருக்கு. இப்பவே கவனிக்கவில்லைன்னு பிறக்கும் குழந்தையை இந்தத் தடவையும் உயிரோடு பார்க்க முடியாது" என்றாள்.

"அதுக்கென்ன! நீங்க சொல்றதை செய்யக் காத்திருக்கேன். மகளுக்குப் பிறக்கும் குழந்தையைக் காப்பாற்றிக் கொடுப்பது உங்கள் கடமை. பணச் செலவைப்பற்றி யோசிக்க வேண்டாம்..." என்று சொல்லிவிட்டு ஐம்பது ரூபாய் நோட்டை டாக்டரிடம் நீட்டினார்.

லேடி டாக்டர் சிரித்துக் கொண்டே, "இந்த கெட்ட பழக்கமெல்லாம் கூடாதுங்க. எங்களுக்கு சம்பளம் எதுக்கு தர்றாங்க? என் சொந்த மகளைப்போல உங்க பெண்ணை கவனிச்சுக்கிறேன். சரிதானே. பணத்தைப் பையிலே போடுங்க" யென்று சொல்லி விட்டு, 'நமக்கு சொந்த ஊர் எதுவோ?' என்று ஆரம்பித்த லேடி டாக்டர். ராவுத்தரைப் பற்றியும், தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்லப்பட்ட அவர் மகனைப் பற்றியும் துருவித் துருவி கேள்வி கேட்டது ஹஸன் ராவுத்தருக்கு வியப்பாயிருந்தது. தன் மகனைப் பற்றி ரேஹானா லேடி டாக்டரிடம் சுருக்கமாகச் சொல்லியிருந்ததை, விளக்கமாக எதையும் மறைக்காமல் சொல்லி விட்டார்.

"பாவம்! படகு எவ்வளவு தான் உயர்ந்ததாயினும் சுக்கான் சரிவா இயங்க வில்லையென்றால் படகிற்கு என்றும் ஆபத்துதான். குடும்பத் தலைவர்கள் சுக்கானைப் போன்றவர்கள். எப்பேர்ப்பட்ட துயர் வந்தாலும், படபடப்பில்லாமல் குடும்பப் படகை குறி பார்த்துச் செலுத்த வேண்டும். முன் கோபந்தான் மனிதனின் எல்லாத் தீமைக்கும் காரணம், இல்லையா

ரேஹான்...?''

''நீங்கதாம்மா அத்தாவுக்குச் சொல்லணும்; சின்ன விஷயத்துக்கெல்லாம் கோபப்பட்டுக் கொள்கிறுங்க. கோபமே அவுங்க பலத்தைக் குறைச்சிடுச்சி'' என்று ரேஹானும் தன் பங்கிற்குச் சொல்லவே ஹஸன் ராவுத்தர் பதில் பேசவில்லை.

லேடி டாக்டர் மறுபடியும், ''ஏன் ரேஹான்! இந்தப் பேய் பிசாசு இதிலெல்லாம் உங்க அத்தாவைப்போல உனக்கும் நம்பிக்கையுண்டாம்மா... எனக்கென்னமோ இதிலெல்லாம் நம்பிக்கையில்லை. அதோட உன் தம்பி தற்கொலை செய்துகொண்டிருப்பானு வென்பதே எனக்கு சந்தேகமாயிருக்கு. ஆற்றிலே விழுந்திருந்தா எப்படியும் பிரேதம் கிடைச்சிருக்குமே?'' என்று சொல்லிவிட்டு ரேஹானையும், ராவுத்தரையும் கூர்ந்து கவனித்தாள்.

ரேஹான் பதில் பேசவில்லை. ஒரு பெருமூச்சுத்தான் பதிலாக வந்தது. அடுத்த கணம் கண்கள் சுழல, வியர்வை வழிய கீழே சாயவிருந்த ரேஹானை நல்ல வேளையாக ஹஸன் ராவுத்தர் தாங்கிக் கொண்டார். உடனே சிகிச்சை செய்யப் பட்டது.

''ரேஹான்! இப்ப உனக்கு என்ன செய்தது?'' என்ருள் லேடி டாக்டர்.

''என்னமோம்மா! சதா எனக்கு ஒரு பயம் இருந்துச்சி. அடிக்கடி பயங்கர கனவு காணுவேன். நெஞ்சு படபடக்கும். சில சமயங்களில் இந்தமாதிரி மயக்கமும் ஏற்படும்.'' என்று ரேஹான் சொன்னதைக் கேட்டு லேடி டாக்டர் அர்த்தபுஷ்டியுடன் சிரித்துக் கொண்டாள்.

உடனே ராவுத்தர் பக்கம் திரும்பி, ''பாயி! உங்க மக கேட்டதுக்குக் காரணமே மனக் குழப்பந்தான். பயத்திலே கெட்ட கனவு கண்டு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கு. இப்படி அடிக்கடி ஏற்படவும் உடம்பில் பலக் குறைவும், நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு விட்டது. போதாக் குறைக்கு போதிய சாப்பாடும் இல்லை. கர்ப்பஸ்திரீக்கு கவலையோ, பயமோ, பலக் குறைவோ இருக்கலாமோ? எப்போதும் சந்தோஷமா இருக்கணும்; சிந்தனையை நல்ல விஷயங்களிலே செலுத்தணும். மனம் கெட்டா உடம்பும் கெட்டுவிடுமே. உங்க மகளுக்கு நல்லா தைரியம் சொல்லுங்க. உங்க மதாசாரப்படி ஆண்டவனைத் தியானம் பண்ணினுலே போதுமே. அலைக் கழியும் மனத்

டீகளில் உயர்ந்தவை

மக்தூம் டீ

மக்தூம் கோல்டன் ஸ்டார் டஸ்ட் டீ
மக்தூம் சிவப்பு லேபிள் டஸ்ட் டீ
மக்தூம் தென்னை மர மார்க் டஸ்ட் டீ

மக்தூம் அன் கோ,
தபால் பெட்டி நெ. 1769, மதராஸ்-1

திற்கு மருந்து அதுதான். போனது போகட்டும். இனிமே நான் கவனிக்கிறேன்......'' என்று சொல்லிவிட்டு அவர்கள் தங்கவேண்டிய 'ஸ்பெஷல் வார்டு'க்கு ஒரு நர்ஸுடன் அனுப்பி வைத்தாள்.

நாட்கள் ஓடின. டாக்டரின் திறமையோ, பெண்ணின் அதிர்ஷ்டமோ, ராவுத்தருக்குப் பேரன் பிறந்துவிட்டான். அழகான ஆண் குழந்தைக்குத் தாயான ரேஹானா 'டாக்டரம்மா' ஆசீர்வாதம் செய்து அனுப்பி வைத்தாள்.

"அந்த டாக்டரம்மா இல்லேன்னா நான் செத்தே போயிருப்பேன்'' என்று தன் மகள் சொன்னதை அவர் எப்படி மறுக்க முடியும்? டாக்டர்கள் செய்யக்கூடியதை மந்திரத்தால் செய்ய நினைத்த அவர் புத்தியைத் தானே நொந்து கொண்டார். ஆனால் அந்தத் தாயத்து சமாசாரந்தான் அவருக்கு ஒரே புதிராயிருந்தது.

"ரொம்பக் கஷ்டமாயிருந்தப்போ அந்த லீலா நர்ஸ் இந்தத் தாயத்தைக் கையிலே கட்டி 'எங்க குடும்பத்திலே இந்தத் தாயத்து பலிச்சிருக்கு. உனக்காக எங்கிட்டே இருந்த ஒரே ஒரு தாயத்தை எடுத்து வந்தேன். ஆவிங்க தொந்தரவெல்லாம், இது இருக்கிறவங்களை நெருங்கவே நெருங்காது'' என்று சொன்னாங்க. அது மாதிரியே எனக்கு அதைக் கட்டிக்கிட்ட பிறகு புது தெம்பு வந்த மாதிரி இருந்துச்சி!'' என்று தன் மகள் சொன்னது அவருக்கு விநோதமாக இருந்தது. இங்கிலீஷ் வைத்தியம் படித்த ஒரு நர்ஸ் தாயத்தின்மீது நம்பிக்கை வைப்பது ஆச்சரியந்தானே!

'நாற்பதாம் நாள் தாயத்தைப் பிரித்து அதில் இருக்கும் சாம்பலை ஆற்றிலே போடணும்' என்று அந்த நர்ஸ் சொன்னபடி ராவுத்தர் அதை வாங்கிப் பிரித்தார். கருப்புத் துணியால் சுற்றப்பட்டு, மஞ்சள் கயிறு கட்டப்பட்டிருந்தது. கயிற்றையும், துணியையும் அறுத்துப் பிரித்தார். அதன் உள்ளே ஒரு சிறு தங்க மோதிரம் மின்னியது. ஆ! என்று வாயைப் பிளந்தார். பூராவையும் பிரித்தபோது மடித்த தாள் ஒன்று கீழே விழுந்தது. வேறு எதுவும் உள்ளே இல்லை. பக்கத்தில நின்ற மருமகனிடம் அதைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

''தந்தை அவர்களுக்கு!

' ஆச்சரியப்படாதீர்கள். செத்துப் பேயாகி ஊரையே கலக்கி தன் அக்காவையே கண்கலங்கச் செய்த நான்-உங்கள் மகன் ஜமால்-சாகவும் இல்லை, பேயாகவும் அலையவில்லை. நான் சாகத் துணிந்தது உண்மையே. ஆனால் தற்கொலை பாபமென்றும், கோழைத்தனமென்றும் படித்த நான் கடைசி நேரத்தில் என் முடிவை மாற்றிக் கொண்டு. அப்படியே சென்னைக்கு ரயில ஏறினேன். அப்போது ஆண் நர்ஸுக்கு ஆள் பொறுக்கிக் கொண்டிருந்தனர். என் திறமையை மெச்சி என்னை உடனே சேர்த்துக் கொண்டனர். அரசாங்கப் பண உதவியாலும், ஒரு தனவந்தரின் பேருபகாரத்தாலும் படித்து இரண்டே வருஷத்தில் நர்ஸாகிவிட்டேன். அக்காவுக்குப் பிரசவம் நடந்த இதே ஆஸ்பத்திரியில்தான் நானும் இருக்கிறேன். சந்தர்ப்பம் சரியில்லாததால் நான் மறைந்தே இருக்க நேரிட்டது. லேடி டாக்டர் மூலம் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன். நான் மீண்டும் அங்கு வந்தால் கூட அதையும் "பேய்களின் ஜாலவித்தை" என்று சொல்லத் தயங்கமாட்டார்கள் நம் ஊர்க்காரர்கள். உரிய சமயத்தில் அங்கே வருகிறேன். பேயைப் பற்றிய மனப் பிரமையை

இனிமேலாவது விட்டொழி யுங்கள்.

"இதில் இருக்கும் மோதிரம் அக்காவின் குழந்தைக்கு என் அன்புப் பரிசாகும்.

ஜமால்."

கடிதத்தைப் பார்த்த ஹஸன் ராவுத்தர் அப்படியே திகைத்து விட்டார். யாருக்கும் பேசக்கூட நாவெழவில்லை. 'என் மகன் உயிரோடு இருக்கானு? ஆண்டவனே இது உண்மைதானு...?' யென்று அவரையறியாமல் அவர் வாய் அலறியது.

"சந்தேகமென்ன? திரும்பிப் பாருங்களேன்!" என்று ஒரு புதிய குரல் வந்த திசையில், வண்ணப் புடவையுடுத்தி, கதுப்புக் கன்னம் குழிபட, அன்ன நடையிட்டு வந்த அந்தப் பெண்ணோடு மோட்டாரி லிருந்து இறங்கி வந்த அந்த இளைஞனை—இல்லை, தன் மகன் ஜமாலைப் பார்த்து சிலையாகிவிட்டார்! அடுத்த வினாடி...

காந்தம்போல இருவரையும் இழுத்த அந்த பாசத்தின் அன்புப் பிணைப்பிலே தந்தையும், மகனும் இறுகிப் பிணைந்திருந்தனர்.

அறிமுகமெல்லாம் முடிந்த பின் னர்—

"தாயத்துப் போட்டதெல்லாம் உன் குறும்புதானே லைலா? என் தம்பியை மயக்கினது போதாதுன்னு மோதிரம் போட்டு என் மகனையும் மயக்கிட்டே சரி! சரி! சீக்கிரமே ஒரு பெண்ணைப் பெத்துக் கொடுக்கணும். அதுதான் உன் குறும்புத்தனத்துக்குத் தண்டனை" என்று ரேஹான் கேலி செய்துகொண்டிருந்த இடத்தில் லீலா என்ற பெயரில் புகுந்து கொண்டு தன் மகளுக்காக இராப் பகலாகக் கஷ்டப்பட்ட நர்ஸ் லைலாவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார் ராவுத்தர். தன் மகன் கல்யாண செலவைக்கூட அவருக்கு வைக்காதது வருத்தமாயிருக்காதா என்ன? ★ ★ ★

தேமதுரத் தமிழ் நூல்கள்

★

அமரர் கல்கி எழுதிய

கள்வனின் காதலி 4-8-0

'கல்கி' துணையாசிரியர் பகீரதன் எழுதிய

வடஇந்திய யாத்திரை (பிரயாண நூல்) 5-0-0
தேன் மொழியாள் 3-8-0
உழைப்பால் உயர்ந்த ஏழை 2-4-0
முல்லைவனத்து மோகினி 1-8-0

கி.ரா. கோபாலன் எழுதிய

ராணி மாதவி 2-12-0
வேதாவின் காதல் 3- 8-0

தமிழ் வாணன் எழுதிய

கான்ஸ்டபிள் கண்ணம்மா 1-0-0
கள்ளனைத் திருத்திய கன்னி 1-0-0
என்னைத் தொடாதே 1-0-0

ப. தனுஷ்கோடி

வாழ்க மணமக்கள் 1-8-0

★

நூலகங்களுக்கு எல்லா தமிழ் நூல்களும் எங்களிடம் கிடைக்கும்.

கலைஞன் பதிப்பகம்
தியாகராய நகர், சென்னை-17

கீமியாயெ ஸஆதத்
அல்-கஸ்ஸாலி

13. பெருமையின் சிறுமை

பெருமையும் புகழும் இறைவனுக்கே உரியவை. எவரும் தற்பெருமை கொள்வதை இறைவன் விரும்பவில்லை. எல்லா அருட்கொடைகளையும் இறைவனே அளிக்கிறான். எனவே தன்னிடமுள்ள ஒரு அருளைக்கொண்டு பெருமை கொள்வது இறைவனுக்கு எதிர்பாராட்டுதலாகும். 'தற்பெருமை கொண்டோர்மீது இறைவன் கோபமடைகிறான்' என்று நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

பெருமையும் அகமும் மிகமிகத் தீய குணங்களாகும். இக்குணங்களினால் பெருந்தீமைகள் விளைகின்றன. பெருமை யுடையவர்கள் பிறர் கூறும் நல்லுரைகளையும் உண்மைகளையும் ஏற்றுக்கொள்வதில்லை, இறைவனுக்கு மாறு செய்வதும், பாவச் செயல்களில் நிலைத்திருப்பதும் பெருமையினால்தான் என்று இறைவன் கூறுகின்றான்.

'தண்ணீர் புற்பூண்டுகளை வளரச் செய்வதுபோல் பெருமையும் பேராசையும் வஞ்சகத்தை வளரச் செய்கின்றன; இவ்விரு குணங்களும் ஆட்டுமந்தையிற் புகுந்த ஓனாயைவிட அதிக நஷ்டத்தை விளைவிக்கின்றன' என்று நாயகம் கூறியுள்ளார்கள். உள்ளத்தில் கடுகளவு பெருமை கொண்டாலும் சுவர்க்கம் செல்ல முடியாது என்றும் நாயகம் கூறியுள்ளார்கள். மேலும் கருமித்தனமும், பேராசையும். தற்பெருமையும் மனிதனை அழியச் செய்கின்றன என்றும், தன்னை நல்லவன் என நினைத்துப் பெருமைப் படும்போது மனிதன் தீயவனாகிறான் என்றும் கூறியுள்ளார்கள். அறிவிலும். வணக்கத்திலும் மிகைத்த 'இப்லீஸை' பெருமையே கெட்டழியச் செய்தது.

தத்துவ ஞானிகளில் தலை சிறந்தவரான அல்-கஸ்ஸாலியவர்கள் பாரசீக மொழியில் எழுதிய "கீமியாயெ-ஸஆதத்" ஒரு மாபெரும் அறிவுக் கடல். திரு குர்ஆனையும் திருநபியவர்களின் மணிமொழிகளையும் ஆதாரமாகக் கொண்டு மனித சமூகத்துக்கு வழிகாட்டக் கூடிய மாபெரும் உண்மைகளையெல்லாம் தமது அறிவுத் திறனால் அழகுற விளக்குகின்றார்கள் அறிஞர் கஸ்ஸாலி. அந்த மாபெரும் அறிவுக் கடலில் மூழ்கித் திளைக்குமாறு தமிழ் கூறும் நல்லுலகத்தையும் அழைக்கின்றார் நண்பர் அப்துர் ரஹீம்.

பெருமைக்காகவும், புகழை விரும்பியும் நற்கருமங்களைச் செய்வதால் அவைகளுக்கான நற்கூலியை இறைவனிடம் எதிர்பார்க்க முடியாது. அத்துடன் இறைவனுக்காகவன்றி பிறருக்காக ஒன்றைச் செய்த பெருங் குற்றமும் ஏற்படுகிறது. இவ்வுலகில் பெருமையை விரும்பாதார் மறுவுலகில் பெரு வாழ்வு பெறுவர் என்று இறைவன் கூறுகின்றான். 'உன்னை நீயே பெருமைப் படுத்திக் கொள்ளாதிருந்தால், நான் உன்னைப் பெருமைப் படுத்துவேன்' என்றும் கூறுகின்றான்.

தன்னைவிடப் பிறரைத் தாழ்வாய் நினைப்பதும், பார்ப்பதும் நடத்துவதும் பெருமை யாகும். பிறரிடமில்லாமல் தன்னிடம் மட்டும் உள்ள ஒரு அருளை நினைத்துப் பிறரை மனிதன் மட்டமாக மதிக்கின்றான். உண்மையில் எல்லா அருட்களையும் அளிப்பவன் இறைவன். எல்லோரும் இறைவனின் அடிமைகள். பொருட் செல்வம், கல்விச் செல்வம் போன்றவைகளில் உள்ள ஏற்றத் தாழ்வைக் கொண்டு ஒருவருக்கொருவர் பெருமைப் பாராட்டுதல் இறையருளை அவமதித்ததற் கொப்பாகும்.

செல்வம், அழகு இவை போன்ற அருட்களைக் கொண்டு பெருமையடித்தல் அறிவீனமாகும். ஏனெனில் இவைகள் எளிதில் அழிந்துவிடக் கூடியன. நம் கல்வியைக் கொண்டும், குடும்பத்தைக் கொண்டும் பெருமை கொள்வதும் குற்றமாகும். 'கல்விக்கு ஆபத்து அதனால் தற்பெருமை கொள்வதாகும்' என்று நாயகம் கூறியுள்ளார்கள். "உங்கள் குலப் பெருமை கொண்டு கர்வம் கொள்ளாதீர்கள். எல்லா மனிதர்களும் ஆதமின் மக்கள். ஆதம் மண்ணால் படைக்கப் பட்டவர்" என்றும் நாயகம் கூறியுள்ளார்கள்.

செல்வத்தின்போது பணிவு கொள்ள வேண்டும். வறுமை வாழ்வில் உயர்வாய் நடந்து கொள்ள வேண்டும்.

—திருக்குறள்.

அமைதியான நீரின் நடுவில் விழுந்த கிறுகல் வட்ட வட்டமாக அலைகளை எழுப்புகிறது. அவ் வலைகள் ஒரு குறிப்பிட்ட எல்லையுடன் நின்று விடாமல் மேலும் மேலும் விரிந்து சென்று கடைசியில் ஒன்றுமில்லாமல் மறைந்தே விடுகின்றன.

இதைப்போன்று, உள்ளத்தில் எழுந்த பெருமை மனிதனை மேலும் மேலும் பெருமை கொள்ளச் செய்து முடிவில் எல்லாப் பெருமைகளும் சேர்ந்து அழிந்து விடுகின்றன.

—ஷேக்ஸ்பியர்.

நாம் செய்த நற்செயல்களையும், வணக்கங்களையும் கொண்டு பெருமையடைவது அவைகளின் நற்பயனை இழக்கச் செய்கிறது. "நம்மிடமுள்ள ஒரு நன்மையைப் பற்றிப் பெருமைப் பட்டு மகிழ்வதைவிட, நம்மிடமுள்ள ஒரு குற்றத்தைப் பற்றி வருந்துவது மேலாகும்" என்று நாயகம் கூறியுள்ளார்கள். 'இரவு முழுதும் தொழுது விட்டு அதைப்பற்றி நான் பெருமைப் படுவதைவிட, இரவெல்லாம் தூங்கிக் கழித்து அதற்காக வருந்தி நான் இறைவனுக்குப் பயப்பட்டுக் கொண்டிருப்பதையே நான் அதிகமாய் விரும்புகிறேன்' என்று முத்ரிபு (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். இப் பெரியார் ஒரு நாள் பெருமிதத்துடன் நடந்து சென்ற ஒரு மனிதரைப் பார்த்து 'இத்தகைய நடை இறைவனுக்குப் பகையாயிருக்கும்' என்

ஞர்கள். அதற்கு அம்மனிதர் 'நான் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார். அதற்கு முத்ரிபு அவர்கள் 'உம்மை எனக்குத் தெரியும். ஆரம்பத்தில் நாற்றமுள்ள விந்துத் துளியாயிருந்தீர். தற்போது மலம் போன்ற அசுத்தங்களைச் சுமப்பவராயிருக்கின்றீர். முடிவில் நாற்றமுள்ள பிணமாய்ப் போவீர்' என்றார்கள். உண்மையில் தன்னிலை யுணர்ந்தவனும். இறைவனுக்கு அஞ்சுபவனும் பெருமை கொள்ளமாட்டான்.

எவரும் தனது நற் செயல்களைக் கொண்டு சுவர்க்கம் செல்வதில்லை என்றும், குற்றங்களை மன்னித்து இரட்சிக்கும் இறைவனின் பேரருளால்தான் மோட்சமடைய முடியும் என்றும் நாயகம் கூறினார்கள். 'தாங்களும் அப்படித்தானா?' எனக் கேட்டதற்கு நாயகமவர்கள் 'ஆம்' என்றார்கள். எனவே, எதைக்கொண்டும் யாரும் பெருமைப்பட வழியில்லை.

வறுமையின்போது பணிவுடன் நடந்துகொண்டவர்கள் செல்வம் கிடைத்தபின் பெருமைகொண்டு தங்களைவிடத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களை மதிப்பதில்லை. எனவே செல்வத்தின் போது பெருமையைக் கைவிட்டவர்கள் இன்ப வாழ்வின் போது பொறுமையைக் கைக்கொண்டவர்களாவர்.

உண்மையில் செல்வத்தின் போது பணிவும், வறுமையின் போது உயர்வும் கொள்ள வேண்டும். ஒரு ஏழையின் முன் நாம் தாழ்மையுடன் நடந்து கொண்டால் நம் செல்வம் நமக்குப் பெருமையைக் கொடுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது என்றும், நம்மைவிட அதிகச் செல்வமுடையோரிடத்தில் நாம் பெருமையுடன் நடந்து கொண்டால் பிறர் செல்வம் நம் மதிப்பைக் குறைக்கவில்லை என்று காட்டுகிறது என்றும் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். பணிவுடன் நடப்பவர்களிடம் நாமும் பணிவுடன் பழக வேண்டுமென்றும், பெருமை பாராட்டுவோரை மதிக்க வேண்டாமென்றும் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

பிற மக்கள் நம்மைவிடச் சிறந்தவர்களென எண்ணுவதே பெருமையின்மையும், பணிவும், தாழ்மையுமாகும். புகழை விரும்பா திருத்தலும், ஒருவர் நம்மைப் புகழ்ந்தாலும், மற்றொருவர் நம்மை இகழ்ந்தாலும் நம் உள்ளத்தில் விருப்போ வெறுப்போ இன்றி ஒரே நிலையிலிருத்தலும் பெருமை இன்மைக்கு அடையாள மாகும். இவ்வுலகில் புகழை விரும்பி, இகழை வெறுத்து, ஆசையும் அதிகரித்து எவ்வளவு வணங்கினாலும் பயனில்லை என்று நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

பெரியோர்கள் பெருமையின் சிறுமையை உணர்ந்து, தங்களை விடத் தாழ்ந்தவர்களிடமும் பணிவுடன் பழகினார்கள். நாயகமவர்கள் மக்கள் கூட்டத்தின் மத்தியில் நடப்பார்கள். அல்லது மற்றவர்களை முன்னால் நடக்கவிட்டுத் தாங்கள் பின்னால் நடப்பார்கள். தங்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக பிறர் அவர்களுக்குப் பின்னால் நடப்பதையோ, தங்களுக்கு முன் எழுந்து நிற்பதையோ அவர்கள் விரும்பவில்லை. ஏழை யொருவர் அவர்களின் கையைப் பிடித்தால் அவராக விடும்வரை நாயகமவர்கள் தங்கள் கைகளை விடுவித்துக்கொள்ள மாட்டார்கள்.

நாயகமவர்கள் தங்கள் திருக்கரங்களாலேயே எலலா வேலைகளையும் செய்து கொள்வார்கள்.

தாங்களே ஒட்டகைக்கு உணவளிப்பார்கள். ஆட்டுப் பாலை அவர்களே கறப்பார்கள். தாங்களே தங்கள் பாதரட்சையைச் செப்பனிடுவார்கள். கிழிந்த ஆடைகளைத் தைத்துக்கொள்வார்கள். தங்கள் ஊழியர்களுடன் சேர்ந்து உண்பார்கள். பிறருக்குத் தாங்களே முதலில் சலாம் சொல்வார்கள்.

உமர் (ரலி) அவர்களும், திருநபி யவர்களைப் பின்பற்றிய ஏனையோரும் பெருமையும் ஆடம்பரமுமின்றி மிக மிக எளிய வாழ்க்கையை நடத்தினார்கள். இறைவனளித்த எந்த அருட்கொடைகளும் அவர்களைப் பெருமை யடையச் செய்ய வில்லை.

—அ. அப்துர் ரஹீம்.

எம். ஆர். எம். அப்துர் ரஹீம் எழுதிய வாழ்வு முன்னேற்ற நூல்கள்

வாழ்க்கையில் வெற்றி!	2	8
எண்ணமே வாழ்வு	3	0
வாழ்வின் வழித்துணை	2	8
முன்னேறுவது எப்படி?	2	8
வழிகாட்டும் ஒளி விளக்கு	1	8
வாழ்வைத் துவங்கு!	2	8
சுபிட்சமாய் வாழ்க!	2	8
வாழ்வது ஒரு கலை	2	4
வியாபாரம் செய்வது எப்படி?	3	0
மகனே கேள்!	2	0
அன்புள்ள தம்பி!	2	0
வழுக்கலில் ஊன்றுகோல்	1	8

பெரியோர் வரலாறுகள்

உலக மேதைகள்	1	8
இஸ்லாமிய திலகங்கள்	1	12
கோடீஸ்வரக் கொடை வள்ளல்	1	0
அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர்	2	0
லியோ டால்ஸ்டாய்	1	8
முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள்	2	0

நாவல்கள்

மல்லிகை	2	0
பூங்குழலி	3	8

★

ஆர். பி. எம். கனீ எழுதிய

ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முதல் பாகம்	5	0
,, இரண்டாம் பாகம்	3	0
,, மூன்றாம் பாகம்	2	0
,, நான்காம் பாகம்	2	12
ஹஜ்ரத் குத்புல் ஹிந்த்	2	8
பாரசீகப் பெருங் கவிஞர்கள்	3	12
அவ்ராதுத் தொகுப்பு	2	0
கஷ்புல் கஸ்ஸாலி	2	4
மிஷ்காத்துல் அன்வார்	1	4
பிழையிலிருந்து விடுதலை	1	4
திப்ப நபவிய்யி	1	12
குலாஸதுத் தஸானிப்	1	0
மகாகவி இக்பால்	3	0
எம்பெருமான் பேசுகிறார்கள்	2	0
மகான் ஷைகு சஅதி	2	12

கிடைக்குமிடம்:

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை—1.

நான் அறிந்த இஸ்லாம்

எஸ். சுந்தரமூர்த்தி

29. நாயக மொழிகள் (ஹதீதுகள்)

இஸ்லாத்தின் கொள்கைகள், விதிகள், செயல் முறைகள் யாவும் திரு குர்ஆனிலேயே கூறப்பட்டுள்ளன. திரு குர்ஆனுக்கு அடுத்தபடியாக இவற்றைப் பற்றி நாம் அறிய உதவுவன நபி நாயகம் அவர்களின் மணி மொழிகளாம் ஹதீதுகள். ஹதீது என்ற சொல்லுக்கு 'அருள் வாக்கு' என்பது பொருளாகும். அதனால் திரு குர்ஆன் கூட ஹதீது என்று வழங்கப்பட்டுள்ளது. (18 : 6) ஸுன்னத் என்பது செயல் முறை எனப்படும். ஆனால் ஹதீது, ஸுன்னத் இரண்டும் பொருள் வேறுபாடின்றி வழங்கப்படுகின்றன.

ஹதீது மூவகைப்படும். முதலாவது சமயக் கொள்கைகளைப் பற்றி முஹம்மது நபி அவர்கள் கூறிய பொன் மொழிகள்; இரண்டாவது அவர்களுடைய செயல்கள்; மூன்றாவது பிறருடைய செயல்களை அவர்கள் ஆதரிக்கு முகமாக ஒன்றும் கூறாது ஏற்றுக் கொள்ளுதல். இம் மூவகைகளிலிருந்தும் நாம் இஸ்லாமியக் கொள்கைகள் பலவற்றைப் பற்றியும் விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம்.

இஸ்லாமியக் கொள்கைகள் பலவும் திரு குர்ஆனில் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளன. ஒரு சில மட்டுமே விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எனவே சுருக்கமாகக் கூறப்பட்டவைகளின் விரிவுரையாகவே ஹதீது விளங்குகின்றது. 'தொழுகையைக் கடைப் பிடியுங்கள்' என்று திரு குர்ஆனில் அடிக்கடி கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் தொழுகையை மேற்கொள்ள வேண்டிய நேரங்கள், முறைகள் முதலிய பலவற்றையும் நபி நாயகம் அவர்கள்தான் வகுத்தருளினார்

கள். அதுபோலவே ஈதலைப் பற்றியும் திருமறையில் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. ஆனால் திருநபி அவர்களே 'ஜகாத்' என்ற ஏழைகளுக்கு உரிய வரியை எவ்வாறு வசூல் செய்ய வேண்டும், எவ்வாறு செலவிட வேண்டும் என்பதைப் பற்றிய விதிமுறைகளை வகுத்தார்கள். இதுபோலவே பிறவற்றைப் பற்றியும் விரித்துரைத்தார்கள். ஆதலால் திருநபி அவர்களின் வாழ்நாளிலேயே ஹதீது தேவைப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். நபி நாயகம் அவர்கள் தம் சொற்கள் மூலமாகவும், செயல்கள் மூலமாகவுமே இஸ்லாமியக் கொள்கைகளை மக்களுக்கு விளக்கிக் கூறினார்கள். அதனால் தான் இஸ்லாமியக் கொள்கைகளை நன்கு தெரிந்து கொள்ள இன்றும் நமக்கு ஹதீது தேவைப்படுகின்றது.

நபி நாயகம் அவர்களின் காலத்தில் இக்காலத்திலே உள்ளது போல செய்திப் பத்திரிகைகளோ, வானொலி போன்ற வசதிகளோ இல்லை. அதனால் அவர்களுடைய கொள்கைகளையும் போதனைகளையும் மக்கள் வாய் மொழியாகவே பரப்ப வேண்டியிருந்தது. எனவே நாயகம் அவர்கள் தம்மைக்காண வந்தவர்கள் எல்லோரிடமும் கூற வேண்டியவைகளைக் கூறிவிட்டு முடிவாக இவ்வாறு கூறுவார்கள்: "இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் உடனழைத்துக்கொண்டு வாராமல் வீட்டிலேயே விட்டு விட்ட வாராதவர்களிடம் சென்று இதைப் பற்றிக் கூறத் தவறாதீர்கள்" [அல் மிஷ்காத் அல் மஸாபிஹ் (1:1)] "உங்கள் மக்களிடம் திரும்பிச் சென்று இவைகளை அவர்களுக்குக் கூறுங்கள்" (புகாரி 3 : 25) ஒரு சமயம் நாயகம் அவர்கள் ஹஜ்ஜுக்குப் போயிருந்தபோது ஒவ்வொரு முஸ்லிமும் பிற முஸ்லிம்களின் உயிர், பொருள், கௌரவம் முதலியவற்றைக் காத்தல் வேண்டும் என்று கூறிவிட்டு இறுதியில் இவ்வாறு கூறினார்கள்: "இவ்விடம் வந்திருக்கும் ஒவ்வொருவரும் இவ்விடம் வராமல் இருப்பவர்களுக்கு இச்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும்" (புகாரி 3 : 37). மேலும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய மக்களுக்குத் திரு குர்ஆனை விளக்கிக் கூறவும், அதன் கண் கூறப்படும் கட்டளைகளை நிறைவேற்றும் முறைகளை தம் செயல்களின் மூலம் எடுத்துக் காட்டவும் அவ்வப்போது தம் தோழர்களை அனுப்பி வந்தார்கள். அன்றியும் பல இடங்களிலிருந்தும் மக்கள் அடிக்கடி நாயகம் அவர்களிடம் வந்து "எங்களுக்குத் திரு மறையையும் ஹதீதையும் கற்பிக்கவல்ல ஆசிரியர்களை எங்களுடன் அனுப்புங்கள்" என்று வேண்டிக் கொண்டனர். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் எல்லாரும் திரு மறையில்

தெளிவாகக் கூறப்படாதவைகளைப் பற்றிய ஐயப்பாடுகள் உண்டான போதெல்லாம் நாயகம் அவர்களின் சொற்களையும் செயல்களையும் பின்பற்றியே நடந்து வந்தனர்.

முஆது இபுனு ஜபல் என்பவர் எமன் தேசத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். "வழக்குகளில் எவ்வாறு நீதி வழங்குவீர்" என்று அவரிடம் கேட்கப்பட்டபொழுது "அல்லாஹ்வின் திருமறையின் படியே" என்று அவர் மறுமொழி கூறினார். "அந்நூலில் ஒன்றும் கூறப்படாவிட்டால் யாது செய்வீர்" என்று பின்னும் கேட்கப்பட்டபொழுது அவர் "அல்லாஹ்வின் திருத்தூதருடைய ஸுன்னாஹ்வின் படியே" என்று உடனே தயங்காமல் பதில் சொன்னார். (அபூதாவூது 23 : 11) இதிலிருந்து நபி நாயகம் அவர்களின் வாழ்நாளிலேயே ஹதீது மிக முக்கியமானதாகவும் திருமறைக்கு அடுத்தபடியாக பயிலப்பட வேண்டியதாகவும், கருதப்பட்டமை தெரிகின்றது. அக்காலத்திலேயே திருநபி அவர்களின் தோழர்களிற் பலர் அவர்கள் கூறியவைகளையும், அவர்களுடைய செயல்களையும் நினைவில் வைத்துக் கொண்டதுடன் நில்லாது எழுதியும் வைத்துக் கொண்டார்கள். நாயகம் அவர்களும் "நினைவில் வைத்துக்கொள்ள முடியாதவர்கள் தம் வலக்கையின் உதவியை நாடவேண்டும்-அதாவது எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்-" என்றும் கூறியுள்ளதாக அபூ ஹுரைராஹ் கூறியுள்ளார்கள். அப்படி எழுதிவைத்ததைப் பலர் குறை கூறியபொழுது அப்துல்லா இப்னு அம்ர் என்பவர் நபி நாயகம் அவர்களிடம் இதைப் பற்றிச் சொன்னார். அதற்கு நாயகம், "எழுதி வையுங்கள்; நான் உண்மையை மட்டுமே கூறுகின்றேன்" (அதாவது 24 : 3) என்று மறுமொழி கூறினார்களாம். மேலும் அபூ ஹுரைராஹ் என்பவர் நாயகம் அவர்களின் தோழர்களுள் அப்துல்லா இப்னு அம்ரைத் தவிர மற்ற எல்லாரையும் விட அதிக ஹதீதுகள் தமக்கே தெரியும் என்று கூறுவார். ஏனென்றால் அப்துல்லா இப்னு அமர் எல்லாவற்றையும் எழுதிவைப்பாராம்; அபூஹுரைராஹ் எழுதிவைப்பதில்லை. நினைவிலேயே வைத்திருப்பார் (புகாரி 24 : 39). இவற்றிலிருந்து நபி நாயகம் அவர்கள் கூறியவைகளில் முக்கியமானவைகளையெல்லாம் அவர்களுடைய நண்பர்கள் பெரும்பாலும் நினைவில் வைத்திருந்தனர் என்றும், நினைவில் வைத்திருக்க முடியாதவர்கள் சிறுபான்மை எழுதி வைத்துக் கொண்டனர் என்றும் தெரிந்து கொள்ளலாம். எல்லாவற்றையும் எழுதி வைத்துக்கொண்டால் திருமறைக்கும், ஹதீதுக்கும் வித்தியாசம் தெரியாமல் குழப்பம் உண்டாகலாம் என்று நினைத்து, சில சமயங்களில் நாய

கம் அவர்களே ஹதீதுகளை யெல்லாம் எழுதிவைத்ததைக் கண்டித்துள்ளார்கள். இதுவன்றி, எழுதி வைத்துக் கொள்ளுதலை அவர்கள் முற்றும் தடை செய்ததில்லை. அக்காலத்தில் இருந்த மக்கள் எல்லாவற்றையும் எழுதி வைக்காமல் நினைவிலேயே வைத்துக்கொள்வதில் பெயர் பெற்றவர்கள். திருமறை முழுவதையும் மனப்பாடம் செய்து ஓத வல்ல 'ஓதுவார்கள்' பலர் இருந்ததை எல்லாரும் அறிவர். அது போலவே நாயகம் அவர்களின் பொன் மொழிகளையும் போற்றிக் காத்து வந்தனர் பலர். அவர்களில் ஒரு வேலையும் செய்யாமல் எப்பொழுதும் நபி நாயகம் அவர்களுடனேயே இருந்து வந்த அபூ ஹுரைராஹ் முக்கியமானவர். அடுத்தபடி நாயகம் அவர்கள் மனைவியான ஆயிஷா பிராட்டியார். பின்னும் அப்துல்லா இப்னு அம்ர் எல்லாவற்றையும் எழுதிவைத்திருந்தார். மற்றும் அப்துல்லா இப்னு உமர், அப்துல்லா இப்னு அப்பாஸ் என்ற இரண்டு இளைஞர்களும் திருமறையையும், ஹதீதையும் மனப்பாடம் செய்து ஓதும் வேலையில் இடைவிடாது ஈடுபட்டு வந்தனர். இவ்வாறாக ஹதீதுகள் முஹம்மது நபி அவர்களின் காலத்தில் பாதுகாக்கப் பட்டுவந்தன. (தொடரும்)

வெளிவந்துவிட்டது!

முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்

எழுதியவர்: அப்துற்-றஹீம்

★ இஸ்லாமியக் கவிக் கோமான்களின் சீர்மிகும் வாழ்வையும் சுவைமிகும் பாவையும் கலந்து குழைத்து அமைத்த பெரு நூல்.

★ தமிழ் நெஞ்சங்கள் நெடு நாள் விருப்பத்துடன் எதிர் பார்த்த அரும் நூல்.

இந்நூலில் 'சீறா' தந்த செல்வர் உமறுப் புலவர், சேகனாப் புலவர், காசிம் புலவர், ஆலிப் புலவர், செய்யது முகம்மது அண்ணாவியார், ஐதுரூசு நயினார்ப் புலவர், குலாம் காதிறு நாவலர், பிச்சை இபுராகிம் புலவர், சவ்வாதுப் புலவர், செய்குத் தம்பிப் பாவலர், செய்கு முஹிய்யித்தீன் கவிராயர், வண்ணக் களஞ்சியப் புலவர், செய்பது முகம்மது ஆலிம் புலவர், முகம்மது இப்ருகிம் புலவர், புலவர் ஞானிகளான பீர்முகம்மது அப்பா, ஞானியார் அப்பா, குணங்குடி மஸ்தான் ஆகியோரின் வாழ்வைக் காணலாம்; அவர்தம் பாவைக் கேட்கலாம். பக்கங்கள் 450. விலை 4—0—0

வெளியிட்டோர்:

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

155-156, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.

தங்கையின் விவாகத்துக்கு ஒருவார காலம் இருந்தது. வெளியூர்களிலிருந்து உறவினர்களும் நண்பர்களும் வந்து கூடிவிட்டார்கள். உள்ளூரிலுள்ளவர்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர். வீடு கலகலப்பாக இருந்து வந்தது.

இந்த இன்பத்தைக் கலைப்பது போன்ற சம்பவம் ஒன்று திடீரென ஏற்பட்டுவிட்டது.

ஒரு நாள் பகல் உணவு உண்டபின் அன்று எனக்கு வந்த தபால்களுக்குப் பதில் எழுதிக்கொண்டிருந்தேன். அச்சமயத்தில் மாமா அவசரமாக நான் இருந்த அறைக்குள் வந்து, ''என்ன தம்பி, உனக்குத் தெரியுமா சேதி!'' என்று பரபரப்புடன் கேட்டார். அவரது கண்கள் சிவந்திருந்தன. கை கால்கள் பதறின.

''என்ன மாமா? எதைச் சொல்கிறீர்கள்?''

''அதுதான் தம்பி...அது எவ்வளவு அநியாயம்!'' என்று மீண்டும் படபடத்தார்.

''ஆத்திரப் படாதீர்கள் மாமா! விஷயத்தைச் சொல்லுங்கள்!''

''அப்படியானால்...உனக்கு ஒன்றுமே தெரியாதா? ஏன் தம்பி மறைக்கிறாய்?''

''மாமா, நான் ஒன்றையும் மறைக்கவில்லை. நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?'' என்றேன்.

மாமா சற்று உட்கார்ந்தார். நான் உள்ளே சென்று கொஞ்சம் குளிர்ந்த தண்ணீரைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்து, ''இதைக் குடித்துவிட்டுப் பேசுங்கள்!'' என்றேன். நீரைப் பருகியபின் சற்று சாந்த மடைந்தவர்கள் போல்காணப்பட்டார்.

''இப்போது சொல்லுங்கள் மாமா! என்ன நடந்தது?''

''தம்பி, உனக்குத் தெரியாதா? நான் எப்படித் தம்பி சொல்லுவேன்?'' என்று கூறிவிட்டு சற்று நிதானித்தார். பிறகு ''கொஞ்சம் இரு, வருகிறேன்!'' என்று சொல்லியபடியே வெளியேறினார்.

என்ன நடந்தது? மாமா ஏன் பதற்ற மடைந்து காணப்படுகிறார்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் மன அமைதியுடன் என் காரியங்களை கவனித்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் சென்ற பின் மாமா திரும்பி வந்தார். அவருடன் மார் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவரும் வந்தார். அவ டம் மாமா, "தம்பி ஷரீபிடம் சொல்லுங்கள்!" என்று கூறினர்.

வந்தவர் மாப்பிள்ளை விட்டைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிவித் துக்கொண்டார். மாப்பிள்ளை விட்டில் இப்போது ஒரு குழப்பம் ஏற் பட்டிருக்கிறது. அதாவது பெண்ணின் சகோதரனை நான் சென்னை யில் மோசமான வாழ்க்கையை நடத்தி வந்ததாகவும், முன் பின் தெரி யாத இடத்தில் விவாகம் செய்து கொண்டதாகவும் அங்கே பேச்சு நடந்திருக்கிறது. மேலும் சினிமாத் தொழிலில் நான் சம்பந்தப்பட்டி ருப்பதால் பல அன்னிய பெண்கள் தொடர்பு கூட உண்டென்றும் அங்கு வதந்தி உலாவுகிறதாம்.

"இப்படிப்பட்டவரின் தங்கையையா கல்யாணம் செய்து கொள் வது என்று மாப்பிள்ளையின் உறவினர்கள் கூறுகின்றனர். ஆகவே இது சம்பந்தமாக விசாரித்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார்கள்" என்று வந்தவர் கூறினர்.

"மாப்பிள்ளை என்ன சொல்கிருர்?"

"மாப்பிள்ளை இதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவர் பிரியப்படி கல்யாணத்தை முடித்துக் கொண்டால் பிறகு உறவினர்களை முக்கியமாகத் தம் சகோதரி முதலானவர்களை இழந்து விடவேண் டியதுதான்?"

மாப்பிள்ளை விட்டில் என்ன நடந்திருக்கும் என்பதை நான் ஊகித் துக்கொண்டேன். மாப்பிள்ளையின் மன நிலைமையையும் புரிந்து கொண்டேன்.

"என்ன தம்பி அநியாயமாக இருக்கிறது? இப்படிப்பட்ட இடத் தில் நாம் பெண்ணைக் கொடுத்தால் அது எப்படி நிம்மதியாக வாழும்?" என்று ஆத்திரத்துடன் கூறினர் மாமா.

"மாமா, நீங்கள் பேசாமலிருங்கள். நான் எல்லாவற்றையும் கவ னித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி பேச்சு வார்த்தைகள், சம்பவங் கள் முதலியவை எல்லாம் கல்யாண சந்தர்ப்பத்தில் எங்கும் நடைபெறு வது சகஜம்தான்!" என்று கூறினேன்.

சிறிது நேரம் யோசனை செய்தேன். பிறகு வந்தவரிடம் நிதானமாக, "நீங்கள் போய் மாப்பிள்ளையின் தந்தையையும் தமயனுரையும் நான் சந்திக்க விரும்புவதாகவும் அதற்கு எப்போது வரலாம் என்று கேட்ப தாகவும் அவர்களிடம் கேட்டுச் சொல்லியனுப்புங்கள்!" என்றேன். வந்தவர் 'சரி' யெனக் கூறிவிட்டுச் சென்றுர்.

இந்த விஷயத்தை மேலும் பரவவிடாது ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் நினைத்திருந்தேன். ஆனல் அன்று மாலை அஸர் தொழுகைக்கு நான் பள்ளி வாசலுக்கு வந்தபோது மஸ்தான் ராவுத்தர் என்னிடம் இதுபற்றிக் கேட்டார். பிறகு "பார்த்தீர்களா தம்பி! நல்லவர்களுக்கு இது காலமில்லை என்பது தெரியவில்லையா?" என்று கூறினர்.

மறு நாள் காலையில் மாப்பிள்ளை விட்டிலிருந்து ஒரு பையன் வந் தான். அன்று என்னை மாப்பிள்ளையின் தந்தை சந்திக்க விரும்புவதாக

அவன் தகவல் கொண்டு வந்தான். மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்லு தற்கு நான் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது, தாமும் வருவதாக மாமா சொன்னார். ஆனால் யாரும் என்னுடன் வரக்கூடாது என்று தடுத்துக் கூறிவிட்டு நான் மட்டும் புறப்பட்டுச் சென்றேன். யாராவது என்னுடன் வந்தால் என்னுடைய பொறுமை அவர்களிடம் இருக்கும் என்று எவ்விதம் எதிர் பார்க்க முடியும்?

மாப்பிள்ளை வீடு சந்தடியற்றிருந்தது. நான் வீட்டிற்குள் நுழைந்ததும், மாப்பிள்ளையின் தந்தை என்னைப் பார்க்காமல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார். தமையனார் இஸ்மாயீல் தான் என்னிடம் சற்று கலகலப்பாகப் பேசினார். தாங்கள் கேள்விப்பட்டது வாஸ்தவமா என்பதை அவர் நாசூக்காகவே கேட்டார்.

"சந்தர்ப்ப சூழ் நிலைகள் எனக்கு விரோதமாக இருக்கின்றன. இப்படி இருக்கும்போது எப்படி நான் கூறும் உண்மையை ஏற்றுக் கொள்வீர்கள்?" என்று கேட்டேன்.

"அதற்குச் சொல்லவில்லை ஷரீப், இந்த ஊரில் ஒரு சிலர் எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் கிளப்பிவிட்டதுதான் இப்பிரச்னை!" என்றார்.

"நெருப்பில்லாமல் புகையுமா?" என்று ஒரு பழமொழியை மட்டும் சொல்லிக்கொள்வதோடு நிறுத்திக்கொண்டார், அதுவரை எங்கள் பேச்சில் கலக்காமல் இருந்த மாப்பிள்ளையின் தந்தை.

"அத்தா, நீங்கள் பேசாமலிருங்கள்! உங்களுக்கு ஒன்றும் தெரியாது!" என்று கூறிய இஸ்மாயில் என்னிடம், "நானும் இந்தக் காலத்து மனிதன்தான்! ஆகவே இந்த மாதிரிப் புரளிகளை நான் இதுவரை நம்பவில்லை. இனியும் நம்பமாட்டேன்!" என்று கூறினார்.

"நீங்கள் நம்பினாலும் சரியே, நம்பாவிட்டாலும் சரியே, ஒன்றை மட்டும் என் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறேன். அதுதான் ஆண்டவனுக்குப் பயந்து நாம் நடக்க வேண்டும்; எந்த விதமான இன்னல்கள் ஏற்பட்டாலும் இவற்றிலிருந்து நாம் விலகிவிடக் கூடாது என்பது. இதை நம் மனசாட்சி உணர்ந்து நமக்கு உத்திரவு பிறப்பிக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டால் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் நன்மையைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கும்".

"நீங்கள் சொல்வது சரிதான். இக்காலத்து வாலிப சமுதாயம் தான் இதை உணரத் தலைப்பட்டு விட்டதே!" என்றார் இஸ்மாயீல்.

பின்னர் அவர் என்னிடம், விவாகக் காரியங்கள் முறையாக நடைபெறுமென்றும் இதில் எவ்விதமான தடையும் ஏற்படாது என்றும் என்னிடம் உறுதி கூறினார். இதுவரை மாப்பிள்ளைக்கு லீவு கிடைக்காததால் அவர் ஊருக்கு வரவில்லையென்றும் கூறினார்.

நான் ஊருக்குத் திரும்பி வந்ததும் மாமாவிடம், எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறிவிட்டு, "பார்த்தீர்களா மாமா! நேற்று வந்தவர் சொன்ன விஷயங்களை வைத்து நாம் ஆத்திரம் கொண்டிருந்தால் முடிவு எப்படியாகியிருக்கும்?" என்று கேட்டேன். "ஆமாம் தம்பி, எங்கள் காலத்தைவிட உங்கள் காலம் சில விஷயங்களில் மோசமாக இருந்தாலும் சில விஷயங்களில் நன்றாகவே இருக்கிறது!" என்று அபிப்பிராயம் தெரிவித்தார்,

விவாகத்திற்கு நாட்கள் நெருங்கிக்கொண்டிருந்தன. சென்னை
யிலிருந்து படாதிபதி பூதலிங்கம் பிள்ளை தம் வாக்குறுதிப்படி வந்து
சேர்ந்து விட்டார். இருப்பினும் விவாக சமயத்தில் வெளியே என்னால்
போகமுடியாமல் இருப்பதால் எல்லாக் காரியங்களும் முடிந்த பிறகு
அவ்விஷயங்களைக் கவனிப்பதென்று முடிவு செய்து கொண்டோம்.

"நீங்கள் சொல்வது சரிதான் மிஸ்டர் ஷரீப். இன்னும் சில தினங்
கள் தானே இருக்கின்றன. அதற்குள் டைரக்டரும் வருவார் என்று
நினைக்கிறேன். வாஸந்தியும் வருவதாகச் சொல்லி யிருக்கிறாள்!"
என்றார்.

"மிகவும் சௌகரியமாகி விட்டது. அவர்கள் எல்லோரும் வந்து
விட்டால் கதையைப் பற்றி இங்கேயே 'டிஸ்கஸ்' செய்து விடலாம்"
என்று நான் சொன்னேன். படாதிபதிக்கு இது மிகவும் மகிழ்ச்சியை
அளித்தது.

14

'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்தி
வைக்க வேண்டும்' என்ற பழமொழியானது நமது நாட்டில் வாழையடி
வாழையாக வழங்கி வருகிறது. மேலெழுந்த வாரியாக இம்மொழி
யைப் பார்த்தால் நமக்கு வெறும் வார்த்தை ஜடுக்குதான் தெரியும்.
ஆனால் கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பு நம் தலை
யில் விழும்போது ஆயிரத்துக்கு அதிகமான பொய்களைக்கூடச் சொல்ல
வேண்டி வரலாம்—எல்லோரையும் எல்லா வகையிலும் திருப்திபடுத்த
வேண்டும் என்ற சந்தர்ப்பம் வரும்போது!

தன்னை முதலில் அழைக்கவில்லை என்று ஒருவர் கோபித்துக்
கொள்வார். அவரை மட்டும் முதலில் அழைத்தீர்களே என்று மற்
றொருவர் ஆட்சேபிப்பார். இப்படிப்பட்டவர்களைச் சமாதானப்படுத்து
வதற்கே ஆயிரக் கணக்கில் பொய்களைச் சொல்லவேண்டி யிருக்கும்!

இது எனக்குப் புது அநுபவம். முதலில் யதார்த்தமாகப் பேசி
விட்டதால் வந்த விளைவுகளைக் கொண்டு இக்காரியங்களில் நாம் தலை
யிடக்கூடாது என்று தீர்மானித்து விட்டேன்; ஆகவே மாமாவிடம்
அப்படிப்பட்ட பொறுப்புக்களை விட்டு விட்டேன்.

கல்யாணத்திற்கு முதல் நாள். சென்னையிலிருந்து டைரக்டர்,
வாஸந்தி, ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை ஆகிய மூவரும் வந்து விட்டனர்.
ரயில்வே ஸ்டேஷனிலிருந்தே அவர்களை அழைத்துக்கொண்டு பூதலிங்
கம் பிள்ளை குற்றாலத்துக்குச் சென்று விட்டார்.

ஸ்டேஷனில் அவர்களை நான் வரவேற்கப் போயிருந்தபோது என்
னைக் கண்ட வாஸந்தி, "அண்ணா! என் தங்கையின் கல்யாணத்துக்கு
எப்படியும் வந்து சேர்ந்துவிட வேண்டும் என்று எண்ணி யிருந்தேன்.
அப்படி வந்து விட்டேன்!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள்.

"ஆமாம் ஐயா, நான் கூட எவ்வளவோ தடுத்தேன். ஆனு குழந்தை கேட்கவில்லை. பிடிவாதம் பிடித்தாள். ஆனால் அவளுடன் நானும் வந்து விட்டேன்." என்றார் ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை.

"வாஸந்தி என்ன இன்னும் குழந்தையா!" என்று கேட்டு விட்டுச் சிரித்தேன்.

"அதற்கில்லை சார். இன்னும் கொஞ்ச நாள் நான் அவளைப் பாதுகாக்க வேண்டியது என் கடமை" என்றார் கிழவர்.

"நல்ல கிழவர் ஐயா நீர்!" என்று கூறினார் டைரக்டர்.

நான் வீடு திரும்பியபோது மணமகனும் அவரது குடும்பத்தினரும் ஊரிலிருந்து வந்து இறங்கி விட்டனர். அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டில் தேவையான வசதிகளைச் செய்வதில் மாமா ஈடுபட்டிருந்தார். நான் அங்கு சென்றபோது மாப்பிள்ளையையும் அவரைச் சேர்ந்த பெண்களையும் தவிர மற்றவர்கள் வெளியே சென்றிருந்தனர். ஆகவே அவர் என்னிடம் தனித்துப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"நீங்களே பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வருகிறேன். தங்களைப் பற்றியும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்!" என்று ஆரம்பித்தார் மாப்பிள்ளை.

நான் சிரித்துக்கொண்டே, 'கேள்விப்பட்ட விவரங்களைக் கொண்டே என்னைப் பற்றித் தீர்மானித்து விடாதீர்கள்!" என்று கூறினேன்.

"தங்கள் கொள்கையும் சீர்திருத்த வேலைகளும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன......"

"நான் ஒன்றும் அப்படி சீர்திருத்த வேலைகளில் ஈடுபட்டு விடவில்லையே? இந்த ஊரில நடைபெறுகிற ஒரு அனுச்சாரத்தைக் கூட நிறுத்த நான் முயற்சிக்கவில்லையே!"

"எங்களை நேரடியாக அவ்வேலையைச் செய்யாவிட்டாலும் கூடத் தூண்டுகோல் நீங்கள்தானே? அதை யார் மறுக்க முடியும்?"

"மாப்பிள்ளை, நீங்கள் நினைப்பதுபோல அவ்வளவு வேலைகள் நான் செய்துமுடிக்கவில்லை. நம் சமுதாயம் சீர்திருந்த வேண்டுமானால் அதற்கு வாலிபர்கள்தான் உரிய காரியங்களைச் செய்து முடிக்கவேண்டும் என்பது என் எண்ணம். இங்குள்ள வாலிபர்கள் அதற்கு இசைந்து வந்து நான் சொல்லியபிரகாரம் அவர்கள் செயலாற்றினர். இன்று ஆண்டவன் கிருபையால் ஓரளவு ஊரில் சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டது. இதைப் போலவே ஒவ்வொரு ஊரிலும் உள்ள வாலிபர்கள் முனைந்து சமூகக் கல்வி, உலக அறிவு விஷயங்களில் கவனம் செலுத்துவார்களானால் சமூக சீர்திருத்தம் ஏற்பட்டுவிடும். அனுச்சாரங்கள் படிப்படியாகக் குறைந்து இறுதியில மறைந்துவிடும். இறைவன் காட்டிய வழியில் மக்களைத் திருப்பிவிடலாம்" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டேன்.

அவரும் இக்கால வாலிப சமுதாயத்தைச் சேர்ந்தவர்தானே. ஆகவே அனுச்சார ஒழிப்பு முதலியவற்றில் மிகவும் அக்கறை காட்டினார்!

கல்யாண தினத்தன்று காலையில் குற்றாலத்திலிருந்து படாதிபதியும் மற்றவர்களும் வந்து சேர்ந்துவிட்டனர். அவர்களைக் கவனித்து வேண்டியவற்றைச் செய்வதற்குத் தனியே ஆட்களை நியமித்திருந்தேன். இயற்கை வனப்பு வாய்ந்த எங்கள் கிராமம் அவர்கள் அனைவருக்கும் பிடித்துப் போய்விட்டது.

"இந்தக் கிராமத்திலேயே ஒரு சிறிய வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்தால் எப்படி இருக்கும்?" என்று கேட்டாள் வாஸந்தி.

"பட்டணத்தின் பரபரப்பைப் பார்க்க இயலாது. கோடை காலத்தில் ரஸ்தாக்களில் உருகி ஓடும் தார் வாசனையை அனுபவிக்கும் பாக்கியம் கிடைக்காது!........"

"இந்தக் கிராமம்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! கண்ணுக்கு இனிமையான பசுமை நிற வயல்வெளி! பேதைப் பெண்ணின் சிரிப்பைப் போல சலசலத்து ஓடும் சிற்றாறு! உடம்பு நோகாது மெல்லத் தீண்டும் குழந்தை மனப்பக்குவத்தையுடைய தென்றல் காற்று........!"

"இந்த வர்ணிப்பையெல்லாம் எந்தப் புஸ்தகத்தில் படித்தீர்கள் வாஸந்தி?" என்று கேட்டார் டைரக்டர். எல்லோரும் சிரித்து விட்டனர்.

"இதற்குப் புஸ்தகத்திலா படிக்க வேண்டும்? எங்கள் கிராமமே இங்கு வரும் ஒவ்வொருவரையும் கவிஞராக்கி விடுமே!"

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு புதுப் பணக்காரர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். இப்போதெல்லாம் அவர் என்னுடன் சாதாரணமாகப் பழகி வந்தார். விவாக ஏற்பாடுகளையெல்லாம் பற்றி விசாரித்தார். எல்லாவற்றையும் விவரித்துக் கூறினேன். அவர் தமது திருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்.

"பட்டினத்திலிருந்து வந்தவர்கள் எங்கேயிருக்கிறார்கள் தம்பி?"

"மேலத் தெருவிலுள்ள வேப்பமரத்து வீட்டில் தங்கியிருக்கிறார்கள்?"

"அவர்களுக்கு எல்லாம் வசதியாக இருக்கிறதா?"

"ஆமாம். வாருங்களேன் அவர்களைப் போய்ப் பார்த்து விட்டு அப்படியே பள்ளி வாசலுக்குப் போவோம்!" என்று அவரை அழைத்தேன். அவர் 'சரி' யென்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அவ்வீட்டை யடைந்தபோது வீட்டுத் திண்ணையில் ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை படுத்திருந்தார். "என்ன! பெரியவர் தூங்குகிறார் போலிருக்கிறது!" என்று கூறியபடி வீட்டினுள் நுழைந்தேன். "இல்லை ஐயா! சும்மா படுத்திருக்கிறேன்" என்று கூறியவாறு எழுந்த ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை எனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த புதுப் பணக்காரரைப் பார்த்தார். அடுத்த கணம், "அட கொலைகாரப் பாவி!" என்று ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை வீறிட்டார்... புதுப் பணக்காரரின் முகம் பேயறைந்தாற்போல் மாறிவிட்டது. கிழவரின் கூச்சலைக்கேட்ட படாதிபதி, டைரக்டர், வாஸந்தி முதலியவர்கள் வெளியே ஓடி வந்தனர்.

வருகின்றேம்

[பிப்ரவரி இதழில் "உளந்தேறும் உத்தமரே" என்று அன்பும், ஆறுதலும் குழைய இல்லாள் தீட்டியிருந்த மடலுக்கு மணாளனின் மறுமொழி]

★

தெள்ளமுதே, என்னழகே,
தேன்புகட்டும் தீங்கனியே!
உள்ளமதில் உயர்வூட்டும்
உன்னருமை மடல் கண்டேன்.

★

பொறைவடிவே! பெருநிதியே!
போற்றும் எழிற் பூங்கொடியே!
நிறைமதியே! நித்திலமே!
நெஞ்சகத்தின் நல்லுருவே!

★

உனைப்பிரிந்து வாழ்வதிலே
உறுகின்ற துன்பமது
எனைவாட்டி வருத்திடுதே
ஏந்திழையே!
என் சொல்வேன்?

★

என்நெஞ்சம் ஏங்குவதும்
ஏனென்று கேட்டிருந்தாய்.
உன் நெஞ்சும் என்னெஞ்சும்
ஒன்றிவிட்ட காரணமாம்.

★

"ஊரவர்கள் தூற்றிடினும்
உலகத்தார் ஏசிடினும்
நீரவளோ(டு) வந்திடுவீர்
எனவரைந்தாய், என்னரசி!

தேள், மற்றப் பூச்சிகளைப் போல் பிறப்பதில்லை. அது தன் தாயின் வயிற்றைக் கிழித்துக் கொண்டுதான் வெளிப்படுகிறது. தேள் இருக்கும் பொந்துகளில் தேளின் உடல் வெடித்துக் கிடப்பதே இதற்குத் தக்க சான்றாகும்.

இவ்விநோதமான விஷயத்தை நான் ஒரு பெரியாரிடம் சொன்னேன். "ஆமாம், குழந்தைப் பருவத்தில் ஒருவன் தன் பெற்றோர்களிடம் எப்படி நடந்து கொள்கிறானோ அவ்விதமே அவனுடைய விருத்தாப்பிய தசையில் அவன் குழந்தைகள் அவனிடம் நடந்து கொள்ளுவர் என்பதற்கு இது ஒரு சான்றுதான்" என்றார் அவர்.

—மகான் ஷைகு சஅதி.

வாழ்வரசி!

கணவனின் நான்காவது
கடிதம்

எழுதியவர் :

எஸ். ஓ. அபுல் ஹஸன்,
கண்டி, சிலோன்.

★

உன்னன்புக் கட்டளையை
உயிரெனவே கொண்டிட்டேன்
என்னகத்தில் நிறைமகிழ்வால்
எழும் அலைகள்
என்னென்பேன்?

★

"இருமனையை ஏற்பவர்கள்
இருவருக்கு இடையேயும்
ஒருசிறிதும் பேதமின்றி
ஓர்மையுற வாழ்ந்திடணும்.

★

எனப்பகரும் இறைமொழியில்
எனதறிவைச் செலுத்திடுவேன்
குணக்குன்றே! கோகிலமே!
குறையறவே
வாழ்வமைப்போம்.

★

வருந்திங்கள் மூன்றும் நான்
வருகின்றேம் இருவருமே
பெருந்துயரிலாழ்ந்து நின்ற
பெண்ணரசி ஏற்றிடுவாய்.

இல்லறத்தின் ஒளிவிளக்காய்
இருவருமே திகழ்ந்திடவே
நல்லறத்தில் நாட்டமுற்று
நானிலத்தில் வாழ்ந்திடுவோம்

★

ஒரு துளி (விந்து) நீர் கருக்குழியில் நாற்பது நாட்கள் தரிபட்டதுமே மனித உருப் பெறுகிறது. ஆனால், நாற்பது வருடங்கள் கழிந்த பின்னும் எவனுக்குச் சரியான பொறுப்பு உணர்ச்சி உண்டாகவில்லையோ அவனை மனிதன் என்று கருத முடியாது. மனிதன் ஸ்தூல உருவம் மட்டும் தான் என்று எண்ண வேண்டாம். தயாளமும், இன் சொல்லும், நற்குணமும் அவனுடைய உள் அம்சங்களாய் இருக்க வேண்டும். மனிதத் தன்மைக்கு நற்செய்கை இன்றியமையாததாகும். காவியைக் கொண்டு சுவரில் மனித உருவைத் தீட்டி விடமுடியும். நற்செயலும் கருணையுமற்றவனுக்கும் சுவரிலுள்ள சித்திரத்துக்கும் என்ன வித்தியாசம்?

—மகான் ஷைகு சஅதி.

இஸ்லாமிய வரலாற்றில் ஒரு இணையற்ற வீரராய் விளங்கிய இமாம் அலீ (ரலி) யவர்களின் பதினான்காம் நூற்றாண்டு பிறந்த நாள் விழா அண்மையில் சில நாட்களுக்கு முன், இந்தியாவில் வாழும் ஷீயா, இஸ்மாயிலி முஸ்லிம்களால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. வீரத்துக்கும் தியாகத்துக்கும் ஒரு உதாரணமாய் விளங்கிய அலீ (ரலி) யவர்கள் இஸ்லாமிய சரித்திரத்தில் எத்தகைய பங்கு பெற்றிருந்தார்கள் என்பதை இத்தொடர் கட்டுரைகளில் காணலாம்.

இமாம் அலீ (ரலி)

[எஸ். அப்துர் ரஹீம்]

'குலபாயெராஷிதீன்' எனும் 'நேர்வழி நடந்த' நான்கு கலீபாக்களுள் இறுதியானவர் அலீ (ரலி) ஆவார்கள். நபி பெருமான் அவர்களின் பெரிய தந்தையான அபூதாலீப் அவர்களின் அருமைப் புதல்வரே அலீ (ரலி).

நபிகள் நாதரின் பாட்டனார் அப்துல் முத்தலிப் இறந்த பின் அலீ (ரலி) யின் தந்தையான அபூதாலிப் அவர்களே நபி பெருமானார் அவர்களை வளர்த்து வந்தார்.

அலீ (ரலி) யவர்களின் தாயாரின் பெயர் பாத்திமா. குறைஷி குலத்தில் பனூஹாஷிமின் குடும்பமே மிக அதிகமான கண்ணியமும் கௌரவமும் பெற்று விளங்கியது. இஸ்லாத்தின் திருநபியான முஹம்மது (ஸல்) அவர்களும் இந்த பனூஹாஷிமின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. 'கஃபா' எனும் புனித ஆலயம் இக்குடும்பத்தினரால்தான் பராமரிக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாகவும் பனூஹாஷிமின் குடும்பத்தினர் அரேபியா தீபகற்பத்தில் அதிக செல்வாக்குடன் வாழ்ந்து வந்தனர்.

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நபிப் பட்டம் கிடைப்பதற்குப் பத்தாண்டுகள் முன்னதாக அலீ (ரலி) பிறந்தார்கள். அலீ யவர்களின் தந்தையான அபூதாலிபின் குடும்பம், பனூஹாஷிமின் வம்சத்திலேயே மிகப் பெரியது. இந்நிலையில் நபிகள் நாதரையும் அவர்களின் இளமைப் பருவத்தில் அபூதாலிபே வளர்த்து வந்தார். ஆனால் பிற்காலத்தில் அபூதாலிபின் குடும்பம் பொருளாதாரத்தில் சீரழிந்து விட்டதால் அவர்களின் மைந்தரான அலீ (ரலி)யை வளர்க்கும் பொறுப்பினைத் திருநபியவர்களே

ஏற்றுக்கொள்ள வேண்டிய தாயிற்று.

அலீ (ரலி) யவர்கள் நபிகள் நாதரின் நெருங்கிய உறவினராக இருந்ததுடன், அன்னார் குழந்தைப் பருவத்திலிருந்தே நபி பெருமான் வீட்டில் வளர்ந்து வந்தமையால் இருவரும் அதிகப் பற்றும் பாசமும் உடையவர்களாயிருந்தனர்.

இஸ்லாத்தில் சேர்தல்

நபிகள் நாயகத்துக்கு நபிப் பட்டம் அருளப் பெற்ற போது அலீ (ரலி) யவர்களுக்குப் பத்து வயது. சிறு வயதிலிருந்தே அலீ (ரலி) யவர்கள் நபிகள் நாயகத்தின் வீட்டிலே வளர்ந்து வந்ததால் அவ்விருவரும் ஒருவர் மற்றவரை நன்கு அறிந்திருந்தனர். எனவேதான் துவக்க காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் அலீ (ரலி) யும் ஒருவராக விளங்கினார்கள்.

துவக்க காலத்தில் இஸ்லாத்தில் சேர்ந்தவர்களுள் அலீ (ரலி) யவர்களே மிகச் சிறுவயதினர், ஆயினும் அந்த இளைஞர்தான் இஸ்லாமியப் பிரசாரத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிக ஊக்கமும் உற்சாகமும் காட்டி வந்தார்கள்.

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல) தமது வீட்டில் ஒரு விருந்து நடத்தினார்கள். அதற்கு உறவினர்களை யெல்லாம் அழைத்திருந்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தின் செய்தியை எடுத்துக் கூறுவதற்காகவே அவ்விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்து முடிந்தவுடன் நபிகள் நாயகம் எழுந்தார்கள். அங்கு வந்திருந்தோர் அனைவரையும் நோக்கி "இங்கு வந்துள்ள உங்களுள் என்னைப் பின் பற்றவும், எனது நண்பனாகவும் சகோதரனாகவும் இருப்பதற்கும் விரும்புகின்றவர்கள் யாரேனும் இருக்கின்றீர்களா?" என்று கேட்டார்கள். உடனே கூட்டத்தில் நிசப்தம் நிலவியது. ஒரே யொரு சிறுவர் மட்டும் அக்கூட்டத்தின் மத்தியில் எழுந்து நின்றார். "நான் உங்களைப் பின்பற்றுவேன்" என்று உறுதியுடன் அவர் தெரிவித்தார். அந்த இளைஞர்தான் அலீ (ரலி). அக்கேள்வியை ஒரு தடவையல்ல; இரண்டு தடவையல்ல; மூன்று தடவைகள் திருநபி(ஸல்) கேட்டார்கள். மூன்று தடவையும் அந்த இளைஞர்தான் மறுமொழி கூறினார். மிகச் சாதாரண சிறுவர்களுள் ஒருவராய் விளங்கிய அலீ (ரலி) யவர்கள் இப்படிக் கூறியதைக் கண்டபோது மற்றவர்களெல்லாம் வியப்படைந்தனர். தாமே பிற்காலத்தில் இஸ்லாத்தின் மாபெருஞ் சக்தியாக விளங்கப் போகின்றவர் என்பதை அலீ (ரலி) அப்போதே நிரூபித்துக் கொண்டார்கள்.

மதீனா செல்லுதல்

மக்காவிலே நபிகள் நாயகமும் அவர்களின் தோழர்களும்

இஸ்லாத்தின் எதிரிகளால் எண்ணத் தொலையாத இன்னல்கள் இழைக்கப்பட்டனர். எதிரிகள் விளைத்த கொடுமைகளிற் பெரும் பகுதியை, அலீ (ரலி) யவர்களே அதிகமாக அனுபவிக்க வேண்டியதாயிற்று.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் மக்காவில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவரும் எதிரிகளின் துன்புறுத்தல் தாங்க வியலாமல் சிறு சிறு கூட்டமாகப் புறப்பட்டு மதீனாவுக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதல்லவா? அப்போது அலீயவர்கள் ஒரு முக்கியமான காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள்.

மக்காவில் வாழ்ந்த முஸ்லிம்கள் சிறு சிறு கூட்டமாகப் புறப்பட்டு மதீனாவுக்குச் சென்ற பின் நபிகள் நாயகத்துக்குத் துணையாக அவர்களுடன் பிரயாணம் செய்யும் பொருட்டு அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களும் மக்காவிலேயே தங்கி விட்டார்கள். அதே சமயத்தில் நபிகள் நாதரிடம் நாட்டுப் பொது மக்களால் நம்பிக்கையுடன் கொடுத்து வைக்கப்பட்டிருந்த பணத்தையும், பிற பொருள்களையும் அவைகளுக்கு உரியவர்களிடம் சேர்த்து விடும் பொறுப்பு அலீ (ரலி) யவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஆதலால், அலீ (ரலி) யவர்களும் மக்காவிலேயே சிறிது காலம் தங்கவேண்டியதாயிற்று.

எந்த ஊரின் பொது மக்களால் நபிகள் நாயகம் துன்புறுத்தப்பட்டார்களோ, அதே ஊர் மக்கள் தங்களுக்குச் சொந்தமான விலைமதிப்புள்ள பொருள்களையெல்லாம் பத்திரமான பாதுகாப்புக்காக நபி பெருமானிடம் கொடுத்து வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மக்கத்து மனிதர்கள் திருநபி யவர்களின் புதிய கொள்கையை விரும்பா விட்டாலும் அவர்களின் நாணயத்திலும் நேர்மையிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அலீ (ரலி) யவர்களுக்கு அப்பொழுது 23 வயது. ஒரு நாள் இரவு நபிகள் நாயகத்தின் வீட்டைச் சுற்றிலும் எதிரிகள் சூழ்ந்து கொண்டனர். அன்றிரவு விடியற் காலையில் திருநபி யவர்கள் தமது வீட்டை விட்டு வெளியேறி விடுவதென்று திட்டமிட்டிருந்தார்கள். அதனையறிந்த எதிரிகள் திரு நபி யவர்களை உயிருடன் விடக்கூடாது என்ற முடிவுடன் அன்று இரவு முழுதும் அங்கே காத்துக் கொண்டிருந்தனர். இவர்களின் திட்டத்தை யறிந்த நபிகள் நாயகம் தமது படுக்கையில் அலீ (ரலி)யை உறங்கச் செய்து விட்டு, அந்த இரவின் இருளில் எதிரிகளின் கண்களிற் படாதபடி வீட்டை விட்டு வெளியேறினார்கள். பொழுது புலர்ந்தது. வீட்டை முற்றுகையிட்டிருந்த எதிரிகள் நபி பெருமான் இல்லத்தினுள் நுழைந்

தனர்; நாயகமவர்களின் படுக்கையில் அலீ (ரலி) யவர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பும் திகைப்பும் ஏமாற்றமும் சொல்லுந் தரமல்ல. அலீ (ரலி) யவர்களின் மீது எதிரிகளுக்கு எவ்வித கோபமும் கிடையாது. அவர்களைத் துன்புறுத்துவதால் விரோதிகளின் குறிக்கோள் வெற்றிபெறப் போவதுமில்லை. ஆதலால் எதிரிகள் அலீ (ரலி) யவர்களுக்கு எவ்வித இன்னலும் விளைவிக்கவில்லை.

நாயகமவர்களைக் கொன்று, இஸ்லாத்தையும் அழித்துவிட வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன்தான் எதிரிகள் அன்றிரவு அங்கே வந்திருந்தனர். ஆனால் அவர்களின் குறி தவறிவிட்டதால் வெட்கமும் துக்கமும் தாங்கவியலாமல் திரும்பிச் சென்றனர்.

திருநபி யவர்களிடம் அமானத்தாக இருந்த பொருள்களையெல்லாம் அவைகளுக்கு உரியவர்களிடம் அலீ (ரலி) சேர்த்து விட்டார்கள். இக்கடமையை நல்லவிதமாக நிறைவேற்றியபின் அலீ (ரலி) யும் மதீனாவுக்குப் பயணமானார்கள். மதீனாவில் திருநபி (ஸல்) அவர்களுடன் அலீ (ரலி) யும் தங்கியிருந்தார்கள்.

மக்காவிலிருந்து மதீனாவில் குடியேறிய முஸ்லிம்கள் ஒவ்வொருவரும், மதீனத்து முஸ்லிம் (அன்ஸார்) ஒவ்வொருவருடன் சகோதரர்களைப்போல் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். அவ்வண்ணமே அலீ (ரலி) யவர்களும் நபி பெருமானுடன் சேர்ந்து வாழ்ந்தார்கள். ஆனால், ஸஹ்ல் இப்னு ஹனீபை எனும் மதீனத்து முஸ்லிமின் சகோதரராகவே அலீ (ரலி) வாழ்ந்து வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. (தொடரும்)

★ ★ ★

மகான் ஷைகு சஅதி

ஆர். பி. எம். கனி, பீ. ஏ. பீ. எல். எழுதியது. பக்கம் 229 சிறந்த சிந்தனையாளரும் ஓநவரும், உன்னத நீதிபோதனைகளை உலகுக்கு வழங்கியவருமான பாரசீகப் புலவர் சஅதி யவர்களின் வரலாற்றையும் குணாதிசயங்களையும் ஆசிரியர் எளியநடையில எழுதுவது இனிமையாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கிறது. இதனை எழுதி வெளியிடுவதற்கு இதன் ஆசிரியர் எடுத்துக்கொண்ட நீண்ட கால முயற்சி நிறையப் பயனுள்ளதாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. வாழ்வுக்கு அவசியமான அநேக அறிவுரைகள் இதில் இருக்கின்றன. இதன் பெரும் பகுதியும் சஅதி அவர்களின் புகழ்வாய்ந்த 'குலிஸ்தான்', 'போஸ்தான்' ஆகியவற்றின் மொழி பெயர்ப்பாக இருக்கிறது. இந்த இரண்டு தலைப்பிலும் வரும் விஷயங்கள் பலமுறை படித்து, மனத்தில் பதியச் செய்தால் பெரிதும் பயனடையலாம். நெறியான, நேர்மையான வாழ்வுக்கு வழிகாட்டும் நல்ல நூல்களில் இதுவும் ஒன்று. விலை ரூ. 2-12-0 ஆர். பி. எம். கனி, பீ. ஏ. பீ. எல். 128, மூர் தெரு, சென்னை-1.

[ஒவ்வொரு நாளும் அநேக அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர். எல்லாருடைய கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள்வியை அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால், பதில அளிக்கப்படாத கேள்விகளை நாம் மதிக்கவில்லை என அன்பர்கள் தவறாக நினைக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். புனை பெயருடன் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க வியலாது—ஆசிரியர்.]

எம். ஏ. ரஹ்மான், சிங்கப்பூர்

"கள்ளிலும் சூதிலும் தீமையும் உண்டு. நன்மையும் உண்டு. ஆனால் நன்மையைக் காட்டிலும் தீமையே பெரிதாக இருக்கிற" தென்று குர்ஆனில் கூறப்படுகிறது. மயக்கம் வராத அளவிற்குக் கொஞ்சமாக சாராயம் சாப்பிடலாமா?

"அதிகமாய்ச் சாப்பிட்டால் போதை யளிக்கும் எந்தப் பொருளையும் சிறிதளவு கூடச் சாப்பிடக் கூடாது" என்று திரு நபியவர்களே கூறியுள்ளார்கள். உயிருக்கு அபாயம் வருமென்ற நிலையில மருந்தைப் போல் சிறிதளவு சாப்பிடுவதில் குற்றமில்லை.

எஸ். எம். கமால், கொழும்பு.

"கடன் பட்டவர் கஷ்டநிலையில் இருந்தால், கடன் கொடுத்தவர் தமது பொருளைத் திரும்பப் பெறுவதை ஒத்திப்போடவேண்டும். அல்லது தானமாகக் கொடுத்துவிட்டால் நல்லது" என்று குர்ஆன் சட்டம் கூறுகின்றது. இவ்வளவு தாராள மனம் யாருக்கு வரும்?

ஏன் வராது? இவ்வளவு தாராள புத்தி இல்லாவிட்டாலும் இருக்கவேண்டும் என்று சொல்வதில் தவறில்லையே! குர்ஆன் கூறுவது ஒரு புதுமையாக இருக்கலாம் ஆனால் அதே சட்டத்தை 1937ல் சென்னை அரசாங்கம் செயலாற்றி யிருக்கிறது 1937ல் ராஜாஜி சென்னை அரசாங்கத்தின் முதலமைச்சராக இருந்த போது அவர் கொண்டுவந்த விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் இக் குர்ஆன் சட்டத்தைப் பின்பற்றியதுதான். இச் சட்டம் ஆயிரக் கணக்கான ஏழைக் குடியானவர்களுக்குப் புது வாழ்வு அளித்திருக்கின்றது. ஏழைகள் மீது இரக்கம் காட்டுங்கள் என்று இஸ்லாம் கூறுகிறது "இரக்கம் காட்டுவதற்குப் பதிலாக அவர்களின் கஷ்டம் தீரும் வரையில் பொறுத்திருக்க வேண்டும். அல்

ம்து" அனைத்தையும் தானமாக வழங்கிவிட்டால் உங்களுக்கு நல்லது என்று இஸ்லாத்தின் திருமறை கூறுகிறது இங்கே மனிதப் பண்புக்கு ஒரு அன்பழைப்பு விடுக்கின்றான் ஆண்டவன். அதனைச் சட்டமாக்கும் சந்தர்ப்பமும் உலகில் வரலாம் என்பதற்கு 1937ல் வந்த கடன் நிவாரணச் சட்டம் ஒரு அத்தாட்சி/ சுருங்கச் சொன்னால், "மனிதனே! ஏழைக்கு இரங்கு" என்பதுதான் இதன் பொருள்.

எம். அப்துல் ஹாதி, நாகை.

மக்கள் தொகை அதிகமாய் பெருகியுள்ள இக் காலத்திலும் சிறிய தந்தை மகளையும் தாயுடன் பிறந்த சகோதரி மகளையும் திருமணம் செய்து கொள்ளுகிறார்களே; முன் காலத்தில் மக்கள் கூட்டம் மிகக் குறைவாக இருந்ததால் இவ்வித திருமணங்கள் அனுமதிக்கப் பட்டிருக்கலாம். ஆனால் இக் காலத்துக்கு இது ஏற்றதல்ல என்றே நினைக்கிறேன்.

சிறிய தந்தையின் மகளையும் சின்னம்மா மகளையும் கலியாணம் செய்து கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ, அது வேறு விஷயம். ஆனால் அப்படி மணந்து கொள்வதில் குற்றமில்லை என்பதுதான் முக்கியம். எக்காலத்துக்கும் எல்லா இனங்களுக்கும் எக்காட்டவருக்கும் ஏற்றதான இஸ்லாமிய சட்டங்களில் எதையும் இக்காலத்துக்கு ஏற்றதல்ல என்று சொல்ல எம்மால் இயலாது. நாம் காணாத முற்காலத்துக்குப் பொருந்திய சட்டம் இனி வரும் காலத்துக்குப் பொருந்தாதென்று எப்படி சொல்ல முடியும்? இத்தகைய விவாகம் கூடுமென்பதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. ஆனால் உங்கள் வாதம் ஒன்றையே வைத்துக்கொண்டு பார்த்தாலும் எதிர்கால அணு யுகத்தில் வரும் கால மக்கள் தொகை குறைந்து விடாதென்பதற்கு என்ன ஆதாரம்?

எஸ். மும்தாஜ் பேகம்; கொங்குராயக்குறிச்சி.

கோஷாவைப் பற்றிப் பலர் பல விதமான விளக்கம் கூறுகின்றனர். கோஷா என்றால் கற்பைப் பாதுகாத்துக் கொள்ளும் முறை என்ற விளக்கம் எனக்குச்சரியானதாகத் தெரிகிறது. உங்கள் கருத்து என்ன?

"சிறை காக்குங் காப்பென் செய்யும்? மகளிர் நிறை காக்குங் காப்பே தலை" என்பதுதான் பர்தா முறையின் குறிக்கோள். ஒரு குறிக்கோளை அடைவதற்கு சில வழி முறைகள் உண்டு. அந்த வழியும் முறையுந்தான் பர்தா. சிலர் நினைப்பதுபோல் அது சிறைவாசமல்ல.

திருமணம்

ராமநாதபுரம் ஜில்லா அபிராமத்தைச் சேர்ந்த ஜனாப் ம. மு. முஹம்மது ஹுசைன் அவர்களின் புதல்வர் ஜனாப் முஹம்மத் அலி (மானா காதரலி) அவர்களுக்கும், ஜனாப் செ. அ. முஹம்மது அவர்களின் புதல்வி ஜனாபா பாத்திமா பீவிக்கும் 1376-ரஜப் பிறை 17ல் (18-2-57) திருமணம் நடைபெற்றது மணமக்களுக்கு அபிராமம் முஸ்லிம் மெய்விருத்தி சங்கத்தினர் வாழ்த்துரை வழங்கினர். வெளியூர்களிலிருந்து ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. வாழ்க மணமக்கள்!

எஸ். நூர்ஜஹான்,
சென்னை-8.

"ஏ. நபியின் மனைவிகளே! நீங்கள் மற்றப் பெண்களைப் போன்றவர்கள் அல்ல. நீங்கள் அல்லாவுக்கு அஞ்சியவர்களா யிருந்தால், அந்நிய ஆண்களுடன் நீங்கள் பேசும்போது நயமாகப் பேச வேண்டாம். நோய் பிடித்த இருதயங்களையுடையோர் தவறான விருப்பங்களைக் கொள்ளக்கூடும் ஆதலால், யதார்த்த வாதிகளைப் போல் (கண்டிப்பாகப்) பேசி விடுங்கள்." என்று குர்ஆனில் கூறப்படுகின்றது (33:32)

பிற ஆடவருடன் நபியின் மனைவிகள் நயமாகப் பேசக்கூடாது. கடுமையாகப் பேச வேண்டும் என்பதுதானே இதன் பொருள்? இதற்குக் காரணம் என்ன? அப்படியானால் மற்றப் பெண்கள் எப்படியும் பேசலாமா?

திருநபி யவர்களின் மனைவிகளுக்குரிய அறிவுரை எல்லா முஸ்லிம் பெண்களுக்கும் பொருந்தும். ஆண், பெண்களிடை இருதயத் தூய்மையும், இருபாலரிடையிலும் ஒழுக்க சீலமும் இருக்க வேண்டுமென்றே இந்த உத்திரவு பிறந்தது. பெண்கள் ஆண்களுடன் பேசக்கூடாது என்று கூறப்படவில்லை.

ஆண் பெண்களிடம் இயல்பாக இருக்கின்ற ஒரு பலவீனம் இதில் சுட்டிக் காட்டப்படுகின்றது. இதைத்தான் ஒரு வகையான நோய் என்று இறைவன் கூறுகின்றான். ஆண் பெண்கள் நெருங்கிப் பழகுவதாலும், நய மொழி பேசுவதாலும் இந்த நோய்-இன இச்சை-வெளிப்படும். இந்த நோய்க்கு இரையாகாமலிருக்க வேண்டுமாயின் பெண்கள் இப்படி யிப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று குர்ஆனில் கூறப்படுகின்றது முக்கியமாக நபிகள் நாதரின் மனைவிகளுக்கு இந்தஅறிவுரை வந்தது ஏன் என்றால், அவர்கள் அதிகமான மக்களைச் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. திருநபி யவர்களின் அரிய உபதேசங்களையும், குணாதிசயங்களையும் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக அவர்களின் மனைவிமார்களிடம் அதிகமான மக்கள் குழுமிக்கொண்டிருந்தனர். இதனால் தான் 'நீங்கள் மற்றப் பெண்களைப் போல் அல்ல' என்று இறைவனால் கூறப்பெற்றுள்ளது.

"கமால்"

பெரியாரின் மறைவு

தூத்துக்குடி ஜாமிஆ பள்ளிவாசல் பேஷ் இமாம் ஆலிஜனாப் மௌலானா மௌல்வி காஜி எஸ். ஷெய்கு ஆலிம் நூரிய்யி அவர்கள் தமது 38வது வயதில் 6-2-57 இரவு 11 மணிக்கு மாரடைப்பினால் மரணமடைந்தார்கள். 7-2-57 மாலை 6 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. உள்ளூரிலும் வெளியூர்களிலிருந்தும் முஸ்லிம்களும் இந்து கிறிஸ்துவ சகோதரர்களும் ஆயிரக் கணக்கில் மரண ஊர்வலத்தில் கலந்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர். ரவண சமுத்திரம் ஜனாப் எம். எம். பீர்முஹம்மது அவர்கள் மறைந்த பெரியாரின் பண்புகளையும், மார்க்கத் தொண்டுகளையும் குறித்துப் பேசினார்கள். பிறகு அன்னாரின் ஆத்மா சாந்தியுற பிரார்த்தனை செய்யப்பட்டது. (ந. நி)

ஆசிரியரும், வெளியிடுபவரும் எஸ். ஏ. ஷுக்கூர், 18 ராமசாமித் தெரு, சென்னை-1. அச்சிடுபவர் எம். எம். தணிகைமலை, செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை-1, தமிழ் நாடு.

1957 ஏப்ரல் முதல்

முஸ்லிம் முரசு சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	40 காசு [redacted]	50 காசு [redacted]
வருட சந்தா	ரூ. 4—50	ரூ 6—00
இரண்டு ஆண்டு	ரூ. 8—50	ரூ. 11-00
ஆறுமாதம்	ரூ. 2—50	——

உள் நாட்டு ஏஜெண்டுகள் கழிவு நீக்கி பிரதி 1க்கு 30 நயா பைசா வீதம் தேவையான பிரதிகளுக்கு ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் முன்பணம் அனுப்பி வைக்க வேண்டும்.

மானேஜர் :

முஸ்லிம் முரசு

18, ராமசாமித் தெரு மண்ணடி,

சென்னை-1. (தமிழ்நாடு)

'ஈத்' வாழ்த்து இதழ்கள்

நோன்புப் பெருநாளின் போது
நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும்
அனுப்புவதற்கு

கண்கவரும் வண்ணச் சித்திரங்களில் தயாரிக்கப் பெற்ற
நோன்புப் பெருநாள் வாழ்த்து இதழ்கள்.

உரைகளுடன் 1 டஜன் விலை ரூ. 1—4—0

,, 100-க்கு விலை ரூ. 9—8—0

தபால் செலவு தனி.

முஸ்லிம் முரசு,

18, ராமசாமித் தெரு, மண்ணடி,

சென்னை - 1.

ங்களின் நெடுநாள் விருப்பத்தை நிறைவேற்ற

பரீதா

ாவா பத்தை கைலிகள்

கண்கவர் வர்ண கலர்களில்
இப்பொழுது கிடைக்கிறது

பரீதா ஜாவாபத்தை பேப்ரிக்,
சங்கரம்பந்தல் (தஞ்சை ஜில்லா)